மலாய்-10 சதம் பர்மா-0-1-6 இலங்கை 7 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4 ஓசை 28 | சென்னை—பிரமாதி௵ வைகாசி௴ 7௨ ஞாயிற்றுக்கிழமை (21—5—39) | விலை ஒரு அணா

அடுத்த ராஜகோட்?

திருவாங்கூர் அரச குடும்பத்தினர்; முதல் வரிசையில் இடதுபுறமிருப்பது, திருவாங்கூர் மகாராணி சேது பார்வதி பாய்; வலதுபுறமிருப்பது திருவாங்கூர் மன்னர்.

கீழே இடதுபுறமிருப்பது மன்னரின் சகோதரி, இளவரசி கார்த்திகை திருநாள்; இடதுபுறமிருப்பது இளைய ராஜா. இவர்கள் மிகவும் நல்லவர்கள்; பிரஜைகள்மீது அன்புகொண்டுள்ளவர்கள்.

மத்தியில் இருடபதுதான் திருவாங்கூர் தீவான், சர். சி. பி. ராமசாமி ஐயர். திருவாங்கூர் பொறுப் பாட்சிப் போராட்டத்தை அடக்கி, ஒடுக்கி, நசுக்கிவிடப்போவதாக ஜம்பம் பேசுகிறவர்.

தற்போது ராஜகோட் பொறுப்பாட்சிப் போராட்டத்தில் மகாத்மா கவனஞ் செலுத்தி வருகிறார். அவர் திருவாங்கூரையும் மறந்துவிடவில்லை. திருவாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்களைக் கலந்தாலோசிக்கும் நோக்கத்துடன், அவர்களை ராஜகோட்டுக்கு வரும்படி அழைத்திருக்கிறார். முடிவு என்னவாகுமோ தெரியவில்லை. திருவாங்கூர் அடுத்த ராஜகோட் நிலைமைக்கு வருமா? பொறுத்துப் பார்ப்போம்.

இந்தியாவின் உயிர் நாடி போன்றது விவசாயம்

அந்த விவசாயத்துக்கு உயிர் கொடுப்பது எப்படி?

இந்தியரால்
இந்தியர் மூலதனத்தால்
இந்தியர் உழைப்பால்

உற்பத்தி செய்யப்படும் ரொட்ரிக்ஸ் - - - - கம்பெனியாரின்

இயற்கை உபாபஸ் எருக்களை

உபயோகிப்பதே அதற்கு வழி

சுலப்பை மார்க் இயற்கை உரம்

இந்த உரத்தை
உபயோகித்து
உங்கள் மாசூலைப்
பெருக்குங்கள்.

*

எங்கள் உரத்தை
விற்பனை செய்வதற்கு
முக்கியமான இடங்களில்
ஏஜண்டுகள் தேவை:—

விவரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்

ரொட்ரிக்ஸ் & கம்பெனி, போன் மில்ஸ், கடம்பூர் S. I. Ry., (திருநெல்வேலி ஜில்லா)

எ. எஸ். டி. எப். ரொட்ரிக்ஸ், காட்பாடி போன் மில்ஸ், காட்பாடி M. S. M. Ry., (வட ஆற்காடு ஜில்லா)

வாரங்கால் போன் மில்ஸ், வாரங்கால் (நிஜாம்)

வால்டயர் போன் மில்ஸ், வால்டயர் (B. N. Ry.,)

இன்னமும் தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கியமான ஊர்களிலும் பிராஞ்சுகள் உண்டு.

இனும்! இனும்!! இனும்!!!

காம சாஸ்திரம்

தேக சுகத்தையும், தீர்க்காயுளையும் அடைவதற்கு ஓர் சிறந்த வழி காட்டி இன்றே வாசியுங்கள். கேட்பவர்களுக்கு இனுமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும். உங்களுடைய விலாஸத்தை உடனே தெரிவியுங்கள்.

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,

26 பிராட்வே, மதராஸ்.


இரும்புபெட்டி

ஸ்தாபிதம் 1914 டெலிபோன் நெம்பர் 2224

புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், நடராஜன் இன்ஜினீரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

பி. நடேசமுதலியார்

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள், இதர மிஷனெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.

59, பிராட்வே, மதராஸ்.

மாவு மில்


அரிசி அல்லர்

சீயக்காய் மில்

சொக்கநாதன் * தொடர் கதை

-: அரசர் சபதம் :-

தஞ்சைமீது, மதுரை அரசர் சொக்கநாதன் படையெடுத்துவந்த செய்தி, தஞ்சை அரசருக்கு எட்டியது; தஞ்சை தளகர்த்தர் முதல், தஞ்சை அரண்மனையிலிருந்த சகலரும் அறிந்துகொண்டார்கள். சொக்கநாதனை எதிர்த்து சண்டைசெய்து ஜெயிக்க முடியாதென்பதை அனைவரும் அறிந்திருந்தார்கள். ஆகவே, சொக்கநாதனுடன் சமரசஞ்செய்துகொள்ளுவதே நல்லதென்று பலர் அபிப்ராயப்பட்டனர்; தஞ்சை அரசருக்குக்கூட, மதுரை அரசருடன் சமரசஞ் செய்துகொள்ளுவதே நல்லதென்று தோன்றியது. ஆனால், அவர் ஏற்கனவே தஞ்சை ராணிக்குக் கொடுத்த வாக்குறுதியை எண்ணி சமரசஞ்செய்துகொள்ள விரும்பவில்லை. கமலமும், தஞ்சை இளவரசி மோகனவும், அரசருக்கு அதே யோசனை சொன்னார்கள். அரசர் பிடிவாதமாக இருந்தார்.

ஆனால், யுத்தம் வருவது, தஞ்சை ராணிக்கும், அவள் தம்பி அங்கப்பனுக்கும், துர்மந்திரி ரஞ்சிதத்துக்கும் கொண்டாட்டந்தான்! யுத்த காலத்தில் அவர்களுடைய வஞ்சக எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளக் கருதினார்கள். அங்கப்பனுக்கு, தஞ்சை அரசராக வர எண்ணம்; தஞ்சை ராணிக்கோ, மதுரையை மங்கம்மாள் ராணி ஆட்சி செய்ததுபோல், தஞ்சைக்கு அவள் ஒரு மங்கம்மாளாகவேண்டுமென்ற ஆசை. ரஞ்சிதமோ, அங்கப்பனை மணந்து, தஞ்சைக்கு அரசியாக வர மனக்கோட்டை கட்டினாள். இவர்கள் எல்லாரும், தஞ்சை அரசர் வம்சத்தையே கருவறுக்க யோசனை போட்டுக்கொண்டிருந்தார்கள். தஞ்சை அரசரோ, இவர்கள் சதி என்னவென்பதை அறியமாட்டார். அவர் ராணியின் மாய வலையில் சிக்கி, அவளுக்கு ஆதியில் கொடுத்த வாக்குறுதியை எண்ணி, எண்ணி, மனம் வாடினார். அந்த வாக்குறுதியினின்றும் பிறழ அவர் மனம் இசையவில்லை. வாக்குறுதியை மீறுவதிலும், யுத்தகளத்தில் மடிந்து ஒழிவதே மேலென்ற ஓரே உறுதியுடனிருந்தார். அவர் ஒழிவதோடு மட்டுமல்ல; தஞ்சை அரசர் வம்சத்தையே அவருடன் ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டார். அங்கப்பனுக்கு, மோகனவைக் கலியாணஞ் செய்து கொடுக்க அவர் ஆதியில் ஒப்புக் கொண்டிருந்த போதிலும், வர வர அவர் மனப மாறுபட்டு வந்தது. அங்கப்பனையும், தஞ்சை ராணியையும் அவர் வெறுத்தார். அங்கப்பனுக்கு, மோகனவைக் கலியாணஞ் செய்து கொடுப்பதிலும், அவனை உயிரோடு பலி கொடுத்து விடுவது மேலென்று எண்ணினார். இந்த எண்ணத்துடன் அவர் மோகன அறையிலிருந்து வெளியேறிச் சென்றார். அவருக்காகக் கொலு மண்டபத்தில் தளகர்த்தர்கள் காத்திருந்தும், அவர் நேரடியாகக் கொலு மண்டபத்துக்குச் செல்லவில்லை. அவருடைய அறைக்குச் சென்றார்; சிறிது நேரம் உட்கார்ந்து ஆலோசித்தார். எதிர்காலம் எப்படி இருக்குமென்று அவர் புத்திக்குத் தோன்றவில்லை எல்லாம் இருளாகவே இருந்தது. ஆகவே, அவர் ராணியின் அந்தப்புரத்துக்குச் சென்று, அவளுடைய அந்தரகக அறையில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்.

இந்நேரத்தில்தான் ராணியும், அங்கப்பனும், ரஞ்சிதமும் ராணியின் அறையிலிருந்து சதி செய்து கொண்டிருந்தார்கள். தஞ்சை அரசரையும், இளவரசரையும், மோகனவையும் அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று, ரஞ்சிதம் ராணிக்கு யோசனைகூறினாள். இந்த யோசனை—கொடுஞ் செயல்—ராணிக்குத் திகிலை உண்டுபண்ணிய போதிலும், அதிகார வெறி அவளைச் சும்மா விட்டுவிடவில்லை. ராணி மங்கம்மாளைப் போல், அவளும், தஞ்சைக்கு ஒரு மங்கம்மாள் ஆக வேண்டுமென்ற பேராசையில் வசப்பட்டாள். ரஞ்சிதத்தின் யோசனையைப் புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்டாள். ஆனால், அவள் செய்ய எண்ணிய கொடுஞ் செயல்கள் அவள் மனதை இடித்துக் கூறியன. ஆகவே, தஞ்சை ராணி, ரஞ்சிதத்துடன் அதிகம் பேசவிரும்பவில்லை; அவளுக்கு உத்திரவு கொடுத்து அனுப்பிவிட்டு, ராணி அவளுடைய அந்தரங்க அறைக்குச்சென்றாள். மதுரை சொக்கநாதனை எதிர்த்துச் சண்டை செய்ய அரசரைத் தூண்டவேண்டுமென்பதே அவளுடைய ஓரே சிந்தனையாக இருந்தது. அரசரை எப்படிசந்திப்பது, எவ்வாறு அரசரைத் தூண்டுவது என்ற எண்ணத்துடன் அவளுடைய அந்தரங்க அறைக்குள் நுழைந்தாள்.

அந்தரங்க அறைக்குள் நுழைந்ததும், ராணி திடுக்கிட்டுப்போனாள். அவள் மூளை தீப்பற்றி எரிவது போலிருந்தது; மனம் படபடவென துடித்தது; முகத்தில் விபர்வை கொட்டியது. கால்கள் தள்ளாடின; நிற்கவும் முடியாமல் சோபாவில் பொத்தென்று விழுந்தாள். ஏனெனில், அவளுடைய அந்தரங்க அறையில், அவள் எதிர் பாராமல் தஞ்சை அரசர் உட்கார்ந்திருக்கக் கண்டாள். தஞ்சை அரசர் கொலு மண்டபத்தில் இருப்பாரென ராணி எண்ணினாள். அவர் அவளுடைய அந்தரங்க அறையிலிருப்பாரென அவள் நினைக்கவே இல்லை மேலும், ராணியும், அங்கப்பனும், ரஞ்சிதமும் சற்று நேரத்திற்குமுன் சதி செய்துகொண்டிருந்ததை அரசர் கேட்டிருப்பாரோவென்ற சந்தேகமே ராணியின் நடுக்கத்துக்கு முக்கிய காரணம். அரசர் அந்தச் சதிகளை அறிந்திருந்தால் அவள் கதி என்னவாகுமோவெனப் பயந்தாள்.

ராணியின் பயத்தையோ, முகமாற்றத்தையோ, நடுக்கத்தையோ தஞ்சை அரசர் கவனிக்கவில்லை. அவர் எப்பொழுதும் போல் புன்சிரிப்புடன் ராணியை வரவேற்றார்.

"என்ன! உனக்கு உடம்பு சரியாக இல்லையா? ஏன் உன் முகம் வாட்டமுற்றிருக்கிறது?" என்று அன்புடன் கேட்டார் அரசர்.

அரசரின் வார்த்தை ராணிக்கு நாராசம் போலிருந்தது. அரசரின் அன்பான வார்த்தைகள் அவள் இருதயத்தை அம்புகள் போல் நறுக்கெனக் குத்தின. ராணிக்கு இன்னது பதில் சொல்லுவதென்று தெரியவில்லை.

"இல்லை......ஒன்றுமில்லை....தலைவலி!...ஆம் ஒரு...விஷயம் கேள்விப்பட்டேன்....அதிலிருந்து...உம்.....உம்..." என்று ராணி இழுத்தாள்.

"தலைவலியா?......அப்படியானால் படுத்துக்கொள்...நான் உன்னிடம் ஒரு யோசனை கேட்க இங்கு வந்து காத்திருந்தேன்...அதிருக்கட்டும்....ஒரு விஷயம் கேள்விப் பட்டதாக கூறினாயே?......அது என்ன?......என்ன விஷயம்?..."

"இல்லை......நீங்கள் அறியாத விஷயமல்ல..."

"அது என்ன?...சொன்னாலல்லவோ தெரியும்..."

"இல்லை...உம்...மதுரை அரசன் சொக்கநாதன்...தஞ்சைமீது படையெடுத்து வருகிறானே?...மெய்தானா?..."

"மெய்தான்...அதற்கு என்ன? மதுரை அரசர் தஞ்சைமீது படையெடுத்து வருவது உண்மை. அவர் படையெடுத்து வருவதில் ஒன்றும் தவறு இல்லை...நியாயமாகவே படையெடுத்து வருகிறார்..."

"நியாயமாகவா?...அவன் அயோக்யன்...முறை கெட்டவன்...அவனுடைய ராணுவத் திமிர்...தஞ்சையை என்னமோ கிள்ளுக் கீரையென்று நினைத்துக்கொண்டிருக்கிறான் போலும்! அவனை...அந்தச் சொக்கநாதனை..." என்று ராணி கண்களில் தீப்பொறி பறக்க, ஆவேசத்துடன் கூறினாள். அரசர் சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு ஆத்திரம்வந்தது; என்றாலும், அவர் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

(அடுத்த பக்கம் பார்க்க)

இலங்கை, "தமிழ் மணி" வாசகர்கட்கு அறிவிப்பு.

இது நல்ல சமயம்.

பழனி, வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை

தீராத ரோகங்களை எல்லாம் தீர்த்து உலகமெங்கும் நல்ல புகழும் கீர்த்தியும் பெற்றவர் என்பது உலகப் பிரசித்தம். அவரை இலங்கைக்கு வந்து தங்கள் தங்கள் ரோகங்களை தீர்க்க வேண்டுமென அநேக கனவான்கள் வேண்டியதற்கேற்ப தமது குமாரரும், சென்னை தமது பிராஞ்சு வைத்தியசாலை டாக்டருமான சிவசுப்ரமணிய பிள்ளையை அனுப்பியிருக்கிறார். அவர் மே-மீ 22உ முதல் ஆடிவேல்வரை இலங்கையின் பிரதான பட்டணங்களான கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி நுவரேலியா முதலிய பகுதிகளில் முகாம் செய்து ரோகிகளை நாடிப்பரீக்ஷைசெய்து தக்க மருந்துகளைக் கொடுத்து வியாதிகளை சொஸ்தம் செய்வார். இந்த நல்ல சமயத்தை இலங்கை வாழ் "தமிழ் மணி" வாசகர்கள் பயன்படுத்தி குணம் பெறுவார்களாக.

(வி—ம்)

-: அரசர் சபதம் :-

(முன் பக்கத் தொடர்ச்சி)

“நீ சொக்கநாதனைப்பற்றி இவ்வளவு மோசமாகப் பேசக்கூடாது; மதுரை அரசர் சொக்கநாதன் யாரென்பது உனக்குத் தெரியாது... அவர் எப்பேர்ப்பட்ட வீரர், நீதி வழுவாத அரசர் என்பதும் உனக்குத் தெரியாது...மேலும்,... மேலும், அவர் என் மருமகன் என்பது ஞாபகமிருக்கட்டும்...”

“மருமகன்தான்!...ஆனல், அவர் நீதியும், வீரசூரத்தனமும், அவர் படையெடுத்துவரும் யோக்யதையும் தெரியவில்லையா?...”

“அவர் படையெடுத்து வருவது எதற்காக?...”

“மோகனைவைக் கலியாணஞ் செய்து கொடுக்கவில்லையென்ற காரணத்துக்காகத்தான் அந்தப் பித்துப் பிடித்த காம வெறியின்...”

“அறியாமையால் பிதற்றுதே! உன் பெண் புத்தி தெளிவாகிவிட்டது...நிறுத்து...” என்று அரசர் கோபத்துடன் கூறினர். இதுவரையில் அரசரை, ராணி இஷ்டப்போல் ஆட்டிவைத்து வந்தாள். அரசர் கோபத்துடன் பேசினதைக் கேட்டதும் திடுக்கிட்டுப்போனள்; அரசரின் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள். அவள் தேகம் வெலவெலுத்துப் போயிற்று. ஒன்றும் பேசாமல் தரையை நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அரசர் ராணியின் நிலைமையைக் கவனித்தார்.

“சொக்கநாதனை மனதில் வந்தபடி நிந்திக்காதே...அவர் நல்லவர்... போகனைவைக் கலியாணஞ் செய்து கொள்ளுவதற்காக அவர் படையெடுத்து வரவில்லை...அவருடைய தூதுக் கோஷ்டியையும், அந்தத் தூதுக் கோஷ்டிக்குத் தலைமை வகித்துவந்த வீராதி வீரர், வயது முதிர்ந்த தளகர்த்தர், வீரசிங்கனையும் தஞ்சை சதிகாரர், சண்டாளர்—என் குலத்தைக் கெடுக்க வந்த பாதகர்—அவமதித்து அவர் உயிருக்கே உலை வைக்கச் சூழ்ச்சி செய்ததால், சொக்கநாதன், தஞ்சைமீது பழிக்குப் பழி வாங்கப் படையெடுத்து வருகிறர்...அவர் செய்தவது சரி, நீதி என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்......அவருடைய இடத்தில் நான் இருந்திருந்தால், அவரைப் போலவே படையெடுத்தே வந்திருப்பேன். இதில் அயோக்யத்தனம் ஒன்றுமே இல்லை” என்றுர் அரசர். அவர் தஞ்சை சதிகாரர்களைப் பற்றிக் குறிப்பிட்ட வார்த்தைகள், தஞ்சை ராணியின் தலையில் பெரிய கல்லைத் தூக்கிப் போட்டதுபோலிருந்தன. அந்த வார்த்தைகளைக் கேட்டதும் தஞ்சை ராணியின் தலை விர்ரென்று சுற்றியது; கண்களை மூடிக்கொண்டாள். அவள் உதடு துடித்தது; பதில் பேசாமல் ஒரு பொம்மையைப்போல் உட்கார்ந்திருந்தாள். அரசர், ராணியின் நிலைமையைக் கவனித்தார். அவள் உடம்பு சரியாக இல்லையென்று நினைத்து, அவளை சிறிது நேரம் சிரம பரிகாரஞ் செய்துகொள்ளும்படி கூறிவிட்டுப் போகப் புறப்பட்டார்; ராணி கண்களைத் திறந்தாள்.

“போகவேண்டாம்...சற்றுப் பொறுங்கள்...சொக்கநாதனை நான் கடிந்து பேசியதற்கு மன்னியுங்கள்... நான் விஷயம் தெரியாமல் அவ்விதம் கூறிவிட்டேன்.”

“பாதகமில்லை......சொக்கநாதன் நிலைமையில் யாரும் அவரைப்பற்றிக் குறை கூறத்தான் செய்வார்கள். என்மீதும், தஞ்சைமீதுமுள்ள அன்பால் நீ அவ்வாறு கூறியிருக்கலாம்...அதை நான் ஒரு குற்றமாகக் கருதவில்லை...”

“நீங்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்!...தஞ்சையை ஆபத்து சூழ்ந்திருக்கிறது...தஞ்சையைப் பாதுகாக்க ஏதேனும் செய்தாகவேண்டும்...சொக்கநாதனை எதிர்த்துப் போர் செய்வதென்றல்...”

“எதிர்த்துப் போர் செய்யவே போகிறேன்...”

“ஆனல், நமது படை வலிமை, ஆயுத வலிமை என்ன?...சொக்கநாதன் படைகளோ?”

“அதை நான் அறிவேன்...என்றாலும், யுத்தஞ் செய்தே தீருவேன்...”

“தோல்வியடைந்தால்.......நமது கதி...”

“அடியோடு அழிய வேண்டியதுதான்...”

“ஏன்?......சமரசத்துக்கு வழி இல்லையா!...”

“அப்டி ஏதேனும் வழி இருக்கிறதா? அந்த வழியை நீயே கூறு; அவ்வித யோசனை கேட்கவே உன்னிடம் வந்தேன்...”

“வழியென்ன?...எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை......உங்கள் யோசனைதான் என்ன?...”

“யுத்தம்...யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை..”

“உங்கள் உயிர்!...இளவரசர்... இளவரசி மோசன இவர்கள் கதி என்னவது?......நான்......நான்.... தஞ்சை...”

“எல்லோரும் மடியவேண்டியதே! தஞ்சையும் அதோகதியாக வேண்டியதுதான்...நமக்குப்பின் சொக்கநாதன்...தஞ்சையை நன்கு ஆட்சி செய்வார்...அந்தப் பயம் நமக்கு வேண்டாம்...”

“தஞ்சையை சொக்கநாதன் ஆட்சி செய்வதா?...ஒருபோதும் விடக் கூடாது...தஞ்சை மக்கள் அனைவரின் உயிர் போனலுஞ்சரி, தஞ்சையை மற்றெருவர் ஆட்சி செய்ய அனுமதிக்கக் கூடாது...... அதுவே எனது தீர்மானம்...”

“அப்படியானல், சொக்கநாதனுக்குப் பணிந்து, சமரசஞ் செய்துகொள்ளவேண்டியதுதான்...அதற்கு நீ தயாரா?...

“இல்லை......பணிவது கேவலம்; வேறு வழியில்லையா?...”

“வேறு வழி யுத்தந்தான்!...”

“ஏன்? இன்னெரு வழி எனக்குத் தோன்றுகிறது...”

“அது என்ன?...நேர்மையான வழியாக இருந்தால் அதற்கு ஒப்புக்கொள்ளத் தயார்...”

“உங்கள் வாக்குறுதிப்படி மோகனைவை, அங்கப்பனுக்குக் கலியாணஞ் செய்துகொடுத்து, அவனைத் தஞ்சைக்கு முடி சூட்டிவைத்துவிடுங்கள்....அதன்பின்.....சொக்கநாதனுடன்...”

“என்ன!...என்னசொன்னுய்?... அது ஒருபோதும் முடியாத காரியம்...அதற்கு நான் ஒருப்படமாட்டேன்...”

“உங்கள் வாக்குறுதி எங்கே?... உங்கள் வாக்குறுதியை மீறப்போகிறீர்களா?...”

“உயிரே போயினும் என் வாக்குறுதியை மீறப்போவதில்லை... அதற்காகவே யுத்தத்துக்குப் புறப்படுகிறேன்......யுத்தஞ்செய்துதான் தீருவேன்...யுத்தத்தில் நான் மடியப்போவதும் நிச்சயம்...என் வம்சம் மடிந்து, அழியப்போவதும் நிச்சயம்! என் மனே உறுதியை மாற்ற அந்த ஆண்டவனலும் முடியாது! என் வாக்குறுதியை மீறி விடுவேனென்று, நீ கனவிலும் கருதாதே...”

“உங்கள் வாக்குறுதி...ஆர்... மோகனைவை என் தம்பி அங்கப்பனுக்கு...”

“அங்கப்பனைத் தவிர வேறு யாருக்கும்.....மோகனைவைக் கலியாணம் செய்து கொடுக்கமாட்டேன்....தெரிந்ததா?...”

“அதை ஏன் இப்பொழுதே செய்யக் கூடாது?...”

“இந்த யுத்த சமயத்திலா?...உயிருக்கு ஆபத்து சூழ்ந்திருக்கும் இந்த நெருக்கடியிலா?....இல்லை...இல்லை... யுத்தம் முடிந்து, நாம் ஜெயம்பெற்று உயிருடன் இருந்தால்...”

“நாம் ஜெயம்பெற முடியாது... நமக்குத் தோல்விதான்; ஆதலால் இப்பொழுது...”

“தோல்வி யென்றுல் எல்லோரும் மடிவதே நியாயம்”

ராணிக்கு அதற்குமேல் பேச நா எழவில்லை. அவள் கட்டிய மனக்கோட்டையில் மண் விழுந்தது அந்தக் கோட்டை அவள் கண்ணெதிரிலேயே படல் படலாக உதிர்ந்து விழுவதைக் கண்டாள். அரசருக்கு, இதற்குமேல் அங்கு தங்கியிருக்க விருப்பமில்லை. ராணியின் நோக்கத்தைத் தெரிந்து கொண்டதும், உடனே கொலு மண்டபத்துக்குப் போக எழுந்தார். இந்நேரத்தில் அரசரின் அந்தரங்கக் காரியதரிசி ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து அரசரிடம் கொடுத்தான். அரசர், கரங்கள் நடுங்க அந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தார். பெருமூச்சு விட்டார்; சோர்ந்து மீண்டும் சோபா மீது சாய்ந்தார்.

(தொடரும்)

மதராஸ் டி. சி. என்.
கோல்டன் மேடல் ஜ்வேலரி மார்ட்
பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.
கறுக்காது.
2 வரு உத்திரவாதம், மிகவும் அழகாக இருக்கும்
பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 300
மத்திய சைஸ் 1¾'' முதல் 2''க்குள் ஜதை ரூ. 280
குழந்தை சைஸ் 1¾-க்கு உட்பட்டது ஜதை ரூ. 200
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணு 8
அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இங்கியால் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்
டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ.
280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் மதராஸ்.
குறிப்பு:-“தமிழ் மணி” பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.
2 அணு பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனும்.
குறிப்பு:—ஸிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணு 12. மலேய நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

V. ARUMUGA CHETTY
போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது
விநாயகர் மார்க்கு சுருட்டுகள்
வீ. ஆறுமுக செட்டியார், நெ. 13, அண்ணுபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

மனோரதம்

இரு எம தூதுவர்!

பெரிய மண்டைகள் எங்கே?

அறிவுச் சுடர்களை காணோம்!

தீக்கோழி மூடப் புத்தி

ஹிட்லர்; இவருக்கு ஒரு யுத்தத்தை நடத்தத் தைரியமில்லை. என்றாலும் ஐரோப்பாவையே மிரட்டிக் கொண்டிருக்கிறார்.

என் மனோரதத்தில் ஆகாய மார்க்கமாகப் புறப்பட்டேன். ரதம் அதிவேகமாகச் சென்றது; ஆகாயத்தில் அதிக தூரம் பறந்தது. பூமியிலிருந்து சுமார் 27 அல்லது 30 மைல்களுக்கு உயரத்தில் காற்றுக் கிடையாது; அங்கு சென்றால் மூச்சுத் திணறி மடிய வேண்டியதுதான் என்று சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. ஆனால், எனக்கு அந்தவிதமான கஷ்டங்கள் எதுவும் ஏற்படவில்லை. என் மனோரதத்துக்குக் காற்றோ, மழையா, வெயிலா, இழவா எதுவுமே லட்சியம் கிடையாது. ஆகவே, தங்கு தடையின்றி ஐரோப்பா போய்ச் சேர்ந்தேன். ஐரோப்பா வெங்கும் ஒரு சுற்றுச் சுற்றி வந்தேன். எங்கு பார்த்தாலும் யுத்தப் பேச்சு; எங்கும் யுத்த பயந்தான்! எல்லா நாடுகளும் யுத்த தளவாடங்களையும், ராணுவங்களையும், விமானங்களையும் சேகரிப்பதிலேயே மும்முரமாக இருக்கின்றன. ரஷியாவில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரே விமான மயம்! ராணுவமும் அப்படியே. போலந்து, ஜெர்மனி எல்லைப் புறங்களில் ராணுவங்களும், விமானங்களும், பீரங்கி, துப்பாக்கிகளும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. சிறு தேசங்கள் ரொம்பச் சுறுசுறுப்பாக இருக்கின்றன. ஏன்? யுத்தத்துக்குப் பயந்து, அந்தச் சிறு நாடுகளெல்லாம் தற்காப்புச் செய்வதில் வெகு அக்கறை எடுத்துக்கொள்ளுகின்றன. மொத்தத்தில் ஐரோப்பாவின் நிலைமை எனக்குப் பிடிக்கவில்லை. ஐரோப்பா, பழைய ஐரோப்பாவல்ல; உலகத்துக்கு நாகரிகத்தைக் கொடுத்ததாகப் பெருமையடித்துக்கொண்ட ஐரோப்பா அல்ல. அக்காலத்தில் காட்டு மிராண்டிகள் வசித்த, பழைய ஐரோப்பா நிலைமைக்கு அது வந்துகொண்டிருக்கிறது. காட்டு மிராண்டிகளைப் போலவே ஐரோப்பியர் ஒருவரையொருவர் கொன்று, பழிவாங்க நினைக்கிறார்கள். ஜெர்மனியிலும், இதாலியிலுந்தான் இந்தக் காட்டு மிராண்டித் தனமான எண்ணம் உச்சி நிலையடைந்திருக்கிறது. அங்கு பெரிய மண்டைகள் எதையும் காணோம்; பெரிய மண்டைகளென்றால் அளவில் அல்ல; மூளையில் பெரிய மண்டையென்பதையே நான் குறிப்பிடுகிறேன்.

* * *

இதாலியிலும், ஜெர்மனியிலும் எத்தனையோ மேதாவிகள் இருந்தார்கள். சங்கீதம், கணிதம், வான சாஸ்திரம், ரசாயனம், விஞ்ஞானம் முதலிய சாஸ்திரங்களில் பேர் பெற்ற பல மண்டைகளிருந்தன. பெரிய ராஜ தந்திரிகள், பொருளாதார நிபுணர்கள் இருந்தார்கள். அவர்களில் பலரைக் காணோம். அவர்கள் எங்கே, எங்கே சென்றார்கள்? அவர்களைச் சுட்டுப் பொசுக்கி விட்டார்கள். எமதூதர்கள் போல், ஹிட்லரும், முஸோலினியும், ஜெர்மனியிலும், இதாலியிலும் இருக்கும்போது, அறிவாளிகளுக்குப், நிபுணர்களுக்கும் அந்தத் தேசங்களில் இடமேது? பலர் உயிரோடு புதைக்கப்பட்டனர்; பலர் நாடுகடத்தப் பட்டனர். சிலர் போனஇடமே தெரியாது. இவ்வாறு, ஜெர்மனியிலும், இதாலியிலுமுள்ள பலமேதாவிகள் மாயமாக மறைந்தனர்! அந்த நாடுகளில் இன்று மூடப் பிரகஸ்பதிகளும், இரத்த வெறி பிடித்த சர்வாதிகாரிகளும், அவர்களுக்கு வால்பிடிக்கும் கோபல்ஸ், கோரிங், கயாடா, சியானோ போன்ற காட்டுமிராண்டிகளுமே நிறைந்திருக்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள பல அறிவாளிகள், அமெரிக்காவில்போய் தஞ்சமடைந் திருக்கிறார்கள். ஐரோப்பாவின் அறிவுச் சுடர்களெல்லாம் அந்நிய தேசமாகிய அமெரிக்காவில் ஒதுங்கிக் கிடக்கின்றன. இனிமேல், ஐரோப்பாவல்ல, அமெரிக்காவே அறிவின் களஞ்சியமாக விளங்கும்; அமெரிக்காவே அறிவின் சுடராக விளங்கினாலும், விளங்கலாம். உதாரணமாக, பேர்பெற்ற ஜெர்மன் வான சாஸ்திரி ஐன்ஸ்டெய்ன், இணையற்ற எழுத்தாளர். தாமஸ் மேன், புகழ்வாய்ந்த இதாலி சங்கித நிபுணர் டோஸ்கானனி, ரஷிய பொக்கிஷம் ராச்மானினுப் முதலியோர் இன்று அமெரிக்காவிலிருக்கிறார்கள். இவர்களைப்போன்ற இன்னம் எத்தனையோ மேதாவிகள் அமெரிக்காவையே அவர்கள் தாய் நாடாகக் கருதி, அங்கேயே ஜாகை வைத்து விட்டார்கள். இனிமேல் ஐரோப்பாவை இருள் சூழ்ந்து கொள்ளுமென்பதில் சந்தேகம் வேண்டாம்; ஐரோப்பாவின் இந்த நிர்கதிக்குக் காரணஸ்தர், யார் தெரியுமல்லவா? புண்ணியவான்களான ஹிட்லரும் முஸோலினியுந்தான்; அந்தப் புண்ணிய மூர்த்திகளும், நாடு பிடிக்கும் பேராசை கொண்ட யுத்த வெறியர்களும், ஐரோப்பிய ஓநாய்களும் கண்ணை மூடினால், ஒருவேளை ஐரோப்பாவுக்கு நல்ல காலம் பிறக்கலாம்; இன்றேல், ஐரோப்பா அநாகரிகர் நிறைந்த, காட்டு மிராண்டிகளின் தேசமாக மாற வேண்டியதுதான். ஹிட்லர், முஸோலினி, போன்றவர்கள், அவர்கள் ஆயுத பலத்தைப் பற்றி சதா குலைத்துக்கொண்டிருக்கிறார்கள். கோபல்ஸ், கயாடா, கோரிங், சியானோ போன்றவர்கள், ஹிட்லர், முஸோலினியின் பெருமையைப் பேசியே ஓலமிடுகின்றனர். ஆனால், அவர்கள் ஐரோப்பாவின் அறிவுச் சுடர் மறைந்து போகிறதே யென்று கவலைப்படக் காணோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

ஐரோப்பாவின் அநாகரீகப் போக்குக்கு ஒரு உதாரணம். இன்று ஐரோப்பியர் அணிந்து பழகும் விஷப்புகை முகமூடி. கூர்ந்து கவனித்தால், ஐரோப்பியரின் மிருகப் போக்கு நன்றாகத் தெரியும்.

போலந்துமீது ஜெர்மனி கைவைத்தால், ஜெர்மனியைப் பிரிட்டன் எதிர்த்தே தீருமெனச் சேம்பர்லேன் கூறினார். சேம்பர்லேன் கூறியதை ஜெர்மன் பத்திரிகைகள் கிண்டல் செய்து வருகின்றன. பிரிட்டனை ரப்பர் பொம்மைபோல் போட்டு, அதில் காற்றடைப்பது போன்ற இந்த வேடிக்கைப் படத்தை ஒரு ஜெர்மன் பத்திரிகை பிரசுரித்திருக்கிறது.

முனிச் துரோகம்! சேம்பர்லேன் தனித்திருந்து சிந்தனை செய்கிறார். அவருக்கு உபதேசஞ்செய்வது விட்டில் ரூபமெடுத்த யுத்தப்பேய். முனிச் துரோகத்தால் ஒரு ஐரோப்பிய யுத்தத்துக்கே அடிகோலிய சேம்பர்லேனை அது பாராட்டுகிறது! ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறது!!

- ம னோ ர த ம் -

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாகரிக ஐரோப்பா, இன்று அநாகரிக ஐரோப்பாவாக விளங்குகிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டேயிருக்கும் பெண்கள் ஆடைகளும், ஆடவர் போக்கும், இன்னமும் வேகமாக மாறுகிறது. வரப்போகும் யுத்தத்தை எண்ணி, விஷப் புகை முக மூடிகளணிந்து பழகுகின்றனர். வீடுகளிலேயே பதுங்கிக் கொள்ள அரண்களைத் தோண்டி, யுத்தத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். ஜெர்மனியின் யுத்த மிரட்டலைக் கண்டு, பிரிட்டன் தொடை நடுங்கியபோதிலும், பிரிட்டன் வெளிக்குக் கம்பீரமாக வீரமே பேசிக்கொண்டிருக்கிறது. "போலந்தை ஜெர்மனிதொட்டுப்பார்க்கட்டும், ஜெர்மனியை ஒரு கை பார்த்துவிடுகிறேன்!' என்று சேம்பர்லேன் ஜம்பம் பேசுகிருர். இவர் ஜம்பப் பேச்சை ஜெர்மனி கேலி செய்கிறது. "பிரிட்டிஷ் ரப்பர் பொம்மையே! அதிகம் ஊதிக்கொள்ள வேண்டாம்; அதிகம் ஊதினல் உன் வயிறே வெடித்துப்போகும்; எச்சரிக்கை!"யென ஜெர்மன் பத்திரிகைகள் பிரிட்டனைக் கிண்டல் செய்கின்றன. இதாலியையும், பிரிட்டிஷார் எச்சரித்து வருகிருர்கள். முஸோலினி என்ன செய்கிருர் தெரியுமா? பிரிட்டிஷ் எச்சரிக்கைகளையெல்லாம் குப்பைத் தொட்டிக்கே எறிந்துவிடுகிருர். எவ்வளவு மதிப்பில் பிரிட்டனிருக்கிறது. ஜெர்மனியும், இதாலியும், பிரிட்டனை இவ்வளவு மதிப்பில் வைத்துக்கொண்டிருக்கின்றனவென்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா? மற்றத் தேசங்கள் அதை என்ன மதிப்பில் வைத்துக்கொண்டிருக்கின்றனவென்பதற்கு ஜோசியம் கூறவேண்டியதில்லை. மூனிச்சில்ஜெக்கோவை காட்டிக் கொடுத்துத் துரோகஞ்செய்த அன்றே, உள்ளதும் போச்சு நொள்ளைக்கண்ணு என்றபடி, பிரிட்டனுக்கு இருந்துவந்த அற்ப சொற்ப மானமும், மரியாதையும் போய்விட்

ஹிட்லருக்குப்பின் ஜெர்மனிக்குச் சர்வாதிகாரியாக வர மனக் கோட்டை கட்டிக் கொண்டிருக்கும் ஜெனரல் கோரிங்.

டது! இனிமேல் அந்த மதிப்பையும், மானத்தையும் திரும்பப் பெற முடியுமா? முடியுமென்று நான் நினைக்கவில்லை.

பிரிட்டனுக்குத்தான் மானமும், மதிப்பும் போய்விட்டது; ஜெர்மன் ஹிட்லரையும், இதாலி முஸோலினியையும் மதிக்கிறதா? இல்லவே இல்லை. அவர்கள் இருவரையும் மனித ரூபமெடுத்த பேய்கள், எமனின் ஏவலாட்களென்றே ஐரோப்பியர் பலர் நினைக்கிருர்கள். அவர்கள் பெயரைக் கேட்டாலும், பேயைக் கண்டது போல் நடுங்குகிருர்கள். அவர்கள் இருவருக்கும் ஐரோப்பாவில் அவ்வளவுமதிப்பு!

* * *

இதற்கு ஒரு சிறு உதாரணம் கூறுகிறேன். ரஷியாவின் தலைநகரான மாஸ்கோவில், அடால்ப் ஹிட்லர் என்னும் பெயருடைய ஒரு கசாப்புக் கடைக்காரர் இருக்கிருர். அவருக்கு வயது 34. ஹிட்லர் என்று பெயர் வைத்துக்கொண்டிருப்பது அவருக்கு மானக்கேடாக இருந்ததால், அந்தப் பெயரை மாற்றிக்கொள்ள அனுமதிக்கும்படி ரஷிய சர்க்காருக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டார். ஹிட்லர் என்ற பெயர் ரஷியருக்கு எட்டிக்காய்! ஆகவே, அவர்கள் உடனே அந்தப் பெயரை மாற்றிக்கொள்ள அனுமதி கொடுத்துவிட்டார்கள்.

* * *

சென்ற ஏப்ரல் மாதம் 20-ந்தேதியன்று ஹிட்லருக்கு 50-வது வயது பூர்த்தியாயிற்று. அன்று ஜெர்மனியில் ராணுவ ஒத்திகை மும்முரமாக நடந்தது. அந்த



முஸோலினியை எச்சரித்துப் பிரிட்டிஷார் அனுப்பும் எச்சரிக்கைகளையெல்லாம் அவர் குப்பைத்தொட்டிகளிலேயே எறிந்துவிடுவது வழக்கம். பிரிட்டிஷார் எச்சரிக்கைகள் முஸோலினியின் குப்பைத் தொட்டியில் நிறைந்துவிட்டன. அந்தக் குப்பைக் கூடையை முஸோலினி வேலையாள் வெளியே எடுத்துக்கொண்டு போகிறன். குப்பைத் தொட்டியிலிருக்கும் அந்த எச்சரிக்கைகள் அடுப்புக்குத்தான் போய்ச் சேருமென்பதில் சந்தேகமென்ன?

ஒத்திகையைப் பார்க்கச் சென்ற ஹிட்லர் முகம் வெளுத்து விட்டது; அவர் மதி மயங்கி மூர்ச்சையானரென்று கேள்வி; அது உண்மையல்லவென்று ஜெர்மானியர் கூறுகிருர்கள். ஆனல், ஹிட்லர் மூர்ச்சையானது என்னமோ உண்மை. அவர் மூர்ச்சையானதும், உடனே அவருடைய டாக்டர் வந்தார். அவர் பூர்ண ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டுமென உத்திரவு போட்டார். ஹிட்லரை உடனே அவருடைய அந்தரங்க மலைக் கோட்டைக்குக் கொண்டு போனர்கள். ஹிட்லர் ஒரு பிரம்மச்சாரி; ஆகவே, அவருடைய வீட்டு வேலைகள், சமையல் முதலியவைகளை, அவருடைய அக்காள் கவனித்து வருகிருள். அவளும் விவாகமாகாத கன்னிப் பெண்தான்! அவள் ஒரு அப்பாவி! அவள் தம்பி ஹிட்லர் ரொம்ப நல்லவரென்று அவள் நினைத்துக் கொண்டிருக்கிருள். ஹிட்லருக்கு யுத்தத்தில் விருப்பமே கிடையாதாம்! யுத்தம் என்ற பேச்சைக் கேட்டதும் அவள் தம்பி இருதயம் வெடித்து விடும் போலிருக்கிறதென்று ஹிட்லர் அவளிடம் கூறியதாக அவளுடைய நண்பர்களிடம் சொல்லியதாக ஒரு செய்தி கிடைத்தது. இவ்வளவு அருமையான இருதயம் படைத்த ஹிட்லர் யுத்தம், யுத்தம் என்று கர்ஜிப்பது வேடிக்கை தான்! யுத்தம் என்று வெறும் பூச்சாண்டி காட்டி மத்திய ஐரோப்பாவை அபகரிக்க அவர் நினைக்கிருர் போலும்! ஹிட்லர் மனதை அறிய முடியாத பிரிட்டிஷ், பிரஞ்சு ராஜதந்திரிகள், ஹிட்லருக்கு நடுங்குகிருர்கள். அவர்கள் நடுக்கத்தை விட்டுவிட்டு, உடனே யுத்தத்துக்குப் புறப்படுவார்களேயாயின், ஹிட்லரும், முஸோலினியும் பணிந்துவிடுவார்களென்பது நிச்சயம். இந்தத் தைரியமாவது பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு வருமா? எனக்கு என்னமோ சந்தேகந்தான்!

* * *

ஜெக்கோவைச் சார்ந்த பொஹிமியா மாகாணத்தை ஹிட்லர் கைப்

(23 ம் பக்கம் பார்க்க)

வாலிபத்திலா கிழத்தன்மை?

MALAYALA VAIDYA NILAYAM POST BOX No. 53. MADRAS. TRADEMARK.

வாலிபப் பருவம் எக்காலத்தும் சாஸ்வதமாய் இருக்குமென்ற எண்ணத்தினல் தேகத்தைச் சிறிதும் கவனியாமல் இரவு பகலாக அறிவீனத்தினல் வேசியர்களின் சேர்க்கையாலும், மிதமிஞ்சிய சம்போகத்தினலும்; முஷ்டி மைதுனம் என்ற துர்பழக்கத்தினலும் இந்திரியம் தானகவும், கனவிலும், நினைவிலும், ஸ்திரீகளை நினைத்தமாத்திரத்திலும் ஸ்கலிதமாதல், தேகம் பலம் குன்றி கண் குழிவிழுந்து முகவசீகரமில்லாமலும், வாலிபப் பருவத்தை கிழ ரூபமாகக் காட்டுவதுபோன்ற வாலிப சேஷ்டையினல் ஏற்பட்ட துர்பல வியாதிகளுக்கு

சஞ்சீவி போன்றது **ஜீவானந்த ரஸாயனம்**

"ஜீவானந்த ரஸாயனம்" சாப்பிட லேபனச் சக்தியற்று, துவண்டு சுறுங்கிவிட்ட ராஜ உறுப்புகளை முறுக்கேற்றி, ஜீவ நரம்புகளில் பற்றிவரும் மேக விஷ துர் நீர்களைப் போக்கி, கெட்ட சகவாச தோஷத்தினல் உண்டான வெள்ளை, வெட்டை, மூத்திர எரிச்சல், அதி மூத்திரம் போதல், மூலச் சூடு, வாய்ப்புண், இந்திரிய ஒழுக்கு நபுஸ்சகம், சொர்ப்பனஸ்கலிதம், ஸ்திரீகளைக் கண்டால் அருவருப்படைதல், இரத்தமின்றி தேகம் நடுக்கல், இந்திரியக் குறைவால் தலை சுற்றல், தேகம் இளைத்து விடுதல், ஞாபகமறதி, மலபந்தம் முதலியவைகளை நீக்கி தாதுபுஷ்டியை அபாரமாய் உண்டுபண்ணும்.

ஸ்திரீகளுக்கு:-அதிகப் பிரசவத்தினலும், மாதாந்திர ருதுகாலத்தில் உண்டாகும் அதிக இரத்தப் போக்கினலும், புருஷ சேர்க்கை அபாரமாய் சேரப்படுவதினல் ஏற்படும் பலஹீனத்தினலும், மர்மஸ்தானத்தில் எரிச்சல், வெள்ளை, வெட்டை, சரீர உறுப்புகள் பலஹீனப்படுதல் முதலிய சகல ரோகங்களையும் நிர்மூலப்படுத்தி சற்புத்திர சந்தானத்தை உண்டு பண்ணுவதில் பெருமை பெற்றது. பத்தியம் இல்லை.

48 நாளைக்கு (2 சேர் டின் 1-க்கு) பூர்ண குணத்திற்கு விலை ரூ. 3-8-0 } தபால் செலவு பிரத்தியேகம்.
24 நாளைக்கு (1 சேர் டின் 1-க்கு) ,, ரூ. 2-0-0 }

மருந்தின் கிரயத்திற்கு தபால் ஸ்டாம்பும் ஆர்டர் சடிதத்துடன் சேர்த்து அனுப்பலாம்.

☞ கடல்கடந்த வெளிநாட்டினர் முன்பணம் பூராவையும் கட்டாயம் அனுப்பவேண்டும்.

கடிதம் எழுதும் விலாசம்:- **மலையாள வைத்திய நிலையம்,** தபால் பெட்டி நெ. 53. மதராஸ்.

ஆபீசுக்கு நேரில் வரும் விலாசம்:-நெ. 2-66, கோணத்தெரு என வழங்கும், காளத்தியப்ப முதலி தெரு, (கூளை போஸ்டாபீசுக்கு சமீபம்) மதராஸ்.

ரோம் - பெர்லின் அச்சு !

எங்கு போய் முடியும்?

மத்திய ஐரோப்பாவைக் கைப்பற்ற வேண்டுமென்பதே ஹிட்லரின் அந்தரங்க நோக்கம். அவர் வெகு தந்திரமாக அவருடைய நோக்கத்தைப் பூர்த்தி செய்து வருகிறார். முதன் முதலில் ஆஸ்திரியாவைப் பிடித்தார்; அதன் பின், ஸுடேடனைக் கைப்பற்றி, ஜெச்கோவையும் சுருட்டி மடக்கு வாயில் போட்டுக்கொண்டார். ஜெக்கோதான் முக்கியமான இடம். ஜெக்கோவிலிருந்துகொண்டு, மத்திய ஐரோப்பாவை ஆட்டி வைக்கலாமெனப், பேர்பெற்ற ஜெர்மன் ராஜதந்திரி, பிஸ்மார்க் கூறியது, இன்று உண்மையாகிவிட்டது. ஜெக்கோ ஹிட்லர் கைக்கு வந்துவிட்டதால், அவர் இலகுவில் போலந்தை வளைத்துக்கொள்ளமுடியும். போலந்தை ஜெயித்துவிட்டால், ரஷிய யுக்ரெய்னையும், ரஷியாவையுமே அவர் சுரியமாக எதிர்க்கமுடியும். போலந்து மட்டுமல்ல; டான்ஜிக்கிலும், பால்டிக



ஹிட்லர் போலந்துமீது படையெடுத்து வந்தால், அவரைக் கடைசி மட்டும் எதிர்த்தே தீருவதெனப் போலந்து அந்நிய நாட்டு மந்திரி கர்னல் பேக், உறுதி கொண்டிருக்கிறர்.

சமுத்திரத்திலும் ஹிட்லர் ஆட்சி செய்ய நினைக்கிறார். பால்டிக் சமுத்திரத்தில் ஹிட்லர் ஆட்சி ஏற்பட்டுவிட்டால், அவர் பிரிட்டனையும், பிரான்சையும் ஒரு கை பார்த்துவிடுவார். இதுதான் ஹிட்லரின் நோக்கம். மத்திய ஐரோப்பாவை ஜெயித்துப் பிரிட்டனையும், பிரான்சையும், ரஷியாவையும் மடக்குவதற்கு ஹிட்லர் போட்டிருக்கும் திட்டம் இதுதான்! இந்தத் திட்டத்தை அவர் எப்படி வேலை செய்யப் போகிறாரென்பதைக் கவனிப்போம்.

முதலில் டான்ஜிக்

போலந்துக்கு மேலேயுள்ள மெமல் பிரதேசத்தை ஹிட்லர் ஏற்கனவே பிடித்து விட்டார். அத்துடன்சேர்ந்த லிதுவேனியாவையும்சீக்கிரத்தில் ஹிட்லர் ஏப்பம் விடுவது நிச்சயம். அடுத்தாற்போலிருப்பது டான்ஜிக்; டான்ஜிக்கையும் ஹிட்லர் பிடித்து விட்டால், போலந்தின் கழுத்தில் கத்தி வைத்ததுபோலவேயாகும். டான்ஜிக்கைக் கைப்பற்ற அவர் போலந்து வழியாகப் படையெடுத்துச் செல்லத் தீர்மானித்திருக்கிறார். போலந்தில் பொமோர்ஜ் என்னும் ஒரு மாகாணமுண்டு இந்த மாகாணப் பிரதேசம், சென்ற மகா யுத்தத்துக்கு முன் ஜெர்மனிக்குச் சொந்தமாக இருந்தது. இப்போது அது போலந்துடன் சேர்ந்திருக்கிறது. அந்த மாகாணத்தின் வழியாகவே ஹிட்லர் டான்ஜிக்மீது படையெடுத்துச் செல்ல நினைத்திருக்கிறார். அப்படி அவர் படையெடுப்பாரேயானல், பொமொர்ஜ் பிரதேசம் ஹிட்லருக்கு ஒரு சிறந்த வழியாகும். அங்கு ஏராளமான ஜெர்மன் துருப்புகளைக் கொண்டுபோய் வைத்துக்கொள்ள முடியும். அங்கிருந்தபடியே அவர் எளிதில் போலந்து மீது படையெடுத்துச் செல்லலாம். போலந்தின் தலை நகரான வார்ஸாமீது மடமடவென்று ஜெர்மன் ராணுவங்களை அனுப்பி வைக்கலாம். இந்த வழியே ஹிட்லருக்குப் பிடிக்கா விட்டாலும், அவருக்கு



டான்ஜிக் பிரதேசத்தை ஹிட்லருக்குக் கொடுத்து விட்டாலுங்கூட அத்துடன் அவர் திருப்தியடைய மாட்டார். போலந்துமீது அவர் படையெடுத்தே தீருவார். போலந்தை ஜெயித்தாலும், அவர் கண்ணேட்டம், டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், ஸ்விட்சர்லந்து முதலிய சிறு தேசங்கள்மீது இருந்து கொண்டுதானிருக்கும். பால்டிக் சமுத்திரத்தில் ஹிட்லர் ஆட்சியை நிலைநாட்டி, பிரான்சையும், பிரிட்டனையும் எதிர்க்கவே ஹிட்லர் அந்தரங்க நோக்கங் கொண்டிருக்கிறர்.

ரோம்-பெர்லின் அச்சு, ஆடி, அசைந்துகொண்டிருப்பதாகச் செய்திகள் வந்தன. ஆனல், ஹிட்லர் தந்திரமாக முஸோலினியை வசப்படுத்திவிட்டார். ஜெர்மனியும், இதாலியும் ராணுவ ஒப்பந்தஞ் செய்துகொண்டன. இதனல் ரோம்-பெர்லின் அச்சு உறுதியாகிவிட்டது. இனிமேல், இந்த அச்சின் உறுதியும், வேகமும் எங்கு போய் முடியும்? ஐரோப்பாவின் பல பாகங்களைப் பிடித்தபின், கடைசியாக, அந்த அச்சின் வேகம் பிரிட்டனின் தலையில் போய்த்தான் முடியுமென அட்மிரல் அஸ்போர்ன் கூறுகிறார்.

ஜெர்மன் ராணுவங்கள் போலந்து எல்லைப் புறத்தில் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. போலந்தும் சும்மா இருக்கவில்லை. அவர்களும் படை திரட்டி வருகிறார்கள். ராணுவத்தில் சேருவதற்குச் செல்லும் போலந்து சோல்ஜரின் கிழிந்த ஆடையை, அவர் மனைவி தைய்த்துக் கொண்டிருக்கிறள்.

பிரிட்டன் தலையில்தான் !

மற்றொரு வழி இருக்கிறது. ஜெக்கோ ஜெர்மனி கைக்கு வந்து விட்டதால், அவர் ஹங்கேரியின் எல்லைப் புறத்திலிருந்து, போலந்து மீது படையெடுத்துப்போகலாம். ஆகவே, போலந்துக்கு இரு புறங்களில் ஆபத்து இருந்து கொண்டிருக்கிறது. ஹிட்லருக்கு இரு இடங்கள் சாதகமாக இருக்கின்றன. அவர் எந்த விதத்திலும் போலந்துமீது படையெடுத்துச் சென்றே தீருவார். அதற்குச் சந்தேகமே இல்லை. போலந்துமீது படையெடுத்துச் செல்லுமுன், அவருடைய நிலைமையைப் பாதுகாத்துக் கொள்ள அவர் வேலை செய்து வருகிறார்.

அடுத்த பாய்ச்சல்?

ஹிட்லரின் அடுத்த பாய்ச்சல் போலந்துமீதுதானிருக்கும். டான்ஜிக்கைக் கைப்பற்றிவிட்டால், பிரஷியாவையும், ஜெர்மனியையும் ஒன்று சேர்த்துவிட முடியும். அவற்றைப் பிரிக்க முடியாது. டான்ஜிக்கைக் கைப்பற்றியபின் ஹங்கேரியின் எல்லைப்புறத்திலுள்ள கார்பாதியன்ஸ் என்ற பிரதேசத்தைக் கைப்பற்ற ஹிட்லர் யோசனை போட்டிருக்கிறார். இது போலந்தின் எல்லைப் புறத்திலிருக்கிறது. இங்கு ஏராளமான சுரங்கங்கள் உண்டு. சுரங்கங்களைக் கைப்பற்றியபின் ஹங்கேரியைப் பிடித்துவிட்டு, லாட்ஜ் என்னுமிடத்திலிருந்து போலந்தை எதிர்த்து, வார்சாவுக்குச் செல்லலாம். அப்படியானல், ஹங்கேரிக்கும் தலைபிடிதான்!

ஹாலந்து அவதி!

ஹிட்லரின் அந்தரங்க நோக்கத்தை அறிந்த ஹாலந்து அதிகப் பீதியடைந்திருக்கிறது. ஹாலந்து இதுவரையில் நடுநிலைமை வகித்து வந்தது. அங்கு ஏராளமான ராணுவமோ, கடற்படையோ, விமானப்படையோ கிடையாது. சிறு தேசம்; ஜெர்மனியை எதிர்த்து நிற்க அதற்குச் சக்தி கிடையாது. எனினும், ஹிட்லர் அதன்மீது படையெடுத்து வருவாரேயானல், ஹாலந்து அவரைக் கடைசி வரையில் எதிர்த்தே தீரும். ஹாலந்துமீது ஹிட்லரின் கண்ணேட்டம் பாய்வதற்கு முக்கியமான காரணமுண்டு. ஜெர்மனிக்குப் பயந்து, பிரான்ஸ், அதின் எல்லைப்புறத்தில் தகர்க்க முடியாத மாயக் கோட்டைகளைக் கட்டி வைத்திருக்கிறது. அந்தக் கோட்டைகளைத் தாண்டி ஜெர்மனி, பிரான்சுக்குள் வருவது கஷ்டம். ஆகவே, அந்தக் கோட்டையைத் தாண்டி வராமல், பிரான்சுக்கு வரு

(அடுத்த பக்கம் பார்க்க)

வதற்கு ஹாலந்து ஒரு வழி; மற்றென்று ஸ்விட்சர்லந்து. பிரான்ஸை ஜெர்மனி எதிர்க்க வேண்டுமேயானல், ஹாலந்தையும், ஸ்விட்சர்லந்தையும் கண்டிப்பாக எதிர்த்தே தீர வேண்டும். அந்த இரு சிறு தேசங்களையும் கைப்பற்றிவிட்டால் பிரான்சுக்குள் இலகுவில் வந்துவிடலாம். ஹாலந்து ஜெர்மனி கைக்குப் போய் விட்டால், அப்புறமிருப்பது பெல்ஜியம். பெல்ஜியமும் சிறு தேசம். அதைக் கைப்பற்ற நெடுங் காலமாகாது. ஆகவே, பிரான்சின் எல்லைப் புறங்களிலிருக்கும், ஹாலந்து, பெல்ஜியம், ஸ்விட்சர்லந்து முதலிய மூன்று சிறு தேசங்களுக்கும் எந்த நிமிஷத்தில் ஆபத்து வருமோ சொல்ல முடியாது. இந்த மூன்று தேசங்கள் மீதும் ஹிட்லர் கண்வைத்துக் கொண்டிருக்கிறார். அந்தத் தேசங்களின் எல்லைப்புறத்திலுள்ள நாஜியர், ஏற்கனவே கலவரஞ் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இந்த மூன்று சிறு தேசங்களும் செழிப்பான பிரதேசங்கள். யுத்த காலத்தில் இவை ஜெர்மனிக்குப் போவதால், ஜெர்மனிக்கு இன்னமும் அனுகூலமாகும். பிரான்ஸையும், பிரிட்டனையும் வசதியாக எதிர்க்க அந்தச் சிறு தேசங்களில் ஹாலந்தும், டென்மார்க்குந்தான் இன்னமும் விசேஷம்.

ரோம்-பெர்லின் அச்சு!

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க், ஸ்விட்சர்லந்து முதலிய சிறு தேசங்களெல்லாம் ஹிட்லர் கைக்குப் போய்விட்டால், பிரிட்டன் பாடு தான் பெரிய ஆபத்தில் வந்து முடியும். பிரான்சும் அந்த ஆபத்திலிருந்து தப்பிவிட முடியாது. ரஷியாவை எதிர்க்கவும் ஹிட்லர் துணிந்துவிடுவார்.

முஸோலினி உறுமுகிறார்!

ஹிட்லர் மத்திய ஐரோப்பாவை ஜெயிக்க இவ்வளவு ஏற்பாடுகள் செய்து வரும்போது முஸோலினி சும்மா இருப்பாரா? இல்லை. அவரும், ஹிட்லரைப்போல் நாடு பிடிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். அல்பேனியாவை ஜெயித்து விட்டார். அங்கிருந்துகொண்டு அவர் யுகோஸ்லேவியா மீதும், கிரீஸ், துருக்கிமீதும் குறிவைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், அந்த ஐரோப்பிய நாடுகள் சிறிது பலமுள்ளவை. அவற்றை எதிர்த்து நிற்க இதாலிக்குப் பலமிருந்தபோதிலும், தற்போதைய நிலைமையில் அது இதாலிக்கு ஆபத்தாக வந்து முடிந்தாலும் முடியலாம். ஆகவே, அவர் ஆசியா, ஆப்ரிக்கா தேசங்கள்மீது கவனத்தைச் செலுத்தி வருகிறார். லிபியாவில் ஏராளமான இதாலி துருப்புகளையும், விமானப் படைகளையும், யுத்த தளவாடங்களையும் சேகரித்து வருகிறார் அங்கிருந்து எகிப்துமீது படையெடுத்துச் சென்று, எகிப்தை 14 தினங்களில் பிடித்துவிட முடியுமென உறுமுகிறார். அபிசீனியவிலுள்ள இதாலி ராணுவங்களையும், அவர் இந்தப் படையெடுப்புக்கு உபயோகிக்க நினைத்துக் கொண்டிருக்கிறார். அபிசீனியாவிலுள்ள இதாலித் துருப்புகள் ஸூடான்வழியாக கார்தும் என்னும் பிரதேசத்துக்குப் போகலாம். லிபியாவிலுள்ள துருப்புகளும், அபிசீனியாவிலுள்ள துருப்புகளும் சேர்ந்து எகிப்தை முற்றுகை போட்டு, சில வாரங்களில் பிடித்துவிட முடியும். ரோட்ஸ் தீவுகளிலும் முஸோலினி, இதாலி படைகளையும், விமானங்களையும் திரட்டி வருவதின் நோக்கம் இதுதான். எகிப்தைக் கைப்பற்றியபின், அங்கிருந்து டூனிஷ்மீது பாய முஸோலினி நினைக்கிறார். மால்டா தீவுகளின்மீது இதாலி விமானங்கள் திடீரெனப் படையெடுத்துச் சென்று வெடிகுண்டுகளை எறியலாம். இதே சமயத்தில் ஜெனரல் பிராங்கோவைத் தூண்டிவிட்டு, ஜிப்ரால்டரை எதிர்க்கச் சதிசெய்து வருகிறார்கள். இவ்விதமாக, ஹிட்லரும், முஸோலினியும், பிரிட்டனையும், பிரான்ஸையும் திண்டாட்டத்தில் கொண்டு வந்துவிட்டு, அந்த இரு தேசங்களையும் பணியவைக்க நினைக்கிறார்கள். ஜெர்மனி இழந்த காலனிகளைத் திருப்பக் கொடுக்கும்படியும், இதாலிக்குப் புதிய காலனிகளைக் கொடுக்கும்படியும் இரு சர்வாதிகாரிகளும் பிரிட்டனையும், பிரான்ஸையும் வற்புறுத்தவே இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்து வருகிறார்கள். மத்திய தரக் கடல் ஆட்சி இதாலிக்குப் போகும்; பால்டிக் சமுத்திர ஆட்சி ஹிட்லருக்குப் போகலாம். ரோம்-பெர்லின் அச்சின் போக்கு இது தான். இந்த அச்சின் வேகம் இறுதியில் பிரிட்டன், பிரான்ஸ் தலைமீது தான் வந்து விடியப்போகிறது. ஹிட்லரும், முஸோலினியும் எங்கெங்த இடங்களில் தீவிரமாக இருக்கிறார்களோ, அந்த இடங்களில் அவர்களை இப்பொழுதே முறியடிக்கப் பிரிட்டனும், பிரான்சும் ஏற்பாடு செய்தாலொழிய, இரு சர்வாதிகாரிகளையும் மடக்க முடியாது. முடிவில் அது உலகத்தையே பெரும் அவதியில் கொண்டுவந்து விடுவது உறுதி.

போலந்தைப் பாதுகாக்க, போலந்து வாலிபர்கள் ராணுவப் படையில் ஏராளமாகச் சேர்ந்து வருகின்றனர். அங்கு, ராணுவ அதிகாரிகள் படைதிரட்டுவதைப் படத்தில் காண்க.

வெடிகுண்டு போடலாம்!

ஹாலந்து ஜெர்மனி கைக்குப் போய்விட்டால், ஜெர்மனிக்குக் கொண்டாட்டம். அங்கு நல்ல துறைமுகங்கள் இருக்கின்றன. அங்கிருந்துகொண்டு பிரிட்டனைப் பயமுறுத்தலாம். ஜெர்மன் விமானங்கள் பிரிட்டன்மீது பறந்துசென்று வெடிகுண்டுகளை எறியலாம். பிரிட்டன் கடற்படையையும் நெருங்க முடியும். டென்மார்க்கும் ஜெர்மனிக்குப் போய்விட்டால், பால்டிக் சமுத்திரத்தின் ஆட்சி, ஜெர்மனிக்குப் போய்விடும். இந்த சிறு நாடுகள் ஜெர்மனியை எதிர்த்து நிற்பதென்பது முடியாதகாரியம். ஆகவே, ஹிட்லர் அவருடைய நிலைமையை வெகு பக்குவமாகப் பலப்படுத்திவருகிறார். ஏற்கனவே கூறியதுபோல்



ஜெர்மன் ஸ்வாஸ்திக் நிழல், போலந்தில் மட்டுமல்ல, மத்திய ஐரோப்பாவெங்கும் படிந்திருப்பதைப் படத்தில் காணலாம். ஹிட்லரின் அந்தரங்க நோக்கத்தைப் இப்படம் தெளிவு படுத்தும்.

ஈகில் மார்க் பீடியை
உபயோகியுங்கள்
பாக்கிட் 1க்கு காலணு

சங்கர் பீடி பாக்டரி,
55, மண்ணடி, மதராஸ்.

மாதங்கள் வேண்டாம் நாட்களும் வேண்டாம்;
ஒரே ஒரு மணி நேரத்தில்
வீரிய ஸ்தம்பனம் ஏற்பட
ரமண விலாசினி வடிகா
உபயோகியுங்கள்.
ஒரு டப்பி விலை ரூபா 1—0—0
மதனமஞ்சரி பார்மஸி,
1-94, சைனுபஜார், மதராஸ்.

T. Kuppuswamy Naidu,
OPTICIAN

120 & 121. Moor Market, Madras.
PLEASE PAY US A VISIT

விலை ரூபா 1-0-0

மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

நமது சினிமா

தமிழ் பேசும் சினிமாப் படங்களைப் 'போற்றும் பத்திரிகைகள் உண்டு; தூற்றும் பத்திரிகைகளும் உண்டு. இந்த இரண்டுவிதமான பத்திரிகைகளும் தவறு செய்கின்றனவென்றே நான் நினைக்கிறேன். சினிமா விளம்பரங்கள் ஏராளமாகக் கிடைக்குமென்ற எண்ணத்தில், சில பத்திரிகைகள், சுவைக்குதவாத சில படங்களைக்கூட வெகு புகழ்ச்சியாக எழுதிவிடுகின்றன. பத்திரிகைகள் எழுதியதைக் கண்டு மக்கள்கூட சிற்சில சமயங்களில் ஏமாற்றமடைகின்றனர். வேறு சில பத்திரிகைகள் ஒரு வகையில் சுமாராக இருக்கக்கூடிய படங்களைக்கூடக் கண்டித்து, நடிகர்களையும், டைரக்டர்களையும் மிக மோசமாக இழிவுபடுத்தி எழுதுகின்றன. ஏன்? அப்பத்திரிகைகளுக்கு ஏராளமாக விளம்பரம் கொடுக்காமலிருக்கலாம்; அல்லது, சினிமாவைப் புகழ்ச்சியாக எழுதக் கைக்கூலி கிடைக்காமலிருக்கலாம்; இந்த வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள சிற்சில சமயங்களில் சில பத்திரிகைகள் படங்கள்மீது மட்டுமல்ல; நடிகர், டைரக்டர் பட முதலாளிகள் முதலியோர் மீதுகூடக் கண்டனங்களை வாரி இறைத்துவிடுகின்றன. இது ஒருபோதும் கூடாது; நேர்மையான பத்திரிகைக்கு இது அழகுமல்ல. சினிமாப் படங்களில் குற்றங்குறைகள் இருந்தால் கட்டாயம் கண்டிக்க வேண்டியதுதான். ஆனால், அந்தக் கண்டனம் நேரான வழியில் இருக்கவேண்டும். குற்றங்குறைகளை எடுத்துக் காட்டுவதோடு நின்றுவிடக்கூடாது; அந்தக் குற்றங்குறைகளை எப்படித் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதை நடிகர்களுக்கும், டைரக்டர்களுக்கும் படமுதலாளிகளுக்கும் எடுத்துக் காட்டுவதே நல்லது. நல்ல யோசனைகளை யாரும் ஏற்றுக்கொள்ளத்தான் செய்வார்கள். அதுவே, பத்திரிகைகளின் கடமை. சினிமாக் கலை அபிவிருத்தியடைய வேண்டுமேயானால், அதற்குப் பத்திரிகைகளும் துணைச் செய்யவேண்டும். பத்திரிகைகளின் உதவியைப் பட முதலாளிகள் பெரும்பாலும் தேடவேண்டும். ஏனெனில், நல்ல பத்திரிகைகள் பட முதலாளிக்கும், நடிகர்களுக்கும் நல்ல யோசனைகளைச் சொல்லக் கூடுமென்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

அலட்சிய புத்தி!

சில பத்திரிகைக்காரர் மோசமாக நடந்துகொள்ளுவதால், சினிமாச் சொந்தக்காரரும், டைரக்டர்களும், சகல பத்திரிகைகளையும் அலட்சியமாகக் கருதுகிறார்கள். எல்லாப் பத்திரிகைகளையும் ஓரே அளவில் வைத்து நிறுத்துவிடுகின்றனர். அவர்கள் இவ்வளவு மோசமாக நினைக்க இடங் கொடுத்தது சில பத்திரிகைக்காரர்களே யென்பதில் சந்தேகமில்லை. பொறுப்பும் கௌரவமும் வாய்ந்த பத்திரிகை ஆசிரியர்களோ, நிருபர்களோ, இவ்வித அலட்சியப் புத்திக்கு இடங் கொடுக்கவே கூடாது. அவர்களின் அசட்டுத்தனத்தால், பிறர் பத்திரிகைகளையும், பத்திரிகை ஆசிரியர்களையும் அலட்சியமாக மதிக்க வேண்டி வருகிறது. சினிமா சொந்தக்காரர் பத்திரிகைகளுக்குப் பயந்தோ, அல்லது, மதிக்காமலோ சில சினிமாப் படங்களுக்கு வர்த்தக காட்சிகூட வைப்பதில்லை. வெளியூர்களில் சினிமாக்களைக் காட்டிவிட்டுக், கடைசியாக சென்னைக்குக் கொண்டு வரும் தந்திரத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன தந்திரஞ் செய்தபோதிலும், நல்ல

(அடுத்த பக்கம் பார்க்க)

டெக்கான் சினிடோன் டிஸ்டிரிபூட்டர்ஸ் கம்பெனியாரால், அவர்கள் சொந்த டெக்கான் சினிடோன் ஸ்டுடியோவில் தயாரித்து வரும் குமார குலோத்துங்கன் என்னும் தமிழ் பேசும் படத்தின் ஓர் காட்சி.

கூடிய சீக்கிரம் * *
* * வெளிவரும்

கண் கவர் காக்ஷிகள் காதுக்கினிய பாடல்கள்

இணையற்ற தமிழ் பேசும் படம்

"குமார குலோத்துங்கன்"

ஸ்ரீமதி. டி. ஆர். ராஜகுமாரி
எம். ஆர். மஹாலக்ஷிமி பாய்
ஸ்ரீ. சி. டி. கண்ணபிரான்
முதலிய நடிக நட்சத்திரங்கள்
ஹாஸ்ய சிகாமணி வி. என். மேனன்
முதலியவர்களோடு தோன்றுகிறார்கள்

FOR PARTICULARS

Apply to:—

The Deccan Cenetone

1-11 B. Mount Road, Madras.

நமது சினிமா

(முன் பக்கத் தொடர்ச்சி)

படத்தைத்தான் பொதுஜனங்கள் ஆதரிப்பார்களே யொழிய, குப்பை கூளங்களையும், வெறும் காமக் களஞ்சியங்களையும் பொது மக்கள் ஒரு போதும் ஆதரிக்கமாட்டார்களென்பது நிச்சயம். பட முதலாளிகள் இதைக் கவனிக்க வேண்டும்.

மந்திரி சூடு!

சென்னை முதன் மந்திரி, ஆச்சாரியார், தமாஷ் வரி மசோதாவை ஆதரித்துச் சென்னைக் கவுன்சிலில் பேசியபோது என்ன சொன்னார்? "சில சினிமாப் படங்களை எங்குமே காட்டாமல் கிழித்தெறிய வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது! அதனால் சர்க்காருக்கு வரி கிடைக்காமற் போனாலும் பாதகமில்லை; சில சினிமாப் படங்களை மக்கள் கண்கொண்டும் பார்க்காமலிருந்தால் போதுமென்று சிற்சில சமயங்களில் நான் நினைப்பதுண்டு!" என்றார். ஆச்சாரியார் கூறியதை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம். அவ் வார்த்தைகளை அப்படியே பட முதலாளிகளுக்கும், டைரக்டர்களுக்கும் அர்ப்பணஞ் செய்கிறேன். முதன் மந்திரி கூறியதைப் பொய்யென்றோ, அல்லது, துவேஷப் புத்தியில் பேசினாரென்றோ யாரும் சொல்ல முடியாது. பட முதலாளிகளுக்கும், டைரக்டர்களுக்கும், நடிகர்களுக்கும் அது விளக்கெண்ணெய் சாப்பிட்டது போலிருக்கலாம்! என்றாலும், உள்ளதை ஒப்புக் கொண்டுதானாக வேண்டும். சிற்சில தமிழ் படங்களைக் கண் கொண்டும் பார்க்க முடியாது; பாடல்களையும், வசனங்களையும் காது கொண்டு கேட்க முடியாது. இவ்வித ஆபாசமான தமிழ் படங்கள் சில உண்டு. அந்தப் படங்களைப் பொது மக்கள் பார்ப்பதைவிட, அவைகளைக் கிழித்தெறிந்து, குப்பைத் தொட்டியில் போடுவது நன்மை பயக்கும் இவ்வித ஆபாசமான படங்கள் ஒரு வகையாருக்குத் தமாஷாக இருக்கலாம்; ஆனால், அது சமூக ஒழுக்கத்தையே நொடிப் பொழுதில் பாழாக்கிவிடக் கூடுமென்பதை பட முதலாளிகள் அறிய வேண்டும்.

மற்றொரு குறை

தமிழ் சினிமாப்படங்களைப் பார்ப்பது சிலருக்குப் பிடிப்பதே இல்லை. ஏன்? அவர்களுக்கு தமிழ் சினிமாப் படங்கள் மீது அபிமானம் இல்லை என்பதற்காகவா? இல்லவே இல்லை. தமிழ் படங்கள நன்றாக இல்லாதது ஒரு புறமிருக்க, கதைகளை அனாவசியமாக நீட்டிக் கொண்டு போகிறார்கள். கடைசியில் கதைகளை திடீரெனச் சுருக்கமாக முடித்து விடுகிறார்கள். இதனால், கதைகளின் முடிவு தெளிவாக இருப்பதில்லை. ஒரு கதைக்கு நேரத்தை முதலில் நிர்ணயிக்கவேண்டும். ஒரு கதை இரண்டு மணிநேரம், அல்லது $2\frac{1}{2}$ மணி நேரத்துக்குமேல் நீடிக்கக் கூடாது. அந்த நேரத்துக்குள் கதையைச் சுருக்கமாகவும், அழகாகவும் பிடிக்கவேண்டும். நேரத்தைச் சுருக்குவதால் பட முதலாளிகளுக்குத் தான் லாபம். மேலும், படத்தைப் பார்க்கப் போகிறவர்களுக்கும் அது உபத்திரமாக இருக்காது. சில தமிழ் படங்கள் $3\frac{1}{2}$ மணி நேரம், $4\frac{1}{2}$ மணி நேரம் நீடித்துவிடுகின்றன. இதனால் படம் பார்ப்பதற்கே வெறுப்பாகி விடுகிறது. தமிழ் படங்களை டைரக்டு செய்கிறவர்கள் இதில் முக்கிய கவனஞ்செலுத்துவார்களாக.

யுனைடெட் புரடக்ஸன்ஸ் கம்பெனியார் தயாரிக்கப்போகும் "மோக்ஷம்" என்னும் தமிழ் பேசும் சினிமாப் படத்தில் கதாநாயகியாக நடிக்கப் போகும் ஸ்ரீமதி. வசுந்தரா. இந்தக் கதையில் ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியாரும் ஒரு முக்கிய நடிகராக இருப்பார்.

நடிகர்கள்

சினிமாக்களில் நடிக்கும் ஆடவர்களேயாயினுஞ்சரி, பெண்களேயாயினுஞ்சரி, அவர்கள் சினிமாக்களில் நடிப்பதை ஒரு புனிதமான தொழிலாகக் கருதவேண்டும். ஒருவர் ராமராகவும், ஒரு பெண் சீதையாகவும் நடிப்பதாக வைத்துக்கொள்ளுவோம் அந்த நடிகர்கள் நடிக்குங் காலத்தில் உண்மையான உணர்ச்சியுடன் நடிக்கவேண்டும். அப்பொழுதுதான் சினிமாக் கலை உயரும். சினிமா தொழிற்சாலைகளை, அவர்கள் வேட்டையாடும் இடங்களாக நினைத்துவிடக் கூடாது. வாங்கும் பணத்துக்காக சில பாட்டுக்களைப் பாடி, நடித்துவிட்டு வர எண்ணக்கூடாது நடிகர் அனைவரும் ஒழுக்கமாக நடந்துகொள்ள வேண்டும். ஒழுக்கமே பிரதானமென்பதை ஒவ்வொரு நடிகரும் மனதிலிறுத்திக்கொள்ளவேண்டியது அவசியம். அதேபோல் டைரக்டர்களும் டைரக்டர்களுக்கு ஒழுக்கம் மிக அவசியம். ஒரு சினிமாவை டைரக்ட் செய்யும்போது, அவர், இதர ஆக்டர்களுக்கு ஒரு குருவாக இருக்கிறார். நல்ல ஆசானின் ஸ்தானத்திலிருக்கிறார். அவர் டைரக்ட் செய்யும் ஆக்டர் ஒரு பெண்ணாக இருந்தாலும் அவளை அவர் ஒரு சகோதரியாகப் பாவித்து, அவளுக்கு ஒரு குருவைப்போல் நடிக்கும் விதத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். சிற்சில ஸ்டுடியோக்களில் நடக்கும் வம்புகளையும், அக்கிரமங்களையும் கேள்விப்படும்போது, சினிமாத் தொழிலே அடியழிந்துபோனாலும் பாதகமில்லையென்ற எண்ணம் ஏற்படுகிறது. அவ்வித ஆபாசமான நிலைமைக்குச் சினிமாத் தொழிலைக் கொண்டுவர வேண்டாமென நடிகர்களையும், டைரக்டர்களையும், விசேஷமாகச் சினிமாச் சொந்தக்காரர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேவை! தேவை!!
தமிழில் வந்த முதல் சினிமா பத்திரிகை
ஆடல் பாடல்
5 வருடங்களாக சினிமாக் கலைக்கு தொண்டாற்றி வருகிறது.
முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை
—: விவரங்களுக்கு :—
ஆடல் பாடல்,
232, ஒற்றைவாடை, சென்னை.

PYE மாடல் நெ. 803
குறைந்த விலையில் அதிகப் புகழ்வாய்ந்த ரேடியோ உங்களுக்குக் கிடைக்கும்.



மாடல் 803, 3 அலை வேகமுள்ள குறுகிய அலைகளுடையது. இந்தியாவின் முக்கிய ரேடியோ ஸ்டேஷன்களிலிருந்து வரக்கூடிய சங்கீதம், முதலிய வைபவங்களை எளிதில் கிரகிக்கக்கூடியது. இந்த ரேடியோவை உபயோகிக்க, ஏ. சி. 200-250 வால்ட்ஸ், .60-100 வாட்ஸ், வேகமுள்ள மின்சார சக்தி போதுமானது. 5 வால்வ், ரெக்டிபையர், ஏ. வி. சி. சோலோஸ்கேல் டையல், அலைகளை இயற்கையிலேயே மாற்றக்கூடிய இயந்திரங்கள், தொனியை 3 பாய்ண்ட் அளவுக்குக் கட்டுப்படுத்தக் கூடியதும், தொனியை நன்கு கிரகிக்கக்கூடிய சாக்கட், முதலிய சிறந்த அமைப்புகளுடன் கூடியது.

விலை ரூ. 200

மொத்தமாக விலைகொடுத்து வாங்க முடியாதவர்கள் மாதா மாதம் பணம் கொடுத்தும் வாங்கிக் கொள்ளலாம். விவரம் அறிய விரும்புவோர் நேரில் எழுதிக்கொள்ளவும்.

ஸ்பென்ஸர் & கம்பெனி,
ரேடியோ டிபார்ட்மெண்ட், மதராஸ்.

கிளிப்பேச்சு

ராஜகோட் வெடிகுண்டு! -

- உன்னால் நான் கெட்டேன்!

பேடு தோப்புக் கரணம் -

- சட்ட சபைக் கூத்து!

வேஷம் வெளியாயிற்று -

கிளியே இவ்வாரம், விசேஷங்கள் என்ன?

பல முக்கியமான விசேஷங்களுண்டு. ராஜகோட்டிலிருக்கும் காந்திஜி, யாரும் எதிர்பாராமலிருக்கும்போது ஒருபெரிய வெடிகுண்டு போட்டார்! காந்திஜி இந்த வெடிகுண்டு போடுவாரென நான் கனவில்கூட நினைக்கவில்லை. ராஜகோட்டுக்குச் சென்ற காந்திஜி, தார்பார் வீரவாலாவையும், பரிஷத் பிரதிநிதிகளையும், இதர தலைவர்களையும், ரெஸிடென்ட் ஜிப்ஸனையும் அடிக்கடி சந்தித்துப் பேசினார். ராஜகோட் தகராறை எப்படியும் தீர்த்துவிடவேண்டுமென்றே ஒரே நோக்கத்துடன் காந்திஜி, அவர் தேக நிலைமையையும் பொருட்படுத்தாமல, இரவு பகலாக வேலை செய்து வந்தார். ஆனால், அவருடைய ஆவல் பூர்த்தியாகவில்லை. ராஜகோட் தகராறு வளர்ந்துகொண்டு போனதேயொழிய, ஒரு முடிவுக்கும் வரவில்லை. சமரசத்தில் ஆவல்கொண்டுள்ள காந்திஜி, எப்படியும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தார். அவர் தோல்வியைப்பற்றியோ, அவர் கோரிக்கைகளைப்பற்றியோ அவர் கவலை கொள்ளவில்லை. ராஜகோட் தகராறு சமரசமாகத் தீர்ந்தால் போதுமென்று நினைத்தார். ஆனால், வீரவாலாவும், மற்றவர்களும், காந்திஜியின் நோக்கத்தை அறிந்துகொண்டார்கள். ராஜகோட் தகராறு சம்பந்தமாகக் காந்திஜி பட்டினி கிடந்ததும், வைசிராய் குறுக்கிட்டு, அந்தத் தகராறை பெடரல் கோர்ட் பிரதம நீதிபதி சர். க்வயர் தீர்ப்புக்கு அனுப்பியதும், ராஜகோட் மன்னருக்குப் பிடிக்கவில்லை. வீரவாலா அதையே காந்திஜிக்கு சுட்டிக் காட்டினார். அது பலாத்காரம் கலந்த அஹிம்சை என்றார். ராஜகோட் மன்னரின் விருப்பத்துக்கு விட்டிருந்தால், ராஜகோட் மக்களுக்கு இன்னமும் நல்ல சீர்திருத்தம் கிடைத்திருக்கலாமென்று வீரவாலா காந்திஜியிடம்கூறினார். காந்திஜி அவருடைய தவறை உணர்ந்தார்; உடனே க்வயர் தீர்ப்பை விட்டுவிட்டார். அவர் பட்டினி பலாத்காரம் கலந்திருந்ததாகப் பிறர் நினைக்க இடங்கொடுத்ததற்கு வருந்தினார். பலரை அவர் பட்டினி மூலம் ஹிம்சித்ததாகக் கருதி, ராஜகோட் மன்னர், வீரவாலா, வைசிராய், பெடரல் கோர்ட் பிரதம நீதிபதி எல்லோரிடமும் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டு ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை திடீரென வெடிகுண்டு போல்வந்து விழுந்தது; எல்லோரும் திடுக்கிட்டுப் போனார்கள். காந்திஜி க்வயர் தீர்ப்பை விட்டுவிட்டார். ராஜகோட் மன்னரும், வீரவாலாவும் மனமுவந்து, ராஜகோட் மக்களுக்கு நல்ல சீர் திருத்தம் கொடுத்தால் போதும்; அதுவே அவருக்குப் பரம திருப்தியாக இருக்குமென்று சொன்னார். காந்திஜியின் பட்டினிவேகத்தைவிட, அவர்வெளியிட்ட அறிக்கை, ராஜகோட் மன்னர், வீரவாலா முதலியோரின் மனதைத் திடீரென மாற்றிவிட்டது! அவர்கள் நல்ல சீர்திருத்தங்கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ராஜகோட் விஷயத்தில் காந்திஜி தோல்வியடைந்ததாக அவர் அறிக்கை வெளியிட்டபோதிலும், அவர் வெற்றியடைந்திருக்கிறாரென்றே நான் கருதுகிறேன்.

ஆம், எதிர்பாராத வெற்றி! அதற்குச் சந்தேகமில்லை.

ஆனால், ஒருவிஷயம்; காந்திஜியின் அறிக்கையைக் கண்டு, அவருடைய எதிரிகள் கிண்டல் செய்யலாம். ஆனால், அவ்வாறு கேலி செய்யத் துணிபவர்கள், ஒரு சத்தியவந்தரின் மனப்போக்கை அறியாத மண்டுகள் என்றே சொல்லுவேன். தவறு என்று தெரிந்ததும், காந்திஜி பிடிவாதஞ் செய்யவில்லை; உடனே தவறை ஒப்புக்கொண்டார்; பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இதுவே சத்தியவந்தருக்கு அழகு; ஒரு உண்மையான சத்தியாக்கிரகிக்குரிய லக்ஷணம் இதுவே. காந்திஜி சத்தியவந்தர்; உலகப் பெரியார். அஹிம்சா மூர்த்தி என்பது இதிலிருந்து தெளிவாகிறது. காந்திஜியின் மதிப்பு உலகில் இன்னமும் அதிகரிக்குமே யொழிய, ஒருபோதும் குறையாது. காந்திஜி பிடிவாதக்காரர், "குட்டி ஹிட்லர்" என்றெல்லாம் அவருடைய எதிரிகள் விசேஷமாகச் சு. ம. தோழர்கள் காந்திஜியைக் குறைகூறுகிறார்கள். அந்தத் தோழர்கள் காந்திஜியின் அறிக்கையை ஒரு முறைக்குப் பன்முறை படித்துப் பார்ப்பார்களாக.



ராஜகோட்டுக்குச் செல்லும் வழியில், மகாத்மா காந்தி பம்பாயில் இறங்கியபோது எடுத்த படம். காந்திஜிக்கு முன்னால் கஸ்தூரிபாய் காந்தி வருகிறார். அவர்களை ஏராளமான ஜனங்கள் வரவேற்றனர்.

ஆம், காந்திஜியின் சத்திய வாழ்க்கை, அஹிம்சா தர்மத்தின் மேன்மை இன்னமும் ஒருபடி உயர்ந்து விட்டது. அது போகட்டும்; காந்திஜி-சுபாஷ் பாபு கடிதப் போக்கு வரத்து என்னவாயிற்று?

அவை வெளிவந்துவிட்டன. அந்தக் கடிதப் போக்குவரத்துக்களை ஊன்றிப் படித்தவர்களுக்கும், காந்திஜியின் பெருமையும், பெருந்தன்மையான குணமும் தெறறென விளங்கியிருக்கும். காந்திஜி ஆதி முதல் சுபாஷ்பாபுவை சுதந்திரமாக நடந்துகொள்ளும்படியே கூறியிருக்கிறார். அவர் உரிமையில் தலையிட காந்திஜிவிரும்பவில்லை. சுபாஷ்பாபுவுக்கு ஒரு குருவைபோல் சிறந்த யோசனைகள் சொல்லியிருக்கிறார். சுபாஷ் பாபு என்னமோ, ஒரு பெரிய போராட்டத்தை உடனே ஆரம்பிக்கவேண்டுமெனக் காந்திஜிக்கு யோசனை கூறினார். காந்திஜி ஒரு பெரிய போர் வீரர்; பெரிய தளகர்த்தர்; பல போராட்டங்களை நடத்தி நல்ல அனுபவம் பெற்ற ஜெனரல்; அவருக்கு ஒரு போராட்டத்தை நடத்தத் திறமையுண்டு; நல்ல ஆற்றலுமுண்டு. எந்தச் சமயத்தில், எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த விதமான போராட்டத்தை நடத்த வேண்டுமென்பது காந்திஜிக்குத் தெரியும். அவருககு யாரும் யோசனை சொல்லவேண்டியதில்லை. என்றாலும், சுபாஷ்பாபு காந்திஜிக்கு ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கும்படி யோசனை சொன்னார். காந்திஜி என்ன பதிலிறுத்தார்? தேசம் தயாராக இல்லை; காங்கிரசில் ஊழல்கள் மலிந்து வருகின்றன. ஆகவே, முதலில் காங்கிரஸ் ஊழல்களைப் போக்கிக் காங்கிரசைப் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்றார். சுபாஷ் பாபு அதை விபரீதமாக நினைத்துக் கொண்டார். காந்திஜி ஒரு போராட்டத்துக்குத் தயாராக இல்லை; அவர் பிரிட்டிஷாருடன் பேரம் பேசி, பெடரேஷனை ஆதரிக்கப் போவதாக நினைத்துக் கொண்டார். இது தவறான எண்ணம். சுபாஷ்பாபுவைவிடக் காந்திஜிக்குத் தேசத்தின் நிலைமைநன்கு தெரியும். அவரைவிட காந்திஜிக்கு அனுபவமும், ஆற்றலுமுண்டு. காந்திஜியைக் குறைகூறும் சுபாஷ் பாபுவுக்கு, ஒரு போராட்டத்தை நடத்த ஆற்றலுண்டா? எந்தப் போராட்டத்தையும் நடத்த அனுபவம் உண்டா? கிடையாது. சுபாஷ் பாபு பெரிய தியாகி; அதை நான் மறுக்கவில்லை. ஆனால், சுபாஷ் பாபுவுக்கு அனுபவம் கிடையாது. அவரிடம் உறுதியான கொள்கையும் கிடையாது. ஒரு காலத்தில் அவர் காந்திஜியை எதிர்த்தவருண்டு. சாத்வீகமும், அஹிம்சையும் இந்திய சுதந்திரத்தைக் கொண்டுவராது என்றார். இந்தியாவுக்குப் பாஸிஸமே வேண்டுமென்று, வியன்னாவிலிருந்து அறிக்கை மேல் அறிக்கை விட்டார். அவரை இரண்டாமுறையாக, ராஷ்ட்ரபதி தேர்தலுக்குத் தேர்ந்தெடுக்குமுன், காந்தீயத்தில் நம்பிக்கை உண்டு என்றார். ஆனால், இன்று காந்தியம் தேசத்துக்கு உகந்ததல்ல; அதை அவர் ஏற்றுக்கொள்ள முடியாது என்று இன்று சொல்லுகிறார். இவ்வாறு கொள்கையில் அடிக்கடி மாறுபடும் சுபாஷ் பாபுவுக்கு, ஒரு போராட்டத்தை நடத்தத் திறமை இருக்குமாவென்பதை வாசகர்களே

(அடுத்த பக்கம் பார்க்க)

கிளிப்பேச்சு

(முன் பக்கத் தொடர்ச்சி)

யூகித்துக்கொள்ளட்டும். பண்டித ஜவார்லால் போக மறுத்த உனுவா வாலிபர் மகா நாட்டில், சுபாஷ் பாபு தலைமை வகித்துப் பேசியதே நான் கூறுவதற்குப் போதிய சான்ருகும்.

மெய்தான்; ஆனால், சுபாஷ் பாபு ஆரம்பித்திருக்கும் புதிய கட்சி உருப்படுமோ?

உருப்படுமென்று நான் நினைக்கவில்லை. அவர் கட்சி அனுவசியமென்று பல தலைவர்கள் கருதுகிருர்கள். பலர் கண்டித்தும் வருகிருர்கள். ஆனால், அவர் காங்கிரஸிலுள்ள தீவிரவாதிகளை அவர் கட்சியில் இழுத்துக்கொள்ள நினைக்கிருர். அதற்காகத் தீவிரப் பிரசாரஞ் செய்து வருகிருர். தீவிரவாதிளிடையே பிளவை உண்டுபண்ண முயற்சித்து வருகிருர். தீவிரவாதிகளில் முக்கியமானவர் அவர் கட்சியில் சேர விரும்பவில்லை சுபாஷ் பாபு கட்சி, காங்கிரஸில் பிளவையே உண்டுபண்ணுமென்று கருதுகிருர்கள். ஆனால், ஒரு பகுதி தீவிரவாதிகள் சுபாஷ் பாபுவை ஆதரிக்கத் தயாராக இருக்கின்றனர். அவர்கள் அந்தக் கட்சியில் எந்த நிமிஷத்திலும் குதிக்கலாம். அவர்கள் அப்படிக் குதித்தால் அதில் ஆச்சரியமொன்றுமில்லை! ஆனால், ஒன்று நிச்சயம்; சுபாஷ் பாபுவின் புதிய கட்சி எப்படி உருப்படாமற் போகுமோ, அதேபோல், தீவிரவாதிகளின் கட்சியும் போஸ் கட்சியுடன் சேர்ந்து மடியவேண்டியதுதான். "உன்னால் நான் கெட்டேன்; என்னால் நீ கெட்டாய்''என்று இரு கட்சிகளும் கடைசியில் தோப்புக்கரணம் போட வேண்டியதுதான்!

உண்மைதான்; அந்த நிலைமைக்கே தீவிரவாதிகள் வரப் போகிருர்கள். அதற்குச் சந்தேகமே வேண்டாம்.

மகாத்மா காந்திக்கும், சுபாஷ் பாபுவுக்குமிடையே சுமார் 34 கடிதங்கள் போக்குவரத்தாகி யிருக்கின்றன. மார்ச்சு மாதம் 24ந் தேதியிலிருந்து, மே மாதம் 5ந் தேதி வரை இந்த 34 கடிதங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இருவருக்குமிடையே சுமார் 13 தந்திகள் பறந்தன. முடிவு என்ன? ஒன்றுமில்லை சுபாஷ்பாபு பிடிவாதமாகத் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்தார். சுபாஷ்பாபுவை சில பத்திரிகைகள் பாராட்டுகின்றன. சு. ம. காரரும், சு. ம. பத்திரிகைகளும் சுபாஷ்பாபுவைப் பாராட்டுவதுதான் வேடிக்கை! சென்ற வருடம் அவர் தமிழ் நாட்டுக்கு வரவிருந்தார். அப்பொழுது அவருக்குக் கருப்புக் கொடி பிடிக்கச் சு. ம. காரர் தயாராக இருந்தார்கள். இனிமேல், சுபாஷ்புாபு தமிழ்நாட்டுக்கு வந்தால், சு. ம. கொடிகளைப் பிடித்து சு. ம. காரர் சுபாஷ் பாபுவை ஆடம்பரமாக வரவேற்பார்களென்று நினைக்கிறேன். ரொம்ப சந்தோஷம்! சுபாஷ்பாபுவுக்குத் தமிழ் நாட்டில் எதிர்ப்பில்லாத வரவேற்புக் கிடைக்க வேண்டுமென்பதே எனது ஆவல். இது ஒருபுறமிருக்க, உனுவில் சுபாஷ்பாபு முஸ்லிம் லீக்கைப் பாராட்டிப் பேசியதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. இதே முஸ்லிம் லீகை சுபாஷ் பாபு கண்டித்ததுண்டு. அது பிற்போக்கான கட்சி, முஸ்லிம்களிடையே துவேஷப் பிரசாரத்தைப் பரப்பி வருவதாகக் கூறியிருக்கிருர். உனுவில் அதற்குப் புகழ்மாலை பாடி இருக்கிருர். ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு முஸ்லிம் லீகையும் பயன்படுத்திக் கொள்ளலாமென்று சொல்லுகிருர். ஆனால், முஸ்லிம்களோ ஏகாதிபத்தியத்தை ஆதரித்து, யுத்தத்தில் உதவிச் செய்யத் தயாராக இருக்கிருர்களென்பது சுபாஷ் பாபுவுக்குத் தெரியாது போலும்! அவருடைய வங்காளத்திலேயே, ஹக் மந்திரி சபையார், பிரிட்டன் யுத்தத்தில் சம்பந்தப்பட்டால், அதற்கு வங்க மக்கள் உதவிச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிருர்கள். அதேபோல் பாஞ்சாலத்திலும்; இதற்கு சுபாஷ்பாபு என்ன சொல்லப்போகிருர்? சுபாஷ் பாபு காங்கிரசை எதிர்த்து ஒரு புதிய கட்சியை ஆரம்பித்ததைவிட, அவருடைய சொந்த மாகாணத்தில், ஹக் மந்திரி சபையை முறியடித்து, அங்கு காங்கிரஸ் மந்திரி சபையை ஏற்படுத்த வேலை செய்தால் எவ்வளவோ நலமாயிருக்கும். தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சையெடுக்கத் தம்பி, கும்பகோணத்தில் கோதானம் செய்வதுபோல், புதிய கட்சியை ஏற்படுத்திக் காங்கிரசை எதிர்க்கச் சுபாஷ்பாபு புறப்பட்டிருக்கிருர். அவர் கட்சி உருப்படாமல் போவதோடு, சுபாஷ் பாபுவும் செல்வாக்கிழந்து, அரசியல் துறவு கொள்ளவேண்டிய நிலைமைதான் ஏற்படக்கூடும். சுபாஷ்பாபு அதற்கு இடம் கொடுக்கக்கூடாதென்பதே எனது மனப் பூர்வமான ஆவல். ஆனால், அவர் போக்கோ அதற்கு மாருக இருக்கிறது.

அதுபோகட்டும்; வேறு விசேஷமுண்டா?

ஆம்; 21ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று இந்தியாவெங்கும் அரசியல் கைதிகள் தினமாகக் கொண்டாட வேண்டுமென ராஷ்ட்ரபதி ராஜன் பாபு அறிவித்திருக்கிருர். அரசியல் கைதிகள் எல்லோரையும் விடுதலை செய்யும்படி, காந்திஜி ஹக் மந்திரி சபையை எவ்வளவோ கேட்டுக் கொண்டார். ஹக் மந்திரி சபையார் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டார்கள். பல அரசியல் கைதிகளை இன்னமும் விடுதலை செய்யாமல், விசாரணைக் கைதிகளாகவே வைத்திருக்கின்றனர். ஆகவே, அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பிரச்னை மாகாண பிரச்னையல்ல; அது அகில இந்திய பிரச்னையாகி விட்டது. ஆகவே, இந்தியாவெங்கும் இது சம்பந்தமாகக் கிளர்ச்சி செய்து, ஹக் மந்திரி சபையைப் பணியவைக்க வேண்டியது அவசியமாகும். இதற்குத் தீவிரப் பிரசாரம் அவசியமென்பதில் சந்தேகமில்லை. பண்டித ஜவார்லால் சில தினங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார்; அவர் அலகாபாத்திலே தங்கியிருந்தார். இப்பொழுது லக்ஷ்மணபுரிக்குப் போயிருக்கிருர். அங்கு நடந்துவரும் ஷியா-ஸுனி கலகத்தை நிறுத்தி, அவர்களுக்குள் சமரசத்தை உண்டுபண்ண வேலை செய்து வருகிருர். முஸ்லிம் தலைவர்கள், இந்தச் சமரசத்தில் தலையிடத் துணியவில்லை. காங்கிரஸ் தலைவர்களே சமரசத்துக்காக வேலை செய்து வருகிருர்கள். சமஸ்தானங்களைக் கவனித்தால், தால்ச்சார் சமஸ்தானத்தில் இன்னமும் அடக்குமுறை தலைவிரி கோலமாகவே இருக்கிறது. அங்கு, போலீஸ் படைகளை அனுப்பக் காங்கிரஸ் சர்க்கார் மறுத்துவிட்டார்கள். ஆகவே, ஹைதராபாத்திலிருந்து போலீஸ்படை போயிருக்கிறது. பவநகர் சமஸ்தானத்திலும் முஸ்லிம்கள் கலகஞ் செய்து வருகிருர்கள். அங்கு நடந்த சமஸ்தான மக்கள் மகாநாட்டுக்குச் சர்தார் வல்லபபாய் பட்டேல் தலைமை வகிக்கச் சென்ருர். அவரை பவநகர் மக்கள் ஆடம்பரமாக வரவேற்று, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அந்நேரத்தில் சுமார் 100 முஸ்லிம்கள், கத்தி, கொம்பு, சொடாரிகளுடன் பாய்ந்து, ஊர்வலமாக வந்தவர்களைத் தாக்கினர்; பலருக்குக் காயம். சர்தார் பட்டேலை போலீஸ் பந்தோபஸ்தில் கொண்டு போக வேண்டியதாயிற்று. இது சம்பந்தமாக 100 முஸ்லிம்கள் கைதியாகியிருப்பதாகத் தெரிகிறது. இது முஸ்லிம்கள் சூழ்ச்சியா, அல்லது, பவநகர் மன்னர் சூழ்ச்சியாவென்பது தெரியவில்லை. திருவாங்கூர் சமஸ்தானப் போராட்டம் நிற்கவில்லை; திவான் சர். சி. பி. இடையிடையே வெடிகுண்டு போட்டுக்கொண்டுதானிருக்கிருர்! சமீபத்தில்கூட இரண்டொரு தலைவர்களை அங்கு கைது செய்திருக்கிருர்கள். திருவாங்கூர் பொறுப்பாட்சிப் போராட்ட சம்

(அடுத்த பக்கம் பார்க்க)



200 வாட்சுகளே கைவசமிருக்கின்றன.

உடனே முந்துங்கள்.

மறு சமயம் இந்த விலைக்குகிடைப்பதரிது.

1. சரியான மணியை காண்பிக்கக்கூடிய 5 வருஷம் காரண்டியுள்ள குரோமியம், லீவர் ரவுண்டு கடியாரம் 1-க்கு ரூ. 2-14-0. 2. மேற்கண்ட பிரகாரம் 18 காரட்டு ரோல்டுகோல்டு கடியாரம் 1-க்கு ரூ 3-14-0. 3 இந்த படத்தில் காண்பித்த மாதிரி லீவர், குரோமியம் ரிஸ்டு வாட்சு 1-க்கு ரூ. 4-8-0. 4. 18 காரட்டு ரோல்டுகோல்டு கடியாரம் 1-க்கு 7-8-0 (தபால் சார்ஜ் பிரத்தியேகம்)

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனு பஜார் ரோட், மதருஸ்.

இந்தியன் ரிலீப் பாங்க், லிமிடெட்

INDIAN RELIEF BANK, Ltd.,

(பிரிட்டிஷ் இந்தியாவில் இணைக்கப்பட்டது)

ரெஜிஸ்ட்டர்டு ஆபீஸ்: –சென்தோம், மைலாப்பூர், மதராஸ்.

கிளை ஸ்தானங்கள்:—கிடங்குத் தெரு, மதராஸ்; கோல்லம், தென்காசி.

ஏழைகள் பணத்தைச் சிறுகச் சிறுக க்ஷேமித்து வைப்பதற்கும், ஏழைக் கைம் பெண்களின் பணத்துக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கும் "இந்தியன் ரிலீப் பாங்கி''தான் ஏற்ற இடம். ஏன்? இந்த பாங்கை நடத்துபவர்கள் சிக்கனமாகவும், திறமையாகவும் நடத்தி வருகிருர்கள். ஏழைகளுக்கும், வர்த்தகர்களுக்கும் கூடியவரையில் கஷ்ட நிவாரணம் அளிப்பதையே ஒரே சத்தியமான நோக்கத்துடன் இந்த பாங்கை நடத்தி வருகின்றனர். உங்கள் பணத்துக்குப் பங்கமில்லை; உங்கள் கஷ்டங்களுக்கு நிவாரணம் கிடைக்கும் நிரந்தரமான டிபாஸிட் தொகைகளுக்கு நியாயமான வட்டி கிடைக்கும்.

நிரந்தரமான டிபாஸிட் தொகைகளுக்கு:—6, 12, 18, 24 மாதங்களுக்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு முறையே 4, 5, $5\frac{1}{2}$, 6 வீதம் வட்டியுண்டு.

நீங்கள் இரத்தஞ் சிந்தப் பாடுபட்டுழைக்கும் பணம் விரையமாகாமல் காப்பாற்றுவதற்கு இந்தப் பாங்கியின உதவியை நாடுங்கள்.

வி. மரிய பாக்கியம்
மானேஜர்.

பி. கே. தாமஸ் பி. எ., பி. எல்., பி. கம்
மானேஜிங் டைரக்டர்.

கிளிப்பேச்சு

(முன் பக்கத் தொடர்ச்சி)

பந்தமாகக் காந்திஜி என்ன கருத்துக் கொண்டிருக்கிறரென்பது தெரியவில்லை. ராஜகோட் தகராறு தீர்ந்ததும், திருவாங்கூர் சம்பந்தமாகக் காந்திஜி அவருடைய கருத்தை வெளியிடுவாரென்று நினைக்கிறேன்.

பம்பாய் மதுவிலக்குத் திட்டம் எப்படி வேலை செய்கிறது?

பார்சிகள் எதிர்ப்பு இருந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால், பம்பாய் கவர்னர் ரொம்பப் பெருந்தன்மையாக நடந்துகொண்டார். மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்ததும், கவர்னர் மாளிகையில் நடக்கும் விருந்து முதலிய வைபவங்களுக்கு மதுவை உபயோகிப்பதில்லையென்று தீர்மானித்துவிட்டார்; இந்தத் தீர்மானத்தைக் காங்கிரஸ் மந்திரிகளுக்குத் தெரிவித்திருக்கிறர். சட்டசபையிலுள்ள ஐரோப்பியர்கூட, மது விலக்கை ஆதரிக்காவிட்டாலும் சட்டத்துக்குக் கட்டுபட்டே தீருவோமெனச் சொல்லிவிட்டார்கள். மதுவில் வளர்ந்துவரும் வெள்ளையருக்கு ஏற்பட்ட நல்ல புத்திகூட பார்சிகளுக்கு ஏற்படவில்லை. தென்னட்டு, சு. ம. காரருக்கும், பார்சிக்காரருக்கும் இதில் நல்ல ஒற்றுமை இருக்கிறது. பார்சிக்காரர், சு.ம. காரரை ஏராளமாகப் பம்பாயில்கொண்டு போய் இறக்குமதி செய்து, மதுவிலக்கை எதிர்த்து மறியல் செய்ய ஏற்பாடுகள் செய்துவருவதாகக் கேள்வி. சு. ம. காரருக்குப் பணந்தான் அவசியம். பணமில்லாமலல்ல அதிலும் முன்பணமில்லாமல் எந்தக் காரியத்திலும் பிரவேசிக்க மாட்டார்கள். ஆகவே, பார்சிக்காரர் பணம் வசூல் செய்யும் வேலையில் இப்பொழுது மும்முரமாக இருக்கிறர்கள். பார்சிக்காரரோ பெரும்பாலும பணக்காரர்; அவர்களுக்குப் பணம் பஞ்சமே கிடையாது. சு. ம. காரருக்கு நல்ல வேட்டைதான்! இப்பொழுதே பல சு. ம. காரருக்கு நாவில் ஜலஞ் சொட்டுவதாக வதந்தி! எப்படியோ பிழைத்துப் போகட்டும்.

ரொம்ப சந்தோஷம்; அந்தத் தர்ம காரியம் ஒருபுறம் நடக்கட்டும். வேறு என்ன விசேஷம்?

தமிழ்நாட்டில் ஒரு விசேஷம். தமிழ்நாட்டிற்கே மத்திய இடமாகவிருக்கும் திருச்சியில் ரேடியோ அமைத்திருக்கிறர்கள். அதைக் கவர்னர் ஆரம்பித்து வைத்தார். கவர்னரும்-முதன் மந்திரியுமே முதலில் பேசினர்கள். இனிமேல்தமிழருக்குரேடியோவசதி இருக்குமென்பதில் சந்தேகமில்லை. விற்பனைவரி எதிர்ப்புக்கு தமிழ் நாடெங்கும் ஆதரவு கிடைக்கும், காங்கிரஸ் சர்க்காரைக்கவிழ்த்து விடலாமெனச் சு. ம. காரரும், ஜஸ்டிஸ் கட்சியினரும், வெளவால் போன்ற சில லீக்காரரும் நினைத்தார்கள். ஆனல், விற்பனை வரிக்கு ஆதியில் இருந்துவந்த எதிர்ப்புக் குறைந்து விட்டது. சு. ம. காரரும், ஜஸ்டிஸ் கட்சியினரும், ஹமீத்கான் கலிபுல்லா ராவுத்தர் போன்ற சு. ம. லீக்காரரும், சு. ம. கிறிஸ்துவர் பன்னீர் செல்வமும் ஏமாற்றமடைந்தனர். என்ன செய்வது? சென்னை சட்ட சபையில், கடைசி நேரத்தில் வெளியேற்ற நாடகம் நடத்தினர்கள். பாவம்! அந்த நாடகத்தைக கண்டு களிக்கக் கூட யாருமில்லை. இது அசெம்பிளியில் நடந்த கூத்து! ராஜாங்க சபையில் சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரு போன்ற சில ஜஸ்டிஸ் கட்சியினர் வேறுவிதமான கூத்து நடத்தினர். புகையிலை வரி, விற்பனை வரி போன்றவைகளை எதிர்த்தார்கள். அவர்களுக்கு டி. எ. ராமலிங்கம் செட்டியார் நல்ல சூடு கொடுத்தார். ஜஸ்டிஸ் கட்சியார் செய்த துரோகத்தைப் பச்சையாக வெளுத்து வாங்கினர். மதுவிலக்கையும், புகையிலை வரியையும், ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரத்திலிருந்தபோது ஆதரித்தார்கள். அதே ஜஸ்டிஸ் கட்சியிலிருந்த கே. வி. ரெட்டிகாரும் அதை ஆதரித்தார். 1924-ம் வருடம் கோயம்புத்தூரில் அதை ஆதரித்துத் தெளிவாகப் பேசியிருக்கிறர். அப்பேர்ப்பட்ட ரெட்டிகாரு, இன்று மதுவிலக்கையும், புகையிலை வரியையும் எதிர்ப்பது கேலிக் கூத்தல்லவா? காலத்துக்குத் தகுந்தாற் போல் வேஷம் போடும் திருட்டுப் புத்தியல்லவாவென்று கேட்கிறேன். ஜஸ்டிஸ் கட்சியினரின் வெளி வேஷம், இரு சட்ட சபைகளிலும் நன்ருகத் வெளி வந்துவிட்டது. அவர்கள் கொள்கைக்காக எதிர்க்கவில்லை; காங்கிரஸ்காரர் அதிகாரத்துக்கு வந்துவிட்டார்களென்ற பொருமையாலேயே காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வரும் மசோதாக்களை எதிர்த்து வருகிறர்கள். இவர்கள் வஞ்சகஎண்ணத்தைத் தமிழ் மக்கள் நன்ருக அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குப் புத்தி படிப்பிக்க வேண்டியது இனிமேல் தமிழர் கடமைதான். தமிழர் அவர்கள் கடமையைச் செய்யத் தவற மாட்டார்களென்று நினைக்கிறேன்.

G. கன்னையா கம்பெனி

இரும்புப்பெட்டிவியாபாரம்
கவர்ன்மெண்டு
ரயில்வே, பாங்கு
கொவாபரேடிவ்சொஸைடி
வியாபாரிகளுக்கும், சப்ளையர்கள்

137, பிராட்வே, மதராஸ்

அருமையான அம்சம்!

சதர்ன் மோட்டார்ஸ்
(அடிசன் அண்டு கம்பெனி லிமிடெட்) மதராஸ்.



C-24

சிறு விஷயங்களிலும் விசேஷ கவனஞ் செலுத்துவதே உயர்தரமான இஞ்சினீரிங் வேலைக்கு அடிப்படையாகும்.

கிறிஸ்லர் கார்களின் இயந்திர மகிமையை குறிக்கும் சின்னம். இந்தச் சின்னமே கிறிஸ்லர் கார்களைத் தாராளமாகப் பிரித்துக் காட்டும்.

உலகமெங்கும் புகழ்பெற்ற கிறிஸ்லரே, மீண்டும் இஞ்சினீரிங் வேலையில் தலை சிறந்து விளங்குகிறது; அதில் வெற்றிபெற்று விளங்குவதும் அதுவே. இருவகையான சக்தி. ஸ்டீரிங் சக்கிரங்கள், கியர் ஷிப்ட்ஸ். சுகமாகக் காற்றுவாங்கி சவாரி போவதற்கேற்ற அழகான அமைப்பு, இவைகளில் கிறிஸ்லரே நல்ல பேரும் புகழும் பெற்று விளங்குகிறது! இது ஒரு அருமையான அம்சமல்லவா?

ராயல் கிறிஸ்லர் இம்பீரியல்

தமிழ் மணி

சென்னை—பிரமாதிஸு வைகாசிமீ 7உ (21—5—1939)

செப்படி வித்தை!

இந்திர ஜாலம், மந்திர ஜாலம், கோ ஜாலமெனப் பல ஜாலவித்தைகள் உண்டு. அந்த வித்தைகளில் செப்படி ஜால வித்தையும் ஒன்று. இந்த ஜால வித்தையில் ஜஸ்டிஸ் கட்சியார் கை தேர்ந்தவர்கள். சமயத்துக்குத் தகுந்தாற்போல் வித்தை காட்டுவார்கள்! ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரத்திலிருந்தபோது, மக்கள் நன்மையைக் கருதி, எந்த நல்ல காரியத்திலும் தலையிடத் துணியவில்லை. அவர்கள் பட்டம், பதவி பெறுவதிலும், உறவினருக்கு உயர்ந்த வேலைகள் தேடிக்கொடுப்பதிலுமே கண்ணுயிருந்தார்கள். இன்று அவர்கள் பதவி போய்விட்டது. காங்கிரஸ்காரர் பதவியேற்று சர்க்காரை நடத்தி வருகிறார்கள் இது ஜஸ்டிஸ் கட்சியினருக்கு வயிற்றெரிச்சல். காங்கிரஸ் சர்க்காரை எதிர்ப்பதிலேயே முனைந்திருக்கிறார்கள். அவர்கள் அதிகாரத்திலிருந்தால், வானத்தை வில்லாக வளைத்து விடுவதாகவும், கடல் மணலைக் கயிறாகத் திரித்துவிடுவதாகவும் செப்படி வித்தைகளைக் காட்டுகிறார்கள். ஆனால், 16 வருடங்களாக அதிகாரத்திலிருந்தார்களே அப்பொழுது இந்த செப்படி வித்தைகளையெல்லாம் எங்கே மூட்டை கட்டி வைத்திருந்தார்கள்?

ஆண்மை இல்லை

ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரத்திலிருந்தபோது, 1920ம் வருடத்திலேயே மதுவிலக்குச்செய்யவேண்டுமென ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் வந்தது. 20 வருடங்களில் மாகாணம் பூராவும் மதுவிலக்கு ஏற்படுத்திவிட வேண்டுமென்பதே அந்தத் திருத்தம். திருத்தம் நிறைவேறியது. மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்ததா? இல்லை. அந்தச் சட்டத்தை எங்கேயோ ஒரு மூலையில் போட்டுவைத்தார்கள். அதன்பின் புகையிலைக்கு வரி விதிக்கவேண்டுமென்று சட்டஞ்செய்தார்கள். எதிர்ப்பு அதிகரிக்கவே அதுவும், மதுவிலக்குச் சட்டத்தின் கதியே அடைந்தது. அந்தச் சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஆண்மை இல்லை. ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நல்ல எண்ணம் இருந்தாலல்லவோ தைரியம் வரும். ஜஸ்டிஸ் கட்சியினருக்கு அந்த எண்ணமும் கிடையாது; ஆண்மையுமில்லை.

ரெட்டிகாரு வீச்சு!

அக்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி ஜோதியில் கலந்திருந்த, சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரு, கோயம்புத்தூரில் நடந்த ஒரு மகாநாட்டில் என்னபேசினார் தெரியுமா?

"சென்னை சர்க்காருக்கு 4 கோடி ரூபாய் கலால் வருமானம்; அதைக் கொடுப்பவர் பெரும்பாலும் ஏழைகள். சீனுவில் ஜனங்கள் அபினியைத் தின்று கெட்டுப்போகிறார்கள். அந்தச் சீனர்களைக் காப்பாற்றுவதற்காக அபினி உற்பத்தியையும், ஏற்றுமதியையும் இந்திய சர்க்கார் குறைத்துப் பல கோடி ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறார்கள். இந்த நிலைமையில், நமது ஜனங்களைக் காப்பாற்ற இந்த அற்பத் தொகையைச் சர்க்கார் தியாகஞ் செய்யக்கூடாதா? இந்தக் கலால் வருமானத்தை ஈடு செய்வதற்காக, மரணவரி, சொத்து வரி, புகையிலை வரி முதலிய புது வரிகள் போடலாம்!" என்றார்.

இதே சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரு, புகையிலை வரியை எதிர்த்தார்; காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்த மதுவிலக்குச் சட்டத்தை எதிர்த்தார்; இன்று விற்பனை வரியையும் எதிர்த்து வருகிறார்! 1924ம் வருடம் வீரசூரப் புலிபோல் பேசிய சர். கே. வி. ரெட்டியின் புத்தி, 1939ம் வருடத்தில் தலைகீழாகப் புரண்டுவிட்டது! இவரைப் போலவே ஜஸ்டிஸ் கட்சிப் புலிகளெல்லாம் மதுவிலக்குச் சட்டத்தையும், விற்பனை வரிச் சட்டத்தையும் எதிர்த்து வருகின்றனர். இதை ஒரு செப்படி வித்தையென்று சொல்லாமல் வேறு என்ன சொல்லுவது?

மூளை எங்கே?

1920ம் வருடம் சென்னை மாகாண நிர்வாகச்செலவு 9 கோடி ரூபாய்தான். அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் சர்க்காரிடம் சுமார் $3\frac{1}{4}$ கோடி ரூபாய் மிச்சமிருந்தது. இந்திய சர்க்காருக்கு மாகாண சர்க்கார் கொடுக்க வேண்டிய தொகையில், சுமார் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் தள்ளிக்கொடுக்கவும் தயாராக இருந்தார்கள். என்றாலும், ஜஸ்டிஸ் சர்க்காருக்கு மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர ஆண்மை இல்லாதுபோயிற்று. 1920 வருடம் மதுவிலக்கு ஆரம்பித்திருந்தால், இதற்குள் மதுவிலக்குப் பூர்ண வெற்றியடைந்திருக்கலாம். சென்னை மாகாண மெங்கும் மதுவிலக்கையொழிக்க ஆதரவு கொடுத்தார்கள். ஆனால், ஜஸ்டிஸ் கட்சியாரோ மூளையை கடன் கொடுத்துவிட்டார்கள்! அது மட்டுமா? 1930ம் வருடம் மாகாண சர்க்கார் செலவையும் 16 கோடிக்கு உயர்த்திவிட்டார்கள்! இதுதான் அவர்கள் செய்த பெரிய நன்மைகளில் ஒன்று!!

காங்கிரஸ் கடமை

காங்கிரஸ்காரர் இன்று பதவியிலிருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களுக்கு நன்மை செய்யும் ஒரே நோக்கத்துடனிருக்கின்றனர் மதுவை, மாகாணமெங்கும் அடியோடு ஒழிக்கக் கங்கணம் கட்டியிருக்கிறார்கள். கல்வியின்மையைப் போக்க வேண்டியதும் அவர்கள் கடமை. ஏழு வருடங்களுக்குள் வார்தா திட்டத்தை அடிப் படையாகக் கொண்ட கட்டாய ஆரம்பக் கைத்தொழில் கல்வியை சுமார் 10 கோடி ரூபாய்ச் செலவில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. விவசாயிகள் குறுக்கை முறிக்கும் அபார வரியையும், விவசாயிகள் கடனையும் குறைக்க வேண்டியது அவசியம். இதற்குப் பெருவாரியாகப் பணம் வேண்டும். பணத்துக்கு எங்கே போவது? இவ்வித முக்கியமான நன்மைகளைச் செய்யவே காங்கிரஸ் சர்க்கார் புது வரிகள் போட்டு வருகிறார்கள். இந்த வரிகளைக் கொடுக்க வேண்டியது பொது மக்களுடைய கடமையல்லவா? ஜஸ்டிஸ் கட்சியார் செய்தது போல், காங்கிரஸ் சர்க்கார் செப்படி வித்தை செய்ய மாட்டார்கள். அவர்கள் நன்மை செய்வதிலேயே முனைந்திருக்கிறார்கள். ஆகவே, காங்கிரஸ் சர்க்காரை ஆதரிக்க வேண்டியது ஜனங்கள் கடமையாகும். ஜஸ்டிஸ், சு. ம காரர், காங்கிரஸ் மீதுள்ள வயிற்றெரிச்சலால் ஆயிரம் குறை கூறலாம். நல்ல கார்யத்துக்குப் பல பக்கமும், தடைகள் ஏற்படத்தான் செய்யும். ஆனால், ஜனங்கள் எதிரிகள் கூறும் குறைகளைக் காதில் போட்டுக் கொள்ளவேகூடாது.

கிணறு வெட்டப் பூதம்!

பிரிட்டிஷாருக்கு நல்ல திசை இல்லை; நாலா பக்கமும் அவர்களுக்கு இடி; எங்கும் அவர்களை ஆபத்தே சூழ்ந்திருக்கிறது! அந்த ஆபத்துக்களில் பாலஸ்தீனமும் ஒன்று. பாலஸ்தீனத்தை யூதர்களின் தாயகமாக்கப் பிரிட்டிஷார் நினைக்கிறார்கள். யூதர்கள் மீதுள்ள அபிமானத்தினலா? இல்லவே இல்லை. சுய அபிமானந்தான் இதற்குக் காரணம். அயர்லாந்தில், அல்ஸ்டர் மாகாணத்தில் வெள்ளையரைக் குடியேற்றி, இன்று அயர்லாந்தை ஆட்டிவைத்துக்கொண்டிருப்பது போல், பாலஸ்தீனம் அரபியர்களையும் ஆட்டிவைக்க எண்ணியே, அங்கு யூதர்களைக் குடியேற்றினார்கள். ஆனல, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல், அரபியர் எதிர்ப்பு அதிகரித்தது. உடனே பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கச் சூழ்ச்சி செய்தார்கள். அந்தச் சூழ்ச்சி பலிக்கவில்லை. அரபியர் எதிர்ப்பு இன்னமும் தீவிரமாயிற்று. உடனே லண்டன் மகாநாட்டைக் கூட்டினார்கள்.

ஒரு திட்டம்

அந்த மகா நாட்டில் ஒரு அரசியல் திட்டம் தயாரித்தார்கள். 5 வருடங்களுக்குப் பாலஸ்தீன அரபியருக்கு அதிக உரிமை கொடுக்கப்படும். சகல இலாகாக்களும் பாலஸ்தீனம் மக்களிடம் இருக்கும். அந்த இலாகா தலைவர்கள் அடங்கிய ஒரு கமிட்டி, மந்திரி சபையைப் போல் விளங்கும். 5 வருடங்களில் இன்னமும் 75000 யூதர்களைப் பாலஸ்தீனத்தில் குடியேற்ற அனுமதியளிக்கவேண்டும். அந்தக் காலம் முடிந்ததும், 10 வருடங்களில் பூர்ண சுதந்திரம் கொடுப்பதாகப் பிரிட்டிஷார் கூறினார்கள். புண்ணிய க்ஷேத்திரங்களைப் பாதுகாக்கும் உரிமையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நன்மைகளைப் பாதுகாக்கச் சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகப் பிரிட்டிஷாருக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்ற நிபந்தனை யொன்றையும் விதித்தார்கள். இதை எகிப்தில் எதிர்க்கிறார்கள். அரபிய நாடுகள் யாவுமே இந்தத் திட்டத்தை வேண்டாமென்று சொல்லுகின்றன. அரபியர் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்காமல், யூதர்களிடம் அனுதாபம் காட்டிப் பிரிட்டிஷார் காலங் கடத்துவதின் ரகசியம் சுயநலமேயன்றிவேறொன்றுமில்லை. பாலஸ்தீனம் மக்கள் அவர்கள், கிளர்ச்சியாலும், தியாகத்தாலும் சுதந்திரத்தை நிலை நாட்டிக் கொள்ள வேண்டும். பிரிட்டிஷார், பாலஸ்தீனம் சுதந்திரத்தை அப்படியே தூக்கிக் கொடுத்து விடுவார்களென்று கனவில்கூட நினைக்க வேண்டாம்.

யாரும் தடுக்கவில்லை!

ஆந்திரர் பிரிந்து போகத் துடிக்கிறார்கள். அவர்களைப் பிரிந்துபோக வேண்டாமெனத் தமிழர் கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதுபோல, சில ஆந்திரர், தமிழ் நாட்டினர்மீதும், மந்திரிகள்மீதும் சீறி விழுகின்றனர். ஆந்திரர் பிரிந்துபோனல் தமிழ் நாட்டினருக்கு லாபமேயொழிய நஷ்டமில்லை. சென்னை மாகாணத்தில் 24 ஜில்லாக்களுண்டு. ஆந்திர ஜில்லாக்கள் 11, தமிழ் ஜில்லாக்கள் 11, ஒன்று தென் கன்னட ஜில்லா, மற்றொன்று மலபார் ஜில்லா. தமிழ் நாடு விஸ்தீரணம் 49174 சதுர மைல்; ஆந்திர மாகாண விஸ்தீரணம் 64777 சதுர மைல். தமிழ் நாடு நில வருமானம் ரூபாய் 44316000; ஆந்திர மாகாண நிலவருமானம் 41653000 ரூபாய். தமிழ் நாடு கலால் வருமானம் 19429000, ஆந்திர மாகாணக் கலால் வருமானம் 14306000 ரூபாய். தமிழ் நாட்டின் ஜனத்தொகை 21416000; ஆந்திரர் 17170000 பேர். ஆந்திர மாகாண வருமானத்தில் வருடமொன்றுக்கு நீர்பாசனத்துக்காக 8,73,00,000 ரூபாய் செலவாகிறது; தமிழ் நாட்டுக்கு நீர்பாசனச் செலவு 39760000 ரூபாய்தான். ஆந்திர மாகாணம் பிரிந்துபோனல், யாருக்கு நஷ்டமென்று இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆகவே, ஆந்திரர் தாராளமாகப் பிரிந்து போகலாம்; அவர்களை யாரும் தடுக்கவில்லை.

மணியோசை

ராஜகோபாலாச்சாரியார்,
சென்னை.

முதன் மந்திரியே,

சென்னை சட்ட சபை, ராஜாங்க சபைக்கு வரும் ஜஸ்டிஸ் அங்கத்தினர், சுயமரியாதை கலந்த லீக் அங்கத்தினர், அங்குமின்றி, இங்குமின்றி "பெண்டுலங்கள்" போல் ஊசலாடிக் கொண்டிருக்கும் சுயேட்சை மெம்பர்கள் முதலியோருக்குக் கொஞ்சம் அவசரப்புத்தி அதிகம். விஷயத்தை நன்றாகக் கிரகித்து கொள்ளாமலோ, அல்லது அறியாமலோ அவசரப்பட்டு உங்களிடம் பல கேள்விகளைக் கேட்டு உபத்திரம் கொடுக்கிறார்கள். உங்களிலும் வயது முதிர்ந்த பழம் பெருச்சாளிகளாகிய, சர். கே. வி. ரெட்டி நாயுடுகாரே அறியாமையால் திண்டாடும்போது, மற்றச் சுண்டெலிகளைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? இது உங்களுக்குப் பெரிய தொல்லை. சட்ட சபைகள், சட்டப் பள்ளிக்கூடங்களைப்போலவே விளங்குகின்றன. நீங்களே அங்கு உபாத்தியாயர் வேலை பார்க்கவேண்டியதாகிறது. ஆதலால், இந்த அசெம்பிளி மெம்பர்களுக்கென ஒரு இராப் பள்ளிக்கூடம் ஆரம்பித்தால் நலமாயிருக்கும். ஹிந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்திய நீங்கள், இந்த அறை குறைச் சட்டசபை அங்கத்தினர்களுக்காக ஏன் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கக் கூடாது? அதனால் நன்மை ஏற்படும்; உங்கள் உபத்திரவமும் குறையும். உடனே இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வீர்களென்று நம்புகிறேன்.

டிங்—டாங்

எம். சி. ராஜா-ஆதிமூலம்,
சென்னை.

ஹரிஜன வீரர்களே!

சென்னை அசெம்பிளியில், சில ஜஸ்டிஸ்காரரும், பாதி சு. ம. லீக்காரரும், அசெம்பிளியிலிருந்து வெளியேறும் கூத்து நடத்தினார்கள். அவர்களுடன் நீங்களும் வெளியேறி, ஜஸ்டிஸ் கூத்தில் கலந்துகொண்டீர்கள். எதற்காக? உங்களைப் பிரபலப்படுத்திக்கொள்ளவா? அப்படியானால், உங்கள் எண்ணம் ஈடேறாது; உங்களை ஹரிஜன பிரமுகர் பலர் கண்டிக்கின்றனர். நீங்கள் செய்தது பெரிய தவறு என்று இடித்துக் கூறுகிறார்கள். இதற்கு என்ன பதில் கூறப்போகிறீர்கள்? நீங்கள் ஏழை ஹரிஜன மக்களின் பிரதிநிதிகள்.; ஹரிஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டியது உங்கள் கடமை. அதற்காக என்ன செய்ய வேண்டும்? ஹரிஜனங்கள் நன்மையில் அதிக சிரத்தை கொண்டுள்ள காங்கிரஸ் சர்க்காரை நீங்கள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் கடமையை மறந்து, காங்கிரஸ் சர்க்காரையே எதிர்க்கப் புறப்படுகிறீர்கள். அதினால், ஹரிஜனங்களுக்கு பெரும் துரோகஞ் செய்கிறீர்களென்பதை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. யார் எக்கேடு கெட்டால் என்ன? உங்களுக்குப் பதவியும், பேரும், புகழும் வேண்டும். அதற்காக ஹரிஜன மக்களை ஏணிப் படிகளாக உபயோகித்து வருகிறீர்கள். இப்பேர்ப்பட்ட நீங்கள் ஹரிஜனப் பிரதிநிதிகளாக இருப்பதிலும், இல்லாதிருப்பதே நல்லது. ஆதலால், உங்கள் பதவிகளை உடனே ராஜிநாமா செய்வதுதான் சரி. உங்களுக்கு அந்தத் தைரியம் வருமா? ஒருபோதும் வராது; உயிர் போனாலுஞ் சரி, உங்கள் பதவியை மட்டும் ஒருபோதும் விடமாட்டீர்களென்பதை நான் அறிவேன். பதவியை எப்படியோ கட்டியழுங்கள். ஆனால், மறந்தும் ஹரிஜனங்களுக்குத் துரோகஞ் செய்ய நினைக்காதீர்கள். எனது வேண்டுகோள் இது ஒன்றே.

டிங்—டாங்

மிஸ்டர். சல்தானா,
சென்னை.

கிறிஸ்துவப் புலியே!

சென்னை ராஜாங்க சபையில், விற்பனை வரியை எதிர்த்துப் பேசியபோது நீங்கள் சில வார்த்தைகள் கூறினீர்கள். அதைக் கேட்டு நான் வெட்கித் தலை குனிந்தேன். ஒரு கிறிஸ்துவர் இவ்வாறு மூளையைப் பறிகொடுத்துப் பேசுவதென்றால், அது கிறிஸ்துவ சமுகத்துக்கே பெரிய அபவாதமாகும். "சர்க்கார் மதுபானங்கள்மீது ஏன் போர் தொடுக்க வேண்டும்? பெண்கள், மதுபானம் முதலியவைகள்மீது ஆடவருக்குள்ள மோகம், உலகம் சிருஷ்டிக்கப்பட்ட காலமுதல் இருந்து வருகிறது! பெண்களை மறந்தாலும் மறக்கலாம், மதுபானங்களை மறக்கவே முடியாது!" என்று நீங்கள் சொன்னீர்கள். ஐயோ கர்மம்! ஒரு கிறிஸ்துவர் இவ்வாறு பேசியதைக் கேட்டு உலகம் சிரிக்குமென்பதில் சந்தேகமில்லை. உங்களுக்கு அந்த இரண்டு மீதும் அபார மோகமிருக்கலாம்; அதைக் காரணமாக வைத்துக் கொண்டு, ஆடவர் எல்லோரையுமே இப்படி இழிவு படுத்துவது நியாயமாகுமா? அதிலும், ஒரு கிறிஸ்துவர்! இதுவும் தலை விதிதான்!! மதுபானமும் மிருக இச்சையாகிய காமமுமே மானிடர் அழிவுக்கு முக்கிய காரணமாயிருந்ததென்பது உங்களுக்குத் தெரியாதா? கிறிஸ்துவ ஆகமங்களிலேயே இதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் உண்டு. அவற்றைப் படித்திருப்பீர்களென்றே நினைக்கிறேன். படிக்காவிட்டால், மீண்டும் அந்த ஆகமங்களை நன்றாகப் படித்துப் பாருங்கள். உங்கள் அறியாமையால், கிறிஸ்துவ சமுகத்தையே அவமானப் படுத்தவேண்டாம்.

டிங்—டாங்

சர். ஊஸ்மான்,
சென்னை.

மாஜி கவர்னரே,

ராஜாங்க சபையில், விற்பனை வரியை எதிர்த்த பழைய ஜஸ்டிஸ் புலிகளுக்கு நீங்கள் சரியான சவுக்கடி கொடுத்தீர்கள். "காங்கிரஸ் மந்திரிகள் கொண்டு வந்திருக்கும் விற்பனை வரியை எதிர்த்து வெள்ளையர் பேசியதில் துவேஷ உணர்ச்சி இல்லை; ஆனால், எதிர் கட்சியைச் சேர்ந்த இந்திய மெம்பர்கள் பேச்சில் துவேஷம் நிறைந்திருந்தது. பிரதம மந்திரியும், இதர காங்கிரஸ் மந்திரிகளும் பதவியிலிருக் கிறார் களென்ற பொறாமையும், வயிற்றெரிச்சலுமே இதற்குக் காரணம்!" என்றீர்கள். சரியான சூடு! ஜஸ்டிஸ் புலிகளுக்கு, உங்கள் பேச்சு கசப்பாக இருக்கலாம்; ஆனால், நீங்கள் பேசியது என்னமோ உண்மை; முற்றிலும் உண்மை. ஜஸ்டிஸ்காரரும், லீக்காரரும், சு. ம. தோழர்களும் காங்கிரஸ் மந்திரிகளை எதிர்ப்பதற்கு இந்த வயிற்றெரிச்சலே காரணம். உங்கள் சவுக்கடியும், சூடும், ஜஸ்டிஸ்காரருக்கு நல்ல புத்தியைக் கொடுக்குமென்று நினைக்கிறேன்.

டிங்—டாங்

காரியதரிசி
பாரதி சங்கம்,
சென்னை.

தோழரே,

தமிழுக்கு ஆபத்துவந்து விட்டதாகச் சுயமரியாதைக்காரர் பெரிய கூச்சல் போடுகிறார்கள். ஆனால், தமிழைப் பாதுகாத்துத், தமிழுக்கு மறு மலர்ச்சி கொடுக்கும் நோக்கத்துடன் ஏற்பட்ட தமிழ் சங்கங்களோ இருக்குமிடம் தெரியவில்லை. அதிலும் உங்கள் சங்கமே பெரியது; முதன் மந்திரி, டாக்டர்; ராஜன், விளம்பர மந்திரி ராமநாதன் போன்றவர்களின் ஆசீர்வாதம் பெற்றது; தமிழ் எழுத்தாளர்களும் ஏராளமாக இருந்தார்கள். இருந்துமென்ன? அந்தச் சங்கம் முளைத்த மூன்று நாளில் இருந்தவிடமே தெரியவில்லை. காரியதரிசியாகிய நீங்களாவது, அந்த விவரத்தைத் தெரிவிப்பீர்களா? சங்கம் உயிரோடிருக்கிறதா, அல்லது, மடிந்ததா? உயிரோடு இருந்தால், உடனே அறிவியுங்கள். சு. ம. காரர் தமிழுக்கு ஆபத்து என்று சொல்லி, தமிழைக் கொலை செய்வதையாவது தடுக்க முன் வாருங்கள். இந்தச் சமயத்தில் உங்கள் சங்கம் செய்யக்கூடிய பெரிய கைங்கர்யம் அது ஒன்றுதான். விருந்துகள் நடத்துவதாலும், பெரிய பிரசங்கங்கள் செய்வதாலும் தமிழைப் பாதுகாத்துவிட முடியாது; தமிழின் மறு மலர்ச்சிக்கு வேலை செய்யவேண்டும். உடனே முன் வாருங்கள்.

டிங்—டாங்

சுபாஷ் சந்திரபோஸ்,
கான்பூர்.

மாஜி தலைவரே,

காங்கிரசை எதிர்க்கும் உங்கள் புதிய கட்சி வேலையில் நீங்கள் தீவிரமாக இருக்கிறீர்கள். ஆனால், உங்கள் மாகாணத்துக்கு ஏற்பட்டிருக்கும், ஆபத்தையும், அவமானத்தையும் நீங்கள் மறந்து விட்டீர்கள். கல்கத்தா கார்ப்பொரேஷனில் மெஜாரிட்டியாக இருக்கும் ஹிந்துக்களை மைனாரிட்டியாக்கும் சூழ்ச்சியில் ஹக் மந்திரி சபையினர் இறங்கி இருக்கிறார்கள். வங்க சிங்கங்கள் கர்ஜிக்கின்றன, ஹக் மந்திரீ சபை கரடிகளோ உறுமுகின்றன. அங்கு ஒரே அமளியாக இருக்கிறது. ஹக் கரடிகளை எதிர்த்து, சிங்கங்கள் சத்தியாக்கிரகஞ் செய்யக்கூடத் தயாராக இருப்பதாகக் கேள்வி. ரோமாபுரி தீப்பற்றி எரிந்தபோது நீரோ உல்லாசமாகப் பிடில் வாசித்துக் கொண்டிருந்தது போல், உங்கள் புதுக் கட்சி இயக்கத்தில் முழ்கிக் கிடக்கிறீர்கள். இது நியாயமல்ல; வங்கத்துக்கு நீங்கள் பெரும் துரோகம் செய்கிறீர்களென்றே நினைக்கிறேன். ஆதலால், உடனே வங்கம் செல்லுங்கள்; மெஜாரிட்டியைப் பாதுகாக்கப் போரிடுங்கள். கூடுமானால், ஹக் மந்திரிசபையை முறித்து, அங்கு காங்கிரஸ் மந்திரி சபையை ஏற்படுத்த வேலை செய்யுங்கள். அந்த வெற்றி பெற்றபின், உங்கள் புதுக் கட்சியைப்பற்றிச் சிந்திக்கலாம். அதுவரையில் உங்கள் கட்சியை மூட்டை கட்டி வைப்பதுதான் நல்லதென்று நினைக்கிறேன். ஆனால், உங்கள் திருவுள்ளம் எப்படியோ!

டிங்—டாங்

டாக்டர். கரே,
புனா.

மாஜி மந்திரியே,

மந்திரி பதவி போன வெறி உங்களை இன்னமும் விட்டபாடில்லை. பாதி பைத்தியமாக இருந்த உங்களுக்கு, இப்பொழுது முழுப் பைத்தியம் ஏற்பட்டு விட்டதென்றே நினைக்கிறேன். காங்கிரசையும், காந்திஜியையும், காங்கிரஸ் தலைவர்களையும் நீங்கள் வரம்பில்லாமல் திட்டப் புறப்பட்டுவிட்டீர்கள். அதுமட்டுமா? காலித்தனஞ் செய்வதிலும் கைதேர்ந்துவிட்டீர்கள்! சு. ம. காரர் உங்களிடம் பாடம் கற்றுக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டீர்கள்! அதற்காக சு. ம. காரர் உங்களுக்குக் "காலித்தனக் கேசரி" என்று பட்டம் கொடுக்க யோசனை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும், தற்சமயம் அவர்களுக்கு உங்களைப்போன்ற ஒரு தலைவர் மிக மிக அவசியமாக இருக்கிறது. ஆதலால், உங்கள் வட இந்திய யாத்திரைத் திட்டத்தைக் சிறிது காலம் நிறுத்தி, தென்னிந்திய யாத்திரை புறப்பட்டால் நலமாயிருக்கும். சு. ம. காரர் உங்கள் திருமுக தரிசனத்துக்கு ஆவலோடு காத்திருக்கிறார்கள். எப்போ புறப்படுகிறீர்கள்? உடனே தந்தி கொடுங்கள்.

டிங்—டாங்

நவாப். டி. எஸ். ராஜமாணிக்கம்,
சென்னை.

நாடக கேசரி!

உங்கள், மதுரை தேவி பால விநோத சங்கீத சபா, சென்ற இரண்டு வருடங்களாகச் சென்னையில் பல அற்புதமாக நாடகங்களை நடத்தினார்கள். அந்த நாடகங்களின் சிறப்பையும், திறமையையும் நான் பலமுறை பாராட்டியிருக்கிறேன். சென்னை மக்களும் மனமார வாழ்த்துகிறார்கள். இப்பொழுது நீங்கள் சென்னையை விட்டு, வேலூருக்குப் புறப்பட்டிருப்பதாக அறிய வந்தேன். ரொம்ப சந்தோஷம்! நீங்கள் சென்னையை விட்டுப் புறப்படுமுன், சென்னை மேயர் உங்களுக்கு "நாடக கேசரி" என்னும் பட்டத்தை வழங்கினார். அது முற்றிலும் பொருத்தமானதென்பதில் சந்தேகமே இல்லை. ஏற்கனவே "நவாப்" பட்டம் பெற்றிருக்கிறீர்கள். அதுவும் சரியான பொருத்தந்தான். உங்கள் நாடகக் கம்பெனியின் சிறப்பைப் புகழ்ந்து எழுத இங்கு இடமில்லை, தமிழ் நாடகத்தின் பெருமை அழிந்துவரும் இத்தருணத்தில், நீங்கள் அதற்குப் புது உயிர் கொடுத்தீர்கள். உங்கள் கம்பெனி தமிழ்நாட்டிற்கு ஒரு அரிய தனம்; நாடகக் கலைப் பொக்கிஷமென்றே சொல்லுவேன். தமிழ் சினிமா ஆக்டர்களும், டைரக்டர்களும், சொந்தக்காரரும், உங்களிடம் நாடகக் கலை சம்பந்தமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உண்டு. அதைப் படிப் படியாக அவர்கள் கற்றுக்கொள்ளுவார்களென்று நினைக்கிறேன். நீங்கள் சென்னையைவிட்டுப் போகிறீர்கள். எங்கு சென்றாலும், உங்களுக்கு வெற்றி நிச்சயம். உங்கள் கம்பெனியார் பேரும், புகழும் பெற்றுத் திகழ்வார்கள் என்பதில் எனக்குக் கொஞ்சங்கூடச் சந்தேகமில்லை. சுகமே போய்வாருங்கள்.

டிங்—டாங்



M. A. CHARI & Co.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

சங்கநாதம்

கழுதைக்கு உபதேசம்! -

- ஐயோ, வெட்கம்! வெட்கம்!!

ஆஷாட பூதிகள் அலங்கோலம்

காய்த்த மரத்தில் கல்லெறி!

வெளுப்பது கிழக்கா, மூக்கா?

(பூம்-பூம்)

பிறவிக் குணம் போகுமா? போகவே போகாது. பிறவிலேயே அற்பர்களாகப் பிறந்தவர்களுக்கு, அந்த அற்பக் குணம் இருந்துகொண்டுதானிருக்கும். என்னதான் உபதேசஞ் செய்தாலும், அது அவர்கள் காதில் ஏறாது. கழுதைக்கு உபதேசஞ் செய்த மாதிரி தான்! அற்பக் குணத்துடன் பிறந்தவர்களுக்கு இழிவான விஷயங்களிலேயே புத்தி போகும். இழி குணமும் இழி செயலும், இழிவான நோக்கமும் புத்தியும் இருப்பது கண் கூடு. ஆகவே, அற்பர்களுடைய சாகவாசமும், பேச்சும் கூடவே கூடாது. துஷ்டனைக் கண்டால் தூரத் தூர என்று நமது முதியோர் எழுதிவைத்தது ஒருநாளும் பொய்யாகாது.

* * *

அலங்காரமாக ஆடை அணிந்து, கல்வி கேள்விகளில் பெரியோர் போன்று விளங்கிவிட்டால், ஒருவர் பெரியாராகிவிட மாட்டார். அவரிடம் உயர்ந்த நோக்கமும், பரந்த கொள்கையும், பெருந்தன்மையான குணமும், சிறந்த ஒழுக்கமும், நேரிய நடத்தையும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் ஒரு பெரியாராவர். இன்றேல், அவர் சிறியாரே; ஒழுக்கமே உயர்குலம் என்று ஆன்றோர் கூறியிருக்கிறார்கள்.

* * *

யாராயினுஞ் சரி; காங்கிரஸ்காரராலுஞ் சரி, சுயமரியாதைக் காரரேயாயினுஞ் சரி, அல்லது ஜஸ்டிஸ், மிதவாதக் கட்சியைச் சார்ந்தவர்களாயினுஞ் சரி; அன்று சமதர்ம, தீவிரக் கட்சியைச் சார்ந்தவர்களாயினுஞ் சரி, எல்லோரிடமும் ஒழுக்கம் அவசியம்; உயர்ந்த குணங்கள் அத்யாவசியம். கொள்கையையும், ஒழுக்கத்தையும் காற்று வாக்கில் பறக்க விட்டுவிட்டு, மிருகங்களிலும் கேவலமாக நடந்துகொள்ளுவதென்றால், அதை யாரும் சகித்துக் கொண்டிருக்கமுடியாது. அவர்களால் அவர்கள் கட்சிக்குக் கேவலம்; ஒழுக்கமற்றவர்கள் ஒரு கட்சியில் இருப்பதைவிட, அவர்கள் இல்லாதிருப்பதே மேல். உதாரணமாகக் காங்கிரஸில் இன்று ஊழல்கள் மலிந்து வருவதற்கு ஒழுக்கமற்ற சில சுயநலமிகளே காரணம். இந்த ஒழுக்கமற்றவர்களைக் காங்கிரஸிலிருந்து வெருட்டி, காங்கிரஸைப் புனிதப்படுத்த வேண்டுமென மகாத்மா காந்தியும், காங்கிரஸ் தலைவர்கள் பலரும், இரண்டு வருடங்களாக முயற்சித்து வருகிறார்கள். ஏன்? ஒழுக்கமற்றவர்களால், ஒரு கட்சி பாழாய்ப்போவதோடு, அந்தக் கட்சியின் கொள்கைக்கே அது ஆபத்தாக வந்து முடியும். அது மட்டுமா? நாளடைவில், ஒழுக்கமற்றவர்களால் அந்தக் கட்சியே நசித்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே, காங்கிரஸ் கட்சியைப் புனிதப்படுத்த வேண்டியது மகா அவசியம்.

* * *

ஒழுக்க மற்றவர் காங்கிரஸில் இருப்பதே தவறு. இந்த நிலைமையில், சில ஒழுக்கமற்றவர் காங்கிரஸ் கமிட்டிகளில் பொறுப்பான பதவி வகிப்பதென்றால் அதைச் சகிக்கவே முடியாது. இன்றுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலும், காரியக் கமிட்டியிலும், இப்பேர்ப்பட்ட சிலர் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரைப்பற்றியும் நான் புகார் செய்யவில்லை. ஆனால், குறிப்பாக ஒருவர் செய்த அக்கிரமத்தை—அடாத செயலை—இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகிவிட்டது. அவர் ஒரு சமதர்மவாதியென்று சொல்லிக் கொள்ளுகிறார். பேச்சில் வீரந்தான்! ஆளும் வாட்டசாட்டந்தான்!! ஆனால், அவரிடம் ஒழுக்கமோ மகா சூன்யம். இந்த ஒழுக்கக் குறைவு காரணமாக அவர் ஒரு இளம் பெண்ணிடம், அதிலும் ஒரு ஹரிஜனப் பெண்ணிடம் மிருகத்தனமாக நடந்து கொண்டதாகக் கேள்வி. அந்த ஹரிஜனப் பெண்ணுக்கு ஆசை வார்த்தை காட்டினர்; கடைசியில் அவளை மோசம் பண்ணினர். அந்த ஹரிஜனப் பெண்ணின் கதி இன்று அதோ கதியாகிவிட்டது! அவளுடைய ஜீவியம் பாழ். கனவிலும் நினைக்க முடியாத அவ்வளவு மோசமான நிலைமைக்கு அந்த ஏழை ஹரிஜனப் பெண் வந்துவிட்டாள். இது கேவலம்! மகா கேவலம்!! சமதர்மம் பேசி, மகாத்மாவின் உத்தம குணங்களை எடுத்துரைத்து, ஊருக்கு உபதேசஞ் செய்துவரும் இந்தச் சமதர்மி, தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அங்கத்தினர், இவ்வாறு அக்கிரமஞ் செய்வதென்றால்-ஒரு அபலையை வஞ்சிப்பதென்றால்-அந்த அக்கிரமத்தை யார்தான் சகித்துக்கொண்டிருக்க முடியும்? இதைத் தமிழர் கேள்விப்பட்டால், அவர்கள் இரத்தம் கொதிக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால்என்செய்வது? இன்று சமதர்மம் பேசும் தோழர்களிலும், சுயராஜ்யம் பேசும் சுதந்திர வீரர்களிலும், ஒழுக்கங்கெட்ட சிலர் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள்மீது காங்கிரஸ் தலைவர்கள் சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். நடவடிக்கை என்னவிருக்கிறது? இவ்வித ஒழுக்கமற்ற பேர்வழிகளைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றி விடுவதே நல்லது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், காரியக்கமிட்டி அங்கத்தினர்களும் இதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றேல், தமிழ்நாடு காங்கிரசுக்கே இது பெரிய கேவலமாக வந்து முடியுமென்றும் எச்சரிக்கை செய்கிறேன்.

* * *

மேலே கூறிய அந்த சமதர்மவாதி, கேவலம் ஒரு ஏழை ஹரிஜனப் பெண்ணிடம அவர் சமதர்மவித்தையைக் காட்ட ஆரம்பித்தார் போலும்! மேனாடுகளில் நினைத்த மாத்திரத்தில் கலியாணஞ்செய்வதும், கலியாணமான அடுத்த நிமிஷத்தில் அந்தக் கலியாணத்தை ரத்துசெய்து கொள்ளுவதும் வழக்கம். இது மட்டுமா? பரீட்சார்த்த விவாகம், தற்காலிக விவாகம், இன்னம் இதுபோன்ற அநாரிக விவா விவாகங்கள் எத்தனையோ அங்கு உண்டு. இந்த சமதர்ம தோழர் இந்த விவாகங்களை யெல்லாம் சமதர்மக் கொள்கையுடன் சேர்த்துக்கொண்டார் போலும்! அவர் கொள்கையைப் பரீட்சிக்கப் பரீட்சார்த்த விவாகஞ் செய்து, அவருடைய மிருக இச்சையைத் தீர்த்துக்கொண்டு, கடைசியில் அந்தப் பெண்ணை நட்டாற்றில் விட்டுவிட்டார். இந்த அடாத செயலை எப்படிக் கண்டிப்பதென்பது எனக்குத் தெரியவில்லை. கண்டிக்கச் சரியான வார்த்தைகள்கூட அகப்படவில்லை. ஆனால், இவ்வித அநியாயத்தைக் கடவுள் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார். அவரைத் தெய்வம் நின்று கேட்குமென்றே நினைக்கிறேன். அவர் தெய்வத்தின் கோபத்துக்கு ஆளாகாமலிருக்கவேண்டும். அதற்கு ஒரே வழிதானுண்டு. அந்த ஹரிஜனப் பெண்ணை உலகமறிய மணந்து, உலகமறிய அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ளுவதுதான் சரி. அதுதான் அவர் செய்த அக்கிரமத்துக்குப் பிராயச்சித்தம். அந்தத் தோழர், நான் கூறிய யோசனையை ஏற்றுக் கொள்ளுவாரேயாயின், அவரைக் கண்டிப்பதற்குப் பதிலாக அவரை மனமாரப் பாராட்டுவேன்; பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரை உண்மையான சமதர்மி, உண்மையான தியாகி, உண்மையான வீரர் என்று ஏற்றுக் கொள்ளுவேன். உலகமும் அவரைப் பாராட்டும்.

* * *

நான் மேலே குறிப்பிட்ட அக்கிரமத்துக்கும், அவமானத்துக்கும் தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகைகள் நடத்திவரும் போட்டிப் பரிசு மோசடி எந்தவிதத்திலும் மோசமானதல்ல. ஒரு சமதர்மத் தோழரிடம், பின்புத்தியால் சிக்கிய ஒரு பெண் அதோகதியானள். ஆனல், போட்டிப் பரிசுகளிடம் சிக்கிய பல ஆயிரக்கணக்கான, லக்ஷக்கணக்கான தமிழ் மக்களும் அதோகதியே அடைந்து வருகிறார்கள். அவர்கள் பணத்தையிழந்து, குடும்ப சுகத்தையுமிழந்து, வறுமைக் குழியில்

(அடுத்த பக்கம் பார்க்க)

* டிராலி *

கஸ்தூரி சோப்

தினசரி உங்கள்
ஸ்நானத்துக்கு
உபயோகித்து
வாருங்கள்
உங்கள் தேகம்
நறுமணம் கமழும்

இன்றே இதை
வாங்கிப் பரீட்சித்
துப் பாருங்கள்

அதின் உயர்ந்த குணம் தெரியும்

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, மதராஸ். பிராஞ்ச்:-மதுரை.

விழுந்து தவிக்கும்கொடுமை சொல்லி முடியாது. பல குடும்பங்களின் ஜீவியம் இந்தப் போட்டிப் பரிசால் பாழாகி வருவது தினசரிக் காட்சி. இதை இல்லையென்று யாராவது மறுக்க முடியுமா? இவ்வாறு பல குடும்பங்களின் ஜீவியம் பாழாகி வருவதற்குக் காரணம் யார்? போட்டிப் பரிசு நடத்திவரும் பத்திரிகைச் சொந்தக்காரரேயாவர். இந்தப் பத்திரிகைகளின் சொந்தக்காரர் பலர், கதர் அணிந்து, காங்கிரஸில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்; காந்தி தத்துவம் பேசுகிறார்கள்! இது வெட்கக்கேடு!! அப்பத்திரிகைகளில் ஆசிரியர், உதவி ஆசிரியர்களாக இருந்து, இவ்விதப் போட்டிப் பரிசுகளுக்கு யோசனை சொல்லிக் கொடுத்த, அந்தப் பத்திரிகைகளுக்கே மூளையாக விளங்குவோர் பலரும், பெரிய காங்கிரஸ் பக்தர்களே! அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களாவதற்குக்கூடப் போட்டி போட்டார்கள். இன்றளவும் பெரிய காந்தி பக்தர்களாக வேஷம் போட்டுக்கொண்டு திரிகிறார்கள். பெரிய தேசிய தத்துவம் பேசுகிறார்கள். அப்பேர்ப்பட்ட இவர்கள் போட்டி பரிசுகள் மூலம் ஏழைமக்களை வஞ்சிப்பது பாவமல்லவா? இந்த ஆஷாடபூதிகளால் தமிழ்நாட்டுக்குப், தமிழருக்கும் நன்மை ஏற்படுமா? இதுதானா இவர்களின் காங்கிரஸ் பக்தி என்று கேட்கிறேன். போட்டிப் பரிசு மோசடி வேலையை மூட்டை கட்டிவிட்டு, ஒழுங்கான வழியில், நேரிய முறையில் பத்திரிகைகளை நடத்தித், தமிழ் நாட்டுக்கும், தாய்நாட்டுக்கும் சேவை செய்ய முன்வருமாறு இவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* * *

காங்கிரஸ் அபிமானங்காட்டி, கதர் வேஷம் போட்டுக்கொண்டு, இவ்வித முறைகெட்ட மோசடியில் இறங்கினால், எதிரிகள் நகைக்க மாட்டார்களா? அவ்விதம் அவர்கள் எள்ளிநகையாடுவதைக் கண்டு, கோபம் கொள்ளுவதால் என்ன பயன்? ஆகவே, இந்த அநீதங்களை இன்றே ஒழித்துவிட்டு, போட்டிப் பரிசுகளைத் தலை முழுகி விட்டுத் தமிழ்நாட்டையுப், தமிழ்நாட்டுக் காங்கிரஸையும் புனிதப்படுத்தும் புண்ணிய வேலையில் அவர்கள் பத்திரிகைகள் ஈடுபடும்படி செய்வார்களாக அது பெரிய புண்ணியமாக இருக்கும்.

* * *

இதில் இன்னமொரு வேடிக்கை! போட்டிப் பரிசுப் பத்திரிகைகளுக்குள்ளேயே போட்டி! எப்பேர்ப்பட்டபோட்டி? ஒரு போட்டிப் பரிசுப் பத்திரிகைக்கு ஏஜண்டாக இருப்பவருக்கு, மற்றொரு போட்டிப் பரிசுப் பத்திரிகை ஏஜன்ஸி கிடையாது. ஒரு கடையில் ஒரு போட்டிப் பரிசுப் பத்திரிகையை விற்பனை செய்தால், அந்தக் கடையில் மற்றொரு போட்டிப் பரிசுப் பத்திரிகையை விற்பனைசெய்யக் கொடுப்பதில்லை. இதிலிருந்து என்ன தெளிவாகிறது? இந்தப் போட்டிப் பரிசுப் பத்திரிகைகள் பொதுஜன சேவைக்காக நடத்தப்படவில்லை. பொது ஜனங்களை வஞ்சித்து, அவர்கள்

- சங்கநாதம் -

(முன் பக்கத் தொடர்ச்சி)

பணத்தைக்கொள்ளையடிக்கவே நடத்தப்படுகின்றனவென்பதைத் தமிழ் மக்கள் அறிய வேண்டுகிறேன். ஆகவே, தமிழ் மக்கள் என்னசெய்ய வேண்டும்? இந்தப் போட்டிப் பரிசுப் பத்திரிகைகளை அடியோடு பகிஷ்கரித்துவிட வேண்டும். அப்படிப் பகிஷ்கரித்தால்தான், போட்டிப் பரிசுப் பத்திரிகைச் சொந்தக்காரர்களுக்குப் புத்திவரும். தமிழர் இன்றேபகிஷ்கரிக்கவேண்டும்; காலங் கடத்தினால் ஆபத்து. ஏனெனில், ஏழை மக்களின் பணம் பறிபோய் விடும். இன்றே தமிழ் மக்கள் இந்தப் பகிஷ்கார வேலையில் ஈடுபடுவார்களாக.

* * *

காங்கிரசை ஆதரிப்போர் ஏராளமாக இருக்கிறார்கள்; காங்கிரசை எதிர்ப்பவர்களுமிருக்கிறார்கள். வெள்ளைக்காரருக்குக் காங்கிரஸ் பிடிக்காது; காந்திஜியும் பிடிக்காது. சு. ம. காரர் காங்கிரசை எதிர்க்கிறார்கள்; காந்திஜியைத் திட்டுகிறார்கள். ஜஸ்டிஸ், மிதவாதிகள், லீக்காரர் எல்லோரும் காங்கிரசை எதிர்க்கின்றனர். ஏன்? காங்கிரசின் செல்வாக்கும், பலமுமே அதற்குக் காரணம். சிறு கட்சியினரும், அரசியலில் அதிருப்தியடைந்தவர்களும், நமது சுதந்திரத்துக்கு எதிரிகளாக இருப்பவர்களும் காங்கிரசை எதிர்ப்பதென்றால், அதில் விசேஷம் இல்லாமலிருக்குமா? அந்த விசேஷம் என்ன? காங்கிரஸ் ஒன்றே இந்தியாவிலுள்ள பெரிய அரசியல் கட்சி; அது ஒன்றுக்கே தேசத்தில் நிறைந்த செல்வாக்கிருக்கிறது. எதிரிகள் எதிர்ப்பு ஒன்றே, இதை நிரூபிக்கப் போதுமானது. இது தான் விசேஷம். காய்த்த மரத்தில்தானே கல்லெறி அதிகம். காங்கிரஸ் நன்றாகப் பூத்துக் காய்த்துப் பழுத்த மரம். ஆகவே, அதை எதிர்ப்பவர்களும், அதின் மீது வசை புராணம் பாடுகிறவர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். இதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால், இந்த எதிர்ப்பையும், கல்வீச்சையும் காங்கிரஸ் பொருட்படுத்துகிறதா? இல்லவே இல்லை. காங்கிரஸ் சமுத்திரம் போன்றது; பரந்தது; இமயம் போன்று உயர்ந்தது! அது எந்த எதிர்ப்புக்கும் அசையாது; அதைத் தகர்த்துவிடவோ, அழித்துவிடவோ யாராலும் முடியாது. அப்படி நினைப்பது வெறும் பகற்கனவே யாகும்

சு. ம. காரர் காங்கிரஸை நசுக்கி விடலாம், அதை உடைத்துத் தகர்த்துவிடலாமென்று மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மனக்கோட்டை இடிந்து, தகர்ந்து, படல் படலாக உதிர்ந்து அழியுமே யொழிய, காங்கிரஸை அவர்களால் இம்மிகூட அசைக்க முடியாது. சென்னையில் காங்கிரஸ் சர்க்காரை கவிழ்க்க என்னமெல்லாமோ சூழ்ச்சி செய்து பார்த்தார்கள். காங்கிரஸ் சர்க்கார் செய்யும் சகல சட்டங்களையும் எதிர்த்தார்கள். எதில்வெற்றி பெற்றார்கள்? ஒன்றிலும் வெற்றி பெறவில்லை. ஹிந்தியை எதிர்ப்பாதகக் கூறிக்கொண்டு எவ்வளவோ காலித்தனஞ் செய்தார்கள். தமிழர் மண்டையை உடைத்தார்கள்; தமிழரை அடித்தார்கள். வீடுகளில் கற்களை எறிந்து, ஜன்னல், கதவுகளைத் தூள் தூளாக்கினார்கள். என்ன பலனைக் கண்டார்கள் தமிழரின் வெறுப்பைத் தேடிக்கொண்டதைத் தவிர, வேறு எந்தப் பலனையும் காணவில்லை. கல்லெறிவதும், காலித்தனஞ்செய்வதும், வீரத்தனமென்று சு. ம. காரர் நினைத்தார்கள். காங்கிரஸ் சர்க்காரையும், காங்கிரஸ்காரரையும் பயமுறுத்தி, பணிய வைத்துவிடலாமென்று கருதினார்கள். காலித்தனமே அவர்கள் "சர்ம உரிமை பெற்றது" என்று பெருமையாகப் பேசிக்கொண்டார்கள்! முடிவு என்னவாயிற்று? தினை விதைத்தவன் தினைதானே அறுப்பான் அவர்கள் காலித்தனமும், கல்லெறியும் அவர்களுக்கே வினையாக வந்தது பொதுஜனங்களும், ரோஷமுள்ள தமிழரும் இவர்கள் காலித்தனத்தையும், அட்டூழியங்களையும் எத்தனை நாட்களுக்குத்தான் சகித்துக்கொண்டிருப்பார்கள? சு. ம. காரரைச் சர்க்கார அடக்குவார்களென எதிர்பார்த்தார்கள். சர்க்கார் நல்ல பிள்ளைகளாக இருந்துகொண்டார்கள். ஆகவே, பொதுஜனங்களே சு. ம. காரர் தலையைத் தட்டிமடக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். சு. ம. காரர் கூட்டம்போடும் இடங்களிலும், காலித்தனஞ் செய்யும் ஊர்களிலும், தமிழரே அவர்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள முற்பட்டு விட்டார்கள். திருநெல்வேலி, ராஜபாளையம், கும்பகோணம் முதலிய இடங்களில் சு. ம காரருக்குக் கிடைத்த கல்லடி செருப்பு வீச்சு, அழுகிய முட்டை அபிஷேகம் முதலியவை இதற்குப் போதிய சான்று. இதனால், பொது ஜனங்கள் செய்ததை நான் ஆதரிப்பதாக நினைக்கவேண்டாம். செருப்பு வீச்சு, கல்வீச்சு முதலியவைகள் கூடவே கூடாது. சு. ம. காரராக இருக்கட்டும், அல்லது, காங்கிரஸ்காரராக இருக்கட்டும்; யாராக இருந்தாலுஞ் சரி, கல்லெறிவதும், செருப்பு, முட்டை முதலியவைகளை வீசுவதும் கூட்டத்தைக் கலைக்கச் சூழ்ச்சி செய்வதும் அறவே கூடாது. அது காங்கிரசின் அஹிம்சா கொள்கைக்கே விரோதமானது. ஏன்? மனிதத் தன்மைக்கே முற்றிலும் மாறானதென்றே நினைக்கிறேன். சு. ம. காரர் ஆரம்பித்த இந்தக் கை வரிசைகள் அவர்களுக்கு விரோதமாகத் திரும்பி விட்டதை ஞாபகமூட்டவே இதைக் குறிப்பிடுகிறேன். சு. ம. காரருக்கு தமிழ் நாடு எங்கும் ஆதரவு அபாரமாக இருப்பதாகவும், தமிழ் நாடு எங்கும் சு. ம. சங்கங்களையும், ஜஸ்டிஸ் கிளை ஸ்தாபனங்களையும் நிறுவி வருவதாகவும் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டில் இருக்கும் ஆதரவு என்னவென்பதைத் திருநெல்வேலியும், ராஜபாளையமும் நன்கு காட்டி விட்டது. இதுபோலவேதான் ஊர் ஊராக அவர்களுக்கு ஆதரவு இருக்குமென்பதைத் தமிழர் யூகித்துக்கொள்ளலாம்.

* * *

இவ் வருடம் 100 பள்ளிக்கூடங்களில் ஹிந்தி கற்றுக் கொடுக்கக் காங்கிரஸ் சர்க்கார் தீர்மானித்தனர். ஆனால், அவர்கள் தீர்மானத்தைச் சிறிது மாற்றி, அது சம்பந்தமாகக் கல்வி அதிகாரிகளைக் கொண்டு, பள்ளிக்கூட நிர்வாகிகளின் அபிப்ராயத்தை அறியும்படி சர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறார்கள். இதை சு. ம. காரர் பெரிய வெற்றியாகக் கருதி, கும்மாளம் போடுகிறார்கள்! கிழக்கு வெளுப்பதாகவும், வெற்றிக் கிரணங்கள் வீசுவதாகவும் ஜம்பம் பேசுகின்றனர். எந்தவகையிலாவது ஒரு சிறு வெற்றி கிடையாதா வென்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். மூழ்கிச் சாகப்போகிறவனுக்கு ஒரு துரும்பு ஆதாரமாகக் கிடைத்தால், அதை எவ்வளவு ஆவலுடன் தாவிப் பிடிப்பானோ, அதேபோல் இந்த சர்க்கார் உத்திரவை ஒரு வெற்றியாகக் கருதி. மனத் திருப்திகொள்ள நினைக்கிறார்கள். அவர்கள் எண்ணத்தில் ஈரமண் விழுவது நிச்சயம். 100 பள்ளிக்கூடங்களில் அல்ல, எத்தனையோ 100 பள்ளிக்கூடங்களில் ஹிந்தி வரப்போகிறது. சு. ம. காரர்சொல்லுவதுபோல் ஹிந்தியை, தமிழர் பெரும்பான்மையோர் எதிர்க்கவில்லை. அவர்கள் ஆதரிக்கவே செய்கிறார்கள் என்பதை சு. ம. காரர் அதிசீக்கிரத்தில் அறிந்து கொள்ளப் போகிறார்கள். ஆகவே, சு. ம. காரர் அற்ப மகிழ்ச்சி கொள்ளவேண்டாம். அவர்களுக்கு வெற்றி என்பது இந்த யுகத்தில் அல்ல; இந்த ஜென்மத்திலுமல்ல. சு. ம. காரர் தொட்

(அடுத்த பக்கம் பார்க்க)

சமஸ்தானங்களில் சத்தியாக்கிரஹம்

என்று பத்திரிகையில் படித்த மாத்திரத்தில், விஷயத்தை அறிய முடியாது! சமஸ்தானங்களின் வருஷ வருமானம், ஜனத்தொகை, விஸ்தீரணம், எங்கு இருக்கிறது? நிர்வாகம், அதிகாரம் முதலியனவற்றை தெரிந்துக்கொண்டால் தான், சத்தியாக்கிரஹத்தின் தன்மை விளங்கும். இவ்வளவு விஷயங்களைக் கொண்டுள்ளது

"ராஜகோட்டை சத்தியாக்கிரஹம்"

அழகான முகப்பு வர்ண மகாத்மா படம், இந்தியா தேசப் படம், மன்னர்களின் படம் முதலியன இருக்கின்றன.

250 பக்கங்கள் விலை அணா 12.

எல்லா "தமிழ் மணி" ஏஜெண்டுகளிடம் கிடைக்கும்.

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

டதெல்லாம் கரியாகும்போது வெற்றி எங்கிருந்து வரும்? ஆகவே, கிழக்கு வெளுப்பதெலலாம் சுத்தப் புரட்டு; சு. ம. காரர் மூக்கே வெளுக்கப் போகிறது! அதை அவர்களே காணப்போகிறார்கள்.

* * *

அக்காலத்தில் தேசப்பணியில் ஈடுபட்டிருந்தவர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்; அதை யாறும் மறுக்க மாட்டார்கள். இன்று அவர் சிறையிலிருக்கிறார்; அவரைச் சிறையிட்ட முதன் மந்திரி ஆச்சாரியாரும், ஈ. வெ. ராமசாமி நாயக்கருடன் தேசப்பணியில் ஈடுபட்டவர்தான். இன்று அவர் முதன் மந்திரியாக இருப்பதும், மற்றொருவர் சிறையிலிருப்பதும் "விதியின் விளையாட்டு!" என்று சு. ம. காரர் கூறுகிறார்கள். தேசியம், ஜாதியப் என்ற பெயரால் நாட்டில் நடத்தப்படும் புரட்டுகளை விளக்கியதற்காக ராமசாமி நாயக்கர் சிறையிலிடப்பட்டார் என்றும் சு. ம. காரர் சொல்லுகிறார்கள். ஆனால், அது பொய். அவர் அதற்காக சிறையிலடைக்கப்படவில்லை. சு. ம. காரருக்கும், தமிழருக்கும் இது நன்றாக தெரியும். தேசியம் என்று பேசிககொண்டு ராமசாமி நாயக்கர், ஜாதி துவேஷத்தில் இறங்கினார். ஜாதித் துவேஷத்தை, தமிழ்நாட்டில் பரப்ப முயன்றார்; சர்க்காரை எதிர்த்தார். அதற்காகவே அவர் இன்று சிறையிலிருக்கிறார். அவர் நேர்மையான வழியில் கிளர்ச்சி செய்திருந்தால் அவரை யாரும் தொட்டிருக்கவே மாட்டார்கள். அதிலும், ராமசாமி நாயக்கரின் நண்பராகிய ஆச்சாரியார், அவர் அருகிலும் நெருங்கி இருக்க மாட்டார். ஆனால், ராமசாமி நாயக்கர் போன வழி தவறான வழி. அது ஒருபுறமிருக்கட்டும். தேசியம், ஜாதியம் பேசும் காங்கிரஸ் புரட்டுகளை ராமசாமி நாயக்கர் வெளியிட்டாரென்று சு. ம. காரர் கூறுகிறார்களே, அதே புரட்டுக்களைத்தானே ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் செய்துவந்தார்? அதே காங்கிரசில்தானே அவரும் இருந்தார்? அதே காங்கிரசுக்குத்தானே தலைமை வகித்துக் காங்கிரஸ் பணத்தையும் கையாண்டார்! அவரிடமிருந்த தமிழ் நாடு காங்கிரஸ் பணம் எங்கே போய் விட்டது? அதற்குக் கணக்குக் காட்டினாரா? கணக்குக் கேட்டால் கோபமா? அதற்காகக் காங்கிரசிலிருந்து ஓடிக் காங்கிரசை எதிர்ப்பதா? இது யோக்யமோவென்று கேட்கிறேன். ராமசாமி நாயக்கர் செய்யும் இந்தப் புரட்டு உருட்டுகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை? காங்கிரஸ்காரர் புரட்டு உருட்டு ரகமா, அல்லது, தனிப்பட்ட ராமசாமியார் ரகமா? சு. ம. காரரே பதில் சொல்லட்டும். ராமசாமி நாசக்கரின் திருவிளையாடல்கள் ஒன்றல்ல, பல உண்டு. அதைப்பற்றி எழுதினால் அது ஒரு தனிப் புராணமாகும். அவருக்கோ வயதாகிவிட்டது; அவர் சிறையிலிருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி இங்கு விவரிக்க நான் விரும்பவில்லை; அது மோசமானது. ஆனால், நான் எழுதவேண்டியது அவசியம்; அத்யாவசியமென்று தெரிந்தால் அந்தப் புராணத்தை எழுதத் தயார்.

* * *

சென்னை அசெம்பிளியில் விற்பனைவரி மசோதாவை ஆதரித்துப் பேசியபோது, முதன் மந்திரி ஆச்சாரியார், புதியவரி போடுவதின் அவசியத்தை வற்புறுத்த சில மேற்கோள்களை எடுத்துக் கூறினார். சென்ற மகாயுத்த காலத்தில், பிரிட்டனில் புதிய வரி போட்டார்கள். அப்பொழுது புதியவரி கொடுக்க வேண்டியதின் அவசியத்தை, அழகான மேற்கோள்களுடன் லாயட் ஜியார்ஜ் பேசினார். அந்த மேற்கோள்களில் சிலவற்றை முதன் மந்திரி ஆச்சாரியார் அசெம்பிளியில் எடுத்துக் கூறினார். இதில் தவறு என்ன? ஆனால், சு. ம பத்திரிகைகளோ ஆச்சாரியா பேசியதை விபரீதமாக எடுத்துக்கொண்டன. வெள்ளையரை வெருட்டப்போன ஆச்சாரியார், லாயட் ஜியார்ஜ் பிரசங்கத்தை மேற்கோளாக எடுத்துக் காட்டி, வெள்ளையரை ஆதரிக்கிறாரென்று கூறுகின்றன. இது மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதுபோலிருக்கிறது! ஆச்சாரியாருக்காக அப் பத்திரிகைகள் இரங்குகின்றன; காலத்தின் கோலமெனப் பரிதாபப்படுகின்றன; இதுதானோ வெள்ளையரை வெருட்டும் வீரமெனக் கேட்கின்றன. அந்த அசட்டுப் பத்திரிகைகளுக்கு நேர்மையென்பதோ, நியாயமென்பதோ கிடையாது. காங்கிரஸையும், காங்கிரஸ் மந்திரிகளையும் தூற்றுவதற்கு ஏதாவது கயிறு திரித்து, புளுகி, மக்களை ஏமாற்றுவதே அப் பத்திரிகைகளுக்கு வழக்கம். அந்தப் புளுகுகளில் இது ஒன்று. ஆச்சாரியார், மந்திரியானதும், அவர் வெள்ளையரின் ஜோதியில் கலந்துவிடவில்லை, அல்லது, வெள்ளையரை ஓட்டும் போர்முனையிலிருந்து அவர் புறங்காட்டி ஓடிவிடவுமில்லை. அந்தப் போரை அவர் நடத்தியே வருகிறார்; இனிமேலும் நடத்திக்கொண்டு போவார். அதில் சந்தேகமே வேண்டாம். வெள்ளையரை எதிர்த்து, இந்திய சுதந்திரத்தை நிலைநாட்டுவதே காங்கிரசின் நோக்கம். அந்த நோக்கத்தைக் காங்கிரஸ் தலைவர்களோ, மந்திரிகளோ கட்டாயம் நிறைவேற்றியே தீருவர். இந்திய சுதந்திரத்தைக் காங்கிரஸ் அடைந்தே தீரும். அந்த சுதந்திரத்தை வேறு எந்தக் கட்சியாலும் அடைய முடியாது. சு. ம. காரரால் அந்தச் சுதந்திரத்தைப் பெற முடியவே முடியாது. அவர்கள் இந்திய சுதந்திரத்தைப் பெறவேண்டாம்; பெறும்படி அவர்களை யாரும் கேட்கவுமில்லை. ஆனால், அவர்கள் அந்தச் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையாக, குறுக்கே வந்து விழாமலிருந்தால் போதும். அவர்களால் உபகாரமில்லாவிட்டாலும், உபத்திரமாவது இல்லாமலிருக்க வேண்டும். அதுவே பெரியபுண்ணியமாக இருக்கும்!

கலியாண விருந்துகளுக்கும், குடும்ப போஜனங்களுக்கும்,
நற்சுவையுடன் பதார்த்தங்களுக்கும்,
நறுமணங் கமழும் ஊறுகாய்களுக்கும்
மிகவும் சிறந்த

WORLD FAMOUS
High Class Misky

A மார்க்கு
பெருங்காயம்

REGISTERED TRADE MARK

ASAFOETIDA
THE POPULAR QUALITY
OF ALL INDIAN FAMILIES

லட்சக்கணக்கான இந்தியக் குடும்பங்கள் தினம் உபயோகிப்பது. எல்லாவித பலகார பக்ஷணங்கள், சாம்பார், ரஸம், பதார்த்த வகைகள், ஊறுகாய்களுக்கும் ஒரு சிறு துளி A மார்க் பெருங்காயம் போட்டவுடனே மிகவும் உயர்ந்த மணமும், இனிய ருசியும் கொடுக்கக்கூடியது. கண்ணுக்கு ரம்மியமான கலருள்ளது. A மார்க்கை வாங்கினால் ஏமாற்ற முடியாது.

1 பவுண்டு ½ பவுண்டு ¼ பவுண்டு 1 சேர் 1 பலம் பாக்கிங்குகளில் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

A மார்க் பெருங்காயம் என்று கேளுங்கள்.

வல்லபதாஸ் தேஜ்பால், 14, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

ஜகப் பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத் தூளை
உபயோகியுங்கள்.

TRADE MARK

1. நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2. நெ. வீசை 1-க்கு விலை ரூ 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்:—ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ 5, ஒல்டு ஜெயில் தெருவு, மதராஸ்.

ஆப்ரேஷன் தேவையில்லை

தொண்டையிலும் நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்தால்
"டான்ஸ்லிட்"
அற்புதமாய்க் குணப்படுத்தும்
இந்த அருமையான மருந்து பயோலாஜிகள் முறைப்படி கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் பெருமையை அதிகமாக விவரித்து எழுதுவதை நிறுத்திச் சுருக்கிக் காட்டுகிறோம். தற்காலத்தில் தொண்டையில் உள்நாக்கின் இரு பக்கங்களிலும் நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் சகஜமாயிருக்கின்றது. இந்த வியாதிகளை 'டான்ஸ்லிட்'' அபூர்வமாகக் குணப்படுத்தும். சிறந்த இந்த பரம ஒளஷதம் சாப்பிட ஆரம்பித்தவுடன் ஜளிப்பு, இருமல், அடிக்கடி உண்டாகும் காச்சல் முதலியவைகளையும் போக்கி அபரிமிதமான பசி தீபவத்தை பெருக்கி, தேகத்தைப் புஷ்டியாக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் ஒரு பாட்டல் வாங்கியுண்டால் இவற்றின் அபார குணம் நன்கு விளங்கும் இல்லையேல் எமக்கு தெரிவித்தால விபரங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்ப சித்தமாயிருக்கிறோம்.

விவரங்களுக்கு:— ஆலன்கிளினிக் இராயப்பேட்டை, மதராஸ்.

இது விசித்திரமான உலகமென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். உலசத்தில் எத்தனையோ அற்புதங்கள் நடக்கின்றன; இதற்கு முன் நடந்தன; இப்பொழுது நடக்கின்றன; இனிமேலும் நடக்கும். அந்த அற்புதங்களை, நிறுத்தவோ, நடைபெருமல் தடுக்கவோ யாராலும் முடியாது. ஏன்? அந்த சக்தி மனிதனுக்குக் கிடையாது. உதாரணமாக, சிறு பூச்சி புழுக்களை எடுத்துக் கொள்ளுவோம்; சில செடி கொடிகளையும் கவனியுங்கள். அந்த பூச்சி புழுக்களிடம் இயற்கையாகச் சில அற்புங்கள் அடங்கியிருக்கின்றன. அந்த அற்புதங்களை மனிதனு அறிய முடிவதில்லை. அற்புதங்களைக் கண்ணரக் காணலாம் ஆனல், அவற்றின் ஆதிகாரணத்தை எவராலும் அறிந்துகொள்ள முடியாது. அதற்குக் காரணமென்னவென்றுகேட்டால், இயற்கை என்று இலகுவில் சொல்லிவிடலாம் ஆனல் அந்த இயற்கை எப்படி வந்தது? இயற்கைக்குக் காரணமாக இருப்பது யாது? அது ஒருவித சக்தி என்று சொல்லுவார்கள். என்ன சக்திஎன்ருல், இயற்கையின் சக்தி என்று சுலபமாகக் கூறிவிடலாம். ஆனல், அந்த இயற்கையின் சக்தியே-பராசக்தியே-தெய்வம்! கடவுள்!! கண் காணத ஒரு அபார சக்தி. இது நாஸ்திகர் புத்திக்கு எட்டாமலிருக்கலாம்; கடவுளேது, சக்தி ஏது என்று கூறும், இயற்கைக் கூட்டத்தாருக்குப் புலப்படாமலிருக்கலாம். அதுவும் இயற்கையே இயற்கையின் சக்தி, அந்த சக்தியின் அருள் என்றுதான் கருத வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா?

பூச்சி, புழுக்கள்

சாதாரண பூச்சி புழுக்களை எடுத்துக் கொள்ளுவோம். அவை எப்படிப் பிறக்கின்றன; எப்படி உயிர் வாழ்கின்றன; எப்படி மரிக்கின்றன என்பதெல்லாம் அற்புதந்தான்! சில பூச்சி புழுக்கள் சில மணி நேரமிருந்து உயிர துறக்கின்றன. உதாரணமாக ஒரு வண்ணத்திப் பூச்சியை எடுத்துக் கொள்ளுவோம் அது உயிருடன் இருப்பது சில மணிநேரந்தான். என்ருலும், அந்தச் சொற்ப நேரத்துக்குள் எவ்வளவு அழகாகப் பறந்துதிரிகிறது; எவ்வளவு அருமையாகத் தேன் தேடித்தின்னுகிறது. அந்த வண்ணத்திப் பூச்சிக்குக் கூடக் கடவுள் ஒருவித அபூர்வ சக்தியைக் கொடுத்திருக்கிருர். நாம் ஒரு பொருளை ருசி பார்க்க வேண்டுமானல், நாவினல் தான் ருசி பார்க்க வேண்டும். கையால் தொட்ட மாத்திரத்தில் ஒரு பொருள், இனிப்பா, கசப்பா, அல்லது, புளிப்பா என்று சொல்லிவிட முடியாது. ஆனல், கடவுள் வண்ணத்திப் பூச்சிக்கு இந்த விசேஷ சக்தியைக் கொடுத்திருக்கிருர். அது ஒரு பொருளின் ருசியை நாவினல் அல்ல, அதின் பின் கால்களினல் ருசி பார்க்கிறது. ஒரு பூவிலிருக்கும் தேன், இனிப்பா, கசப்பா, அல்லது, புளிப்பா என்பதை அறிந்து, தேனை உறுஞ்சுகிறது. அந்தத் தேன் அதற்குப் பிடிக்கவில்லையென்ருல் பறந்து போய்விடுகிறது. இந்த சக்தி, அற்ப ஆயுளையுடைய ஒரு வண்ணத்திப் பூச்சிக்கு எப்படி வந்தது? மனிதனுக்கில்லாத ஒரு அபூர்வ சக்தி இந்த வண்ணத்திப் பூச்சிக்கு இருப்பானேன்? அதற்குக் காரணம் கூறமுடியாது. அது தான் தெய்வத்தின் சக்தி! தெய்வத்தின் அபார சக்தியை புலப்படுத்துவதற்கு ஒரு உதாரணம்.

விட்டில் பூச்சி

வண்ணத்திப் பூச்சியின் சக்தி ஒரு புறமிருக்கட்டும்; விட்டில் பூச்சியை அநேகர் அறிவார்கள். அதற்குக் கடவுள் வேறு விதமான சக்தியைக் கொடுத்திருக்கிருர். வண்ணத்திப் பூச்சி பின் கால்களால் ருசி பார்க்கிறது. ஆனல், அந்த சக்தி விட்டில் பூச்சிக்கு இல்லை. ஆனல், விட்டில் பூச்சிக்கு வேறு விதமான சக்தி இருக்கிறது. பின் கால்களால் அது கேட்கிறது எவ்வித சப்தத்தையும் அது இலகுவில் கிரகித்துக் கொள்ளுகிறது. பாம்புக்குச் செவி கிடையாது. என்ருலும், அதற்குச்

(அடுத்த பக்கம் பார்க்க)

பந்தயமிட்டு பரீக்ஷிக்கலாம்! ஒரு பெரிய மகான் முறை.

வாலை-ரஸ-மெழுகு

எந்த மருந்திலும் குராத கொடிய குஷ்டப் புண்கள், விஷக் கடிகள் ஊரல், தடிப்பு, அரிப்பு, திமிர, மதமதப்பு, கருங்குஷ்டம், வெண் புள்ளிகள், முகம், காது, உதடுகளில் உண்டாகும் கட்டிகள்; கிரந்திப் புண்கள், செம்மேகம், வண்டுகடி, கரப்பான், எலிகடி, முதலிய வியாதிகள் மாயமாய் மறைந்து சருகுபோல் உதிரும். குணமில்லாவிடில் பணம் வாபீஸ். பந்தயமிடலாம். 24-நாளைக்கு ரூ. 7-0-0. 6-நாளைக்கு ரூ. 2-8-0.

கே எஸ். பதி வைத்தியசாலை, பழனி S. I.

-: ஜோதிஷம் :-

கவசங்கள், தாயத்துகள், உபாசனை,

ஏற்கனவே அச்சிட்டுத் தயாரான பலாபலன்கள்

இவைகள் தற்கால ஏமாற்றமாய் முடிகிறது

வீண் ஆடம்பரமின்றி, அவரவர்கள் நன்மை தீமைகளை அறிய அப்போதைக்கப்போது ஜாதக ரீதியாகவும், ஆருட ரீதியாகவும் பலாபலன்கள் எழுதி அனுப்பப்படும்.

L. V. S. மணி (B. A. Hons Maths)

அவர்களால் கணிக்கப்பட்டு

5 கேள்விகளுக்கு பதில் ரூ. 1. ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2.

ஒரு வருஷ பலன் ஆந்திராந்திர விபரமுடன் ரூ. 2.

ஒரு தசைக்குப் பலன் எழுத ரூ. 5. ஆயுள்வரை பொதுப் பலன் ரூ. 10.

பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம் அல்லது தபால் எழுதும் நேரம் தேவை.

E. S. K. சுவாமி
ஜோதிஷர்

"பிரஹத் ஜோதிஷ நிலயம்" நெ. 71, அக்ராஹாரம், புரசைவாக்கம், மதராஸ்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

கட் செவியென்று பெயர்? ஏன்? பாம்பு சப்தத்தை வெகு சுலபமாகவும், சீக்கிரமாகவும் கிரகித்துக்கொள்ளுகிறது. அது எப்படி? பாம்புக்கு வயிறுதான் செவி; வயிற்றின் மூலம் அது சீக்கிரத்தில் சப்தத்தைக் கிரகித்துக் கொள்ளுகிறது. அதேபோல், விட்டில் பூச்சியும்; இந்த விட்டில் பூச்சியிடம் இன்னமொரு அபூர்வமான குணம் அடங்கியிருக்கிறது. அது என்ன தெரியுமா? விட்டில் பூச்சிக்குச் சங்கீதத்தில் அதிகப் பிரியமுண்டு. விட்டில் பூசசியின் பின் கால்களில் ஏராளமான முற்களுண்டு. அந்த முற்களை ஒன்றோடொன்று தேய்த்து ஒருவித ரீங்காரஞ் செய்கிறது. அந்த ரீங்காரத்தைக் கேட்டு விட்டில் பூச்சிகள் ஆனந்த மடைகின்றன. இதுவும் இயற்கையின் அற்புதங்களில் ஒன்றல்லவா?

காளான் ஜோதி !

பூச்சி, புழுக்களை விட்டுவிடுவோம்; மழை காலத்தில் பூமிக்குள்ளிருந்து வெளிவரும் காளான்களை அநேகர் பார்த்திருக்கலாம். சிற்சில இடங்களில் இவற்றைக் காளான் குடை என்பார்கள்; வேறு சில இடங்களில் நாய்க்குடையென்பார்கள். இவை குடைபோல் விரிந்திருப்பதே இதற்குக் காரணம். இந்தக் குடைகள் சிறிதுகாலமிருக்கும், அப்புறம் அழிந்துபோகும். ஆனால், இந்தக் காளான் குடைகளிடம் எவ்விதமான சக்தி அடங்கியிருக்கிறது தெரியுமா? இவை பார்ப்பதற்குப் பயனற்றவை போல் தெரிகின்றன. ஆனால், சிற்சில காளான்களிடம் ஒருவித மின்சார

சக்தி அடங்கியிருப்பதாகச் சில இயற்கை சாஸ்திரிகள் கூறுகிறார்கள். மின் மினிப் பூச்சிகளைக் கண்டிருக்கலாம். இராக் காலங்களில் அவை பிரகாசமான வெளிச்சம் கொடுப்பதுபோல், சில காளான்கள் பிரகசமான வெளிச்சம் கொடுக்கின்றனவாம்! இதற்குக் காரணம் அவைகளிடம் அடங்கியிருக்கும் மின்சார சக்தியே என்று கூறுகிறார்கள். இந்தக் காளான்கள் பயனற்றவையென எல்லோரும் நினைக்கிறார்கள். அப்படியல்ல; நீங்கள் படிக்கும் இந்த எழுத்துக்களை அச்சிடுவதற்கு இந்தக் காளான்களையே வெள்ளையர் உபயோகிக்கிறார்கள். அதாவது, எழுதும் மை, அச்சடிக்கும் கருப்பு மை முதலியவைகள் செய்ய இந்தக் காளான்களைப் பெரும்பாலும் உபயோகிப்பதாகத் தெரிகிறது. பயனற்றதாகக் கருதும் இந்தக் காளான்கள் எவ்வளவு பயன்படுகிறது தெரிகிறதா? பயனற்றதென உலகில் எதுவும்கிடையாது; அவைகளைப் பயன்படுத்தக்கூடிய வழி நமக்குத் தெரியாமலிருக்கலாம். உலகில் சகல பொருள்களும ஒருவகையில் மனிதருக்கு உபயோகப்படத்தான் செய்கின்றன.

பலே குழந்தை!

இந்தச் சிறுவனுக்கு வயது $3\frac{1}{2}$ தான்; இவன் அமேரிக்காவில், நியூ ஜெர்ஸி என்னுமிடத்தில் வசித்து

வருகிறான். இவன் பெயர் சிப் லூகாஸ். இந்தச் சிறு வயதில் இவன் சுமார் 50,000 மைல்களுக்கு அதிகமாக யாத்திரை செய்திருக்கிறான். இவனைப்போல் யாத்திரை செய்த குழந்தை உலகில் யாருமே கிடையாதென்று சொல்லுகிறார்கள்.

SEARCHLIGHT CUTTING DIAMONDS

சர்ச்லைட் கட்டிங்டைமன்டஸ் வர்ஜீனியாமலைப்பிரதேசங்களில்உற்பத்தியாகி சிறந்த மின்சாரசாஸ்திரிகளின் ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்டு அசல் வைரங்களுக்கு இணையாக விளங்குவது சர்ச்லைட்வைரங்கள்



S.தீன்சேட்
94.தங்கசாலை தெரு
சௌகார்பேட்டை
ஜி.டி.மதராஸ்.

தோடு சைஸ் கமலம் 1க்கு 0-8-0 கடுக்கன் சைஸ் கமலம் 1க்கு 0-7-0 பேசர் சைஸ் கமலம் 1க்கு 0-6-0

ஒற்றுமை மாதிரிப் பிரதி
இதயம்
ஒற்றுமை, தியாகராயநகர், மதருஸ்.

இந்தியா, சிலோன், ரங்கூன், மலேயா முதலிய நாடுகளில் பிரசித்தி பெற்றது!

குணத்தில் நிகரற்றது! யாவராலும் புகழப் பெற்றது!

பழனி' மலையப்பசாமி வைத்தியசாலையின் மருந்துகள் என்பதை அறியுங்கள்.

சென்னை ராஜதானியின் பல பாகங்களில் பல்வேறு சமயங்களில் கூடிய சித்த, ஆயிர்வே த வைத்திய மகா நாடுகளில் தலைமை தாங்கிய அரசாங்க மந்திரிகள், கவர்ன்மெண்டு ஆயுர்வேத காலேஜ் பிரின்சிபால், பிரபல டாக்டர் முதலியவர்கள் ஷை மருந்துகளை பரீக்ஷித்து, முதல்தர தேவ ஔஷதங்களென ஸ்பெஷல் வகுப்பில் தங்க மெடல்கள், பரிசு அளித்திருக்கின்றனர்.

வைத்திய ஆசிரியர் சி. எம். சாமி

குரு தாம்பிர பஸ்பம்

சகல வியாதிகளுக்கும் ஓர் அற்புத சஞ்சீவி.

இது, அநேக டாக்டர்களால் தீராதெனக் கைவிடப்பட்ட கோடிய ரோகங்களை எல்லாம் தீர்த்து உலகமெங்கும் புகழும், கீர்த்தியும் பெற்றிருக்கிறது.

சகலவிதமான குஷ்டம், திமிர், மதமதப்பு, குறைநோய், குழிப்புண், பவுத்திரம், கண்டமாலை, கிரந்தி, ஈளை, இளைப்பு, அண்டவாய்வு, யானைக்கால், குன்மம், தேக ஊறல், அரிப்பு, தடிப்பு, சொறிந்தால் நீர்வடிதல், சொரிகள் பத்துகள், விஷநீர்கள், கரப்பான் புண்கள், ஆறாத ரணங்கள் முதலிய வியாதிகளைக் குணமாக்கும். ஒருமுறை உபயோகித்தால் இதன் அருங்குணம் விளங்கும்.

100-வேளை பஸ்பம் ரூ. 50—0—0. 50-வேளை பஸ்பம் ரூ. 25—0—0. ஏழைகளுக்குப் பாதிவிலை.

நற்சாக்ஷி:—எனக்கு சரீரமெங்கும் பரவியிருந்த மேகப் புண்கள், தடிப்புகள், மதமதப்பு, குஷ்டம் முதலிய வியாதிகள் பல டாக்டர்களால் முடியாதென கைவிட்ட சமயம், தங்கள் தாம்பிர பஸ்பம் ஒரு மாத காலம் சாப்பிட்டதில் பூரண குணம் தந்து எனது இயற்கையான நிறத்தை உண்டாக்கி இருக்கிறது. (Sd.) ஒ. ஆ. மருதாசலத் தேவன், இருகூர், பல்லடம். 29—3—38.

(பிராஞ்சு) 1-54, அருணாசல நாயக்கன் தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

தலைமை ஆபீஸ்:—

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S. I. 2

மோசம் போன ஜோகு!

அல்பேனியா அரசர் :: :: முடி சூட்டிய வரலாறு

முடி சார்ந்த மன்னரும். முடிவில் ஒரு பிடி சாம்பலாவது திண்ணம் என்பது பழமொழி. அதேபோல், எத்தனையோ மன்னர்கள், சக்கிரவர்த்திகள், சர்வாதிகாரிகள் இருந்த இடமும், வதிந்த புலனும் தெரியாமல் மறைந்தனர். எத்தனையோ ஏகாதிபத்தியங்கள் ஒழிந்தன. அதிலும், சென்ற மகா யுத்தத்துக்குப் பின் மறைந்த அரசர்கள் பலர்; சில அரசர் தோன்றினர். ஆனால், அவர்கள் சொற்ப காலத்தில் நாடு விட்டு ஓடினர். அவ்வித அரசர்களில் அல்பேனியா மன்னர், ஜோகு ஒருவர். அவர், இன்று கிரிஸில் தஞ்சமடைந்திருக்கிறார். சுதந்திரமாக இருந்த அல்பேனியா, இன்று இதாலிக்கு அடிமையாகி இருக்கிறது.

அல்பேனியா முடியிழந்து, தற்போது கிரீஸில் தஞ்சம் புகுந்திருக்கும் ஜோகு மன்னர்.

அல்பேனியா மன்னர் ஜோகுவை மணந்த ஹங்கேரிப் பெண் ஜெரால்டின். இவரே அல்பேனியா ராணி. இவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த இரண்டொரு மணி நேரத்தில் அல்பேனியாமீது இதாலி படையெடுத்து வந்தது. அரசரும், ராணியும் நாடுவிட்டு ஓடவேண்டியதாயிற்று. குழந்தை பிறந்த நேரப்பலன் போலும்!

சுமார் 5 நூற்றாண்டுகளாக அல்பேனியா, துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1912-ம் வருடம், அல்பேனியாவின் சுதந்திரக் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. அந்தக் கிளர்ச்சிக்கு அல்பேனியா இளைஞர்களே காரணமாயிருந்தனர். அந்த இளைஞர் கூட்டத்தில் ஜோகு சேர்ந்திருந்தார். 1914-ம் வருடம் ஆரம்பித்த ஐரோப்பிய யுத்தம் அதற்குச் சாதகமாக இருந்தது. ஆகவே, அல்பேனியா இளைஞர், அவர்கள் தாய்நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டனர். உயிரைக் கொடுத்தேனும், அல்பேனியா சுதந்திரத்தைப் பாதுகாப்பதென இரத்தத்தால் ஒப்பந்தஞ் செய்துகொண்டனர். மகா யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னமே அல்பேனியா சுதந்திரம் பெற்றது. துருக்கி, அல்பேனியாவை எதிர்த்து மீண்டும் அதை அடிமை கொள்ளத் துணியவில்லை. அதற்குள் யுத்தம் ஆரம்பித்துவிட்டதால், துருக்கி சாம்ராஜ்யம் அழிந்தது; சுல்தானும் நாடு விட்டு ஓட வேண்டியதாயிற்று. அன்று அல்பேனியாவின் சுதந்திரத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்னும் ஓயவில்லை. இன்று, இதாலி அல்பேனியாவைக் கைப்பற்றியபோதிலும், அங்கு இதாலியை எதிர்த்து அல்பேனிய இளஞ் சிங்கங்கள் போராடிக்கொண்டே இருக்கின்றன. அல்பேனிய மன்னர் ஜோகு, நாடுவிட்டு ஓடிய போதிலும், அல்பேனியா இளைஞர் ஆரம்பித்த போராட்டத்தை இனிமேலும் ஆரம்பித்து நடத்திக் கொண்டேயிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதனால் பயனேற்படுமா வென்பதுதான் சந்தேகம்.

ஜோகு மன்னர்

ஜோகு மன்னர் இளைஞர்; நல்ல வீரர். அவர் அரச குலத்தில் வந்தவரல்ல. ஆனால், மலைப்பிரதேசங்களில் வசித்து வரும் ஒரு முஸ்லிம்

அல்பேனிய மன்னர் ஜோகுவை உறவாடிக்கெடுத்த நயவஞ்சக முஸோலினி. இவரே அல்பேனியரின் அடிமைத்தனத்துக்குக் காரணர்.

தலைவர் குடும்பத்தில் வந்தவர். அவருக்குப் படிப்பு வாசனை கிடையாது; வாள் யுத்தம், குதிரை யேற்றம் முதலியவைகளே அவருடைய படிப்பு. யுத்தத்தில் நிபுணர்; சண்டை செய்வதில் அஞ்சியதே இல்லை. அல்பேனியா சுதந்திரத்துக்காகப் போராடிய வீரர்களில் முதன்மை வகித்தவர் அவரே. அந்தச் சுதந்திர யுத்தத்தில் அவர் ஏழு எட்டு முறை காய மடைந்தார். என்றாலும்; சுதந்திர யுத்தத்தை நிறுத்தவில்லை. அல்பேனியா சுதந்திரத்தைப் பெற்றார். 1928ம் வருடம் அவரே, அல்பேனியாவில் குடியரசை ஸ்தாபித்தார்; அந்தக் குடியரசுக்கு அவரே முதன் மந்திரியாகவும், தலைவராகவும், தளகர்த்தராகவுமிருந்துவந்தார். அவரை அல்பேனிய மக்கள் ஆதரித்தனர். "வெற்றிக் கழுகு!" எனக் கொண்டாடினர்.

மோசம் போனார்!

ஜோகு முதன் மந்திரியாக இருந்த காலத்தில், அதாவது. 1929ம் வருடம், அவர் பிற ஐரோப்பிய தேசங்களின் கூட்டுறவை நாடினார். முதன் முதலில் முஸோலினியின் நட்பைப் பெற்றார். இதுதான் பிற்காலத்தில் அவருக்கு பெரும் வினையாக வந்து முடிந்தது. முஸோலினியின் நட்பு, அரசராக இருந்த அவரை ஆண்டியாக்கிவிட்டது. அல்பேனியாவையும் இதாலிக்கு இன்று அடிமையாக்க முஸோலினியின் நட்பே காரணம். முஸோலினி நயவஞ்சகமாக அல்பேனியா அரசருடன் பழகினார். ஆதியில் அவருக்கு 20 லக்ஷம் பவுன் கடன்

அல்பேனியா மன்னருக்கு நான்கு சகோதரிகள் உண்டு. மூத்த சகோதரியை மணந்த இளவரசர், அபித. அவர் நாடிழந்த துருக்கி சுல்தானின் 20-வது புதல்வர்.

கொடுத்துதவினார். அந்தப் பணத்தைக்கொண்டு, அல்பேனியா அரசர் நாட்டைச் சீர்திருத்த முயன்றார். ரோடுகளை அமைத்தார்; ராணுவத்தைச் சீர்திருத்தஞ்செய்தார்; அழகிய சில அரண்மனைகளைக் கட்டினார். அவரிடமிருந்த பணம் காலியாகிவிட்டது. ஆகவே, மீண்டும் கடன் வாங்கினார். அல்பேனியாவை இதாலிக்கு அடிமையாக்கினார். அல்பேனியாவில் சுரங்கங்களில் கிடைத்த இரும்பு, பெட்ரோல், மண்ணெண்ணெய் முதலியவைகளை இதாலிக்கே கொடுத்து வந்தார். அல்பேனியாவில் இதாலிக் கம்பெனிகளுக்கே சுரங்கங்களின் சர்வ உரிமை கொடுத்தார். அல்பேனியா ராணுவத்தைத் திருத்தியமைக்கும் பொறுப்பையும் இதாலி ஜெனரல்களிடமே விட்டு வைத்தார். இதுதான் மதி மோசமான செயல். படிப்படியாக, முஸோலினி, அல்பேனியாவை அடிமை கொள்ளச் சதி செய்யக் காரணமாயிருந்தது. ஆனால், ஜோகு முஸோலினியை நம்பினார்; அவர் கழுத்தறுப்பாரென்ற சந்தேகங்கூட ஜோகுவுக்கு ஏற்படவில்லை.

கலியாண ஆசை!

ஜோகு ஒரு முஸ்லிம்; அவர் வாலிபப் பருவத்தில் அல்பேனிய முஸ்லிம்களை வசப்படுத்த ஒரு முஸ்

(அடுத்த பக்கம் பார்க்க)

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த
வி. என். ஷண்முகம் பட்டணம் பொடியை
எப்பொழுதும் உபயோகியுங்கள்
நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ். (ஏஜெண்டுகள் தேவை)

லிம் மாதை மணந்து கொண்டார். ஆனால், அல்பேனியா ஐரோப்பிய நாடுகளின் மத்தியிலிருப்பதால், அவரும் ஐரோப்பிய நாகரிகத்தில் பழகினார். நாகரிகமான ஒரு ஐரோப்பிய பெண்ணை மணந்து கொள்ள விரும்பினார். முஸோலினியும் ஆசை வார்த்தை காட்டினார். அல்பேனியாவுக்கு ஜோகு பிரதம மந்திரியாகவும், தளகர்த்தராகவுமிருந்தார்; அவர் அரசராக முடி சூட்டிக் கொண்டால், இதாலியின் ராஜ வம்சத்தில் பிறந்த ஒரு பெண்ணை மணஞ் செய்து கொடுப்பதாகச் சொன்னார். ஜோகு அவரை நம்பினார். அவர் அல்பேனியாவுக்கு அரசராக முடி சூட்டிக்கொள்ள நினைத்தார். ஆனால், அல்பேனியா மக்கள் அதை ஆதரிக்கவில்லை. பல விடங்களில் அவரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். ஜோகு பலாத்காரமாக அல்பேனியா மக்களின் கிளர்ச்சியை அடக்கினார். அவர் பகிரங்கமாக முடி சூட்டிக்கொள்ள பயந்து, ரசசியமாக அவருடைய அரண்மனையில் அல்பேனியா அரசரென முடி சூட்டிக்கொண்டார். அவர் முடி சூட்டிக்கொள்ள, ஒரு தங்க முடியை முஸோலினியே, இதாலியிலிருந்து, ஒரு தொப்பிப் பெட்டிக்குள் முடியை மறைத்து அனுப்பிவைத்தார். ஜோகு, அல்பேனியா அரசராக முடி சூட்டிக் கொண்டதும், அவருக்கு நாட்டில் அதிக எதிர்ப்பு ஏற்பட்டது. ஆகவே, அவர் பயந்து, அரண்மனையிலிருந்து வெளி வராமலிருந்தார். வருடத்துக்கு நான்குமுறை கூட அவர் வெளி வருவது அபூர்வம்!

உயிருக்குப் பயம்!

அவருடைய உயிருக்குப் பயந்து தகுந்த பாதுகாப்புத் தேடிக் கொண்டார். அவர் உயிரைப் பாதுகாப்பதற்கென ஒரு சிறு ராணுவமுண்டு. அவருடைய அரண்மனையைச் சுற்றிலும் 2 கெஜ தூரத்துக்கு ஒரு சோல்ஜர் நின்று காவல் காத்து வந்தனர். மன்னர் அரண்மனைக்குள்ளும் எபபொழுதும் சோல்ஜர்கள் தயாராக இருந்தார்கள். மன்னர் க்ஷவரஞ் செய்து கொள்ளக்கூடப் பயந்தார். அதற்காக இதாலியிலிருந்த ஒரு அம்பட்டனைத் தருவித்திருந்தார். அந்த அம்பட்டனைக்கூட முஸோலினியே தேடியெடுத்து அனுப்பினாராம். அந்த அம்பட்டனுக்கு மாதம் 35 பவுன் சம்பளம்; ஒரு முறை க்ஷவரஞ் செய்து கொள்ளுவதற்கு 15 ஷிலிங் கூலி; இதுபோக அந்த அம்பட்டனுக்கு அரண்மனைக்குள்ளாகவே தனி இட வசதிகளெல்லாம் கொடுத்திருந்தார். அந்த அம்பட்டனிடம்கூட அவருக்கு நம்பிக்கை கிடையாது. அவர் க்ஷவரஞ் செய்துகொள்ளும்போது, கைத்துப்பாக்கிகளுடன் இரு சோல்ஜர்கள் மன்னர் அருகில் தயாராக நின்றுகொண்டிருப்பதுண்டு. மன்னர் ஜோகு எங்குமே சாப்பிடுவதில்லை; அரண்மனையில் மட்டும் சாப்பிடுவார். அவருக்கு வேண்டிய ஆகாரங்களைத் தயார் செய்ய வேண்டியது அவருடைய தாயார், அல்லது, அவருடைய சகோதரி. அப்

மோசம் போன ஜோகு!

(முன் பக்கத் தொடர்ச்சி)

படி இருந்தும் அவர் சாப்பிடும்ந்ததும், ஜோகு மன்னர் முதலில் ஆகாரத்தில் அவருக்குச் சந்தேகமணந்து கொண்ட முஸ்லிம் முண்டு. ஆதலால், அவர் சாப்பிடு பெண்ணை விவாகரத்து செய்துவிட் வதற்குமுன், அந்த ஆசாரத்தைருசி டார். அல்பேனியாவில், ஐரோப்பிய பார்பபதற்கென ஒருஆளை அமர்த்தி சீர்திருத்தங்களைச் செய்ய முயற்சித் யிருந்தார். அவருடைய ஆகாரத் தார். பன்னருக்கு முன்னிருந்த தில் யாரும் விஷத்தைக் கலந்துவிடக் எதிர்ப்பிலும், அதிக எதிர்ப்பு ஏற் கூடுமென்ற பயமே இவ்வளவு முன் பட்டது. பல வைதிக முஸ்லிம் தலை னேற்பாட்டுச்கும் காரணம். வர், அரசனரத் தீவிரமாக

அல்பேனியா மன்னரின் நான்கு சகோதரிகள். மன்னர், அவருடைய சகோதரிகளுடன், டிரானு மாளிகைத் தோட்டத்தில் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தபோது எடுத்த படம். அந்த அரண்மனையும், தோட்டமும் இன்று இதாலியரின் கையிலிருக்கிறது.

பெண் கிடைக்கவில்லை

அல்பேனியாவுக்கு அரசர் என முடிசூட்டிக் கொண்டபோதிலும், ஜோகுவுக்குப் பெண் கிடைப்பது அரிதாகிவிட்டது. முஸோலினி வாக்குறுதி கொடுத்ததுபோல் அவர் அவருக்குப் பெண் தேடிக்கொடுக்கவில்லை. ஜோகு முஸ்லிம் அரசர்; ஐரோப்பிய ராஜ வம்சத்துப் பெண்கள் அவரை மணந்துகொள்ள மறுத்துவிட்டனர். அல்பேனியாமன்னர் அடிக்கடி இதாலிக்குச் சென்று பெண் தேடி வந்தார். கடைசியில் அமெரிக்கத் தாயிடமாக ஒரு ஹங்கேரிய பிரபுவுக்குப் பிறந்த ஒரு பெண்ணைக் காதலித்தார். அந்தப் பெண்ணும் ஜோகுவை மணந்து கொள்ள ஒப்புக்கொண்டாள். அவளை ஜோகு மன்னர் மணந்து கொண்டார். அரசியின் பெயர் ஜேரால்டின். ஜோகு மன்னர் ஹங்கேரியப் பிரபு வம்சத்தில் வந்த ஒரு பெண்ணை மணந்துகொண்டது முஸோலினிக்குப் பிடிக்கவில்லை.

சீர்திருத்த வேகம்

ஐரோப்பியப் பெண்ணை மண

எதிர்த்து வந்தனர். அரசர் அவருடைய ராணுவங்களைக் கொண்டு, எதிர்ப்பைச் சமாளித்து வந்தார். என்றாலும், முற்போக்குடைய இளைஞர்களும், மற்றவர்களும் மன்னரை ஆதரித்து வந்தனர்.

கஷ்ட காலம்

முஸோலினியின் போக்கும், அவர் அல்பேனியாவை நசுக்கச் செய்த சூழ்ச்சியும் ஜோகு மன்னருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவர் முஸோலினியைப் பகிரங்கமாக எதிர்க்க ஆரம்பித்தார் ஆனால், முஸோலினியிடம் கடன் பட்டிருந்ததும், அல்பேனிய ராணுவத்தில், இதாலியா ஜெனரல்கள் இருந்ததும் அவருக்கு இடையூறாக இருந்தன. என்றாலும், ஜோகு மன்னர் அல்பேனிய சீர்திருத்தத்தில் தீவிரமாக இருந்தார். அவருக்கு, அவருடைய ராணி ஜெரால்டினும், அவருடைய நான்கு சகோதரிகளும் பெரிதும் உதவியாக இருந்தனர். ஜோகு மன்னர் அல்பேனியாவைப் பலப் படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கியது, முஸோலினிக்குச் சந்தேகத்தை உண்டு பண்ணியது. எந்த விதத்திலும் அல்பேனியாவை அடக்கி, அதை இதாலியுடன் சேர்த்துக் கொள்ள விரும்பினார். திடீரென அல்பேனியாமீது படையெடுத்துச் சென்றார். முஸோலினியும், இதாலி மன்னரும், ஜோகு மன்னருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து விட்டனர். இதாலியின் எதிர்ப்பைச் சமாளிக்க ஜோகு மன்னர் யுத்தத்தில் இறங்கினார். யுத்தம் ஆரம்பித்த அன்று அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பிறந்த சில மணிநேரத்தில், அவருடைய அரண்மனைமீதே வெடிகுண்டுகள் வந்து விழுந்தன. மன்னர் ராணியையும், குழந்தையையும் பாதுகாக்க அரண்மனைக்கு ஓடினார். ராணியையும், குழந்தையும் கிரீஸ் தேசத்திலுள்ள பிலோரினா என்னுமிடத்துக்கு அனுப்பி வைத்தார். அங்கு ஒரு சிறு ஹோட்டலில் சில அறைகளை ஏற்பாடு செய்திருந்தார். அந்த அறையிலேயே, இன்று அல்பேனியா ராணி, சில வாரங்களுக்கு முன் பிறந்த அல்பேனியா இளவரசருடன் படுத்த படுக்கையிலிருந்து வருகிறாள்.

மன்னர் ஓட்டம்!

அல்பேனியாவின் தலை நகரான டிரானாவைவிட்டு ராணி போக மறுத்தாள்; அரசர் அருகிலேயே இருந்து மடிவதென்று கெஞ்சினாள். ஆனால், ஜோகு மன்னர் அதற்கு இசையவில்லை. பல மோட்டார்கார்களையும், ஒரு ஆம்புலன்ஸ் ஒன்றும் ஏற்பாடு செய்து, ராணியை கிரீஸ் தேசத்துக்கு அனுப்பிவைத்தார். அரசர் ஜோகு, இதாலியரை எதிர்க்க யுத்தகளத்துக்குச் சென்றார். அவர் சுத்த வீரர்; ஆனால், அவருடைய தனிப்பட்ட வீரம் என்னசெய்யமுடியும்? இதாலியின் படைகளை எதிர்த்து நிற்க அவரால் முடியவில்லை. ஆகவே, அவரும் கிரீஸ் தேசத்துக்குச் சென்று, அரசியுடனும், அவர் குழந்தையுடனும் தங்கியிருந்து வருகிறார். மீண்டும், இதாலியரை வெருட்டியடித்து, அல்பேனியாவின் சுதந்திரத்தைப் பாதுகாக்க எண்ணங்கொண்டிருக்கிறார். அவர் எண்ணம் கைகூடுமாவென்பதுதான் சந்தேகம். அல்பேனியா மக்கள் இதாலியின் ஆட்சியை விரும்பவில்லை; இதாலியருக்கு எதிராக அங்கு மும்முரமான புரட்சி இருந்துகொண்டிருக்கிறது. அல்பேனியா மக்கள் சர்வதேச சங்கத்துக்கு முறைப்பட்டிருக்கிறார்கள். சர்வதேச சங்கம் உயிருடனிருக்கிறதா? அதுவே சந்தேகந்தான்! இந்த நிலைமையில் அல்பேனியா மீண்டும் சுதந்திர மடையும், அல்பேனியா மன்னர் ஜோகு மீண்டும் அல்பேனியாவுக்கு அரசராக வருவாராவென்று சொல்ல முடியாது. மன்னர் ஜோகு, முஸோலினியை நம்பி மோசம் போனார்! முஸோலினி ஆசை காட்டி ஜோகுவின் கழுத்தையறுத்தார்!! ஜோகு மன்னரின் ராஜ வாழ்க்கை இத்துடன் முற்றுப் பெற்றது.

மணத்திலும் குணத்திலும் சிறந்தது

நீபா
(வேப்பம், நீம், மார்கோசா.)
சோப்
GANGA WORKS ADYAR MADRAS.

தஞ்சாவூர் ஜில்லா ஏஜண்டு:—
ஈஸ்டேர்ன் மேர்கன்டைல் ஏஜென்ஸி, பஜார் தெருவு, கும்பகோணம்.

மனோரதம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றியதும், அங்குள்ள பல நகரங்களில் பல நோட்டீஸ்களை வழங்கினார்கள். அந்த நோட்டீஸ், ஜெர்மன், ஜெக் பாஷைகளில் எழுதப்பட்டிருந்தது. ஜெக் வாசிகள் அனைவரும் அவர்களுடைய துப்பாக்கி முதலிய ஆயுதங்களை ஜெர்மானியரிடம் கொடுத்துவிட வேண்டுமென்பதே அந்த நோட்டீசில் எழுதப்பட்டிருந்த வாசகங்களின் கருத்து. ஆனால், ஒரு நகரில் அவ்வாறு வழங்கப்பட்ட நோட்டீஸ் ஜெர்மன், ருமேனிய பாஷைகளில் எழுதப்பட்டிருந்தது. இது ஜெக் வாசிகளுக்குப் பெரிய ஆச்சரியமாகவிருந்தது. அவர்கள் ஆச்சரியத்தைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். ஏனெனில், ஜெர்மன் நாஜியர், பைத்தியக்காரர் அல்ல. அவர்கள் ஜெக்கோவை மட்டும் பிடிக்க எண்ணவில்லை; ருமேனியா தலையிலும் கல்லைத் தூக்கிப் போடவே காத்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் முன்னாடியே நோட்டீஸ் அடித்துத் தயாராக வைத்திருக்கிறார்கள். ஜெக்கோவுக்கென தனி நோட்டீஸ் அல்ல; ருமேனியா, போலந்து, ஹங்கேரி முதலிய பல பாஷைகளில் தனித் தனி ஏராளமான நோட்டீஸ் அடித்து வைத்திருக்கிறார்கள். ருமேனியருக்கென அச்சடிக்கப்பட்ட நோட்டீஸைத் தவறுதலாக ஜெக்கோவில் கொடுத்துவிட்டார்கள். அவ்வளவுதான். ஆனால், இதில் ஒரு விசேஷம். ருமேனியாவுக்குச் சீக்கிரத்தில் தலையிடி பிடிக்குமென்பதையே அந்த நோட்டீஸ் குறிப்பாகக் காட்டுகிறது. ஹிட்லர் போக்குத்தான் தெரியுமே? ருமேனியாவும் இதை அறிந்திருக்குமென்றே நினைக்கிறேன்.

*   *   *

ரோம்-பெர்லின் அச்சைப் பற்றி என்னமெல்லாமோ பேசிக் கொள்ளுகிறார்கள். அந்த அச்சை உடைக்கக் கடவுளாலும் முடியாதென ஹிட்லரும், முஸோலினியும் மீசையை முறுக்குகின்றனர். ஆனால், இதாலியரைப் பற்றி ஜெர்மானியர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? இதாலியர் ஒன்றுக் குதவாத சோம்பேறிகள்; கோழைகள் என்பது ஜெர்மானியர் எண்ணம். சென்ற மகா யுத்தத்தில் ஜெர்மன் பத்திரிகைகள் இதாலியரைக் கேலி செய்து எழுதின:—"இதாலி சவைக்குதவாத ஒரு அற்பத் தேசம், இதாலியர் அற்பப் பிராணிகளுக்குச் சமம். வெள்ளையர் பணத்துக்கு அவர்கள் அடிமையாகி விட்டனர்; அவர்களுடைய வாள், துப்பாக்கிகளை வெள்ளையர் பணத்திற்கு ஆசைப்பட்டு விற்றுவிட்டார்கள் பிரிட்டிஷாரோ, அல்லது, அவர்களுடன் சேர்ந்த இதர தேசங்களோ இதாலியை மதிக்கின்றனவா? இல்லை. இதாலியை மோசமாக மதித்து, அதை ஒதுக்கி வைத்தே வருகின்றன" என ஜெர்மன் பத்திரிகைகள் எழுதின. அந்த வாசகங்களை ஹிட்லர் மறக்கவில்லை. அதை அப்படியே அச்சிட்டு ஜெர்மன் சோல்ஜர்களிடையே வழங்கி வருகிறார். இதாலியின் மதிப்பைக் குறைக்கவேண்டுமென்பது ஹிட்லர் எண்ணம். இந்த ஹிட்லருடன் தான் முஸோலினி கொஞ்சிக் குலாவுகிறார். ரோம்-பெர்லின் அச்சைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொள்ளுகிறார். ஜெர்மனியில் நடக்கும் இந்த விஷமப் பிரசாரம் முஸோலினிக்குத் தெரியாமலிருக்கலாமென சிலர் நினைக்கலாம். ஐரோப்பாவில் நடக்கும் அந்தரங்கங்களையெல்லாம் அறிந்துவரும் இதாலி ஒற்றர்களுக்கு, ஹிட்லர் விஷமப் பிரசாரம் தெரியாமலிருக்க முடியாது. முஸோலினியும் அதை அறிந்தே இருப்பார். ஆனால், ஹிட்லரை விட்டால் முஸோலினிக்குக் கதியில்லை; முஸோலினியை விட்டால் ஹிட்லருக்குக் கதியில்லை. நாதியற்ற இந்த இருவரும் ஒருவரையொருவர் கட்டியழுதால் தான் காரியஞ் சாதிக்கமுடியும்; இன்றேல், இரு சர்வாதிகாரிகளும் நாட்டை விட்டு ஓடவேண்டியதுதான்!

*   *   *

ஹிட்லரின் வலது கைபோன்றிருக்கும் ஜெனரல் கோரிங், சமீபத்தில் ரோமுக்குச்சென்று, அங்கு முஸோலினியுடன் ராணுவ ஒப்பந்த ஏற்பாடுகள் செய்தபின், லிபியாவுக்குப் போனார். இதாலிக்குச் சொந்தமான லிபியாவில் கவர்னராக இருக்கிறார் மார்ஷல் பால்போ. பால்போவுக்கும், ஜெனரல் கோரிங்குக்கும் அதிக ஒற்றுமையுண்டு. ஹிட்லருக்குப்பின், ஜெர்மனிக்கு கோரிங் சர்வாதிகாரியாக வர நினைக்கிறார்; முஸோலினிக்குப்பின் இதாலிக்கு, மார்ஷல் பால்போ சர்வாதிகாரியாக வர நினைக்கிறார். ஆகவே, இருவரும் லிபியாவில அவர்கள எதிர்கால வேலைத் திட்டத்தைப் பற்றி யோசித்திருக்கக்கூடும். இருவரும் பெரிய டம்பாச்சாரிகள் கோரிங் விவாகத்தின்போது, அவர் செய்த டாம்பீகம் கொஞ்சமல்ல; லிபியாவுக்குக் கோரிங் வந்ததும், அவரை பால்போ தடபுடலாக வரவேற்று விருந்து நடத்தினார். இந்த இருவருக்கும் ஒருவர் பாஷை மற்றவருக்குத் தெரியாது. ஆகவே இருவரும் பிரஞ்சு பாஷையில் பேசிக்கொண்டார்களாம்!

*   *   *

ஐரோப்பாவில் யுத்தம் வருவது என்னமோ நிச்சயம். அந்த யுத்தத்தில் யார் ஜெயிக்கப் போகிறார்களோ தெரியவில்லை ஆனால், முஸோலினிக்கும், ஹிட்லருக்கும் அடுத்த யுத்தத்தோடு சாவு மணி அடிக்க வேண்டியதுதான்! இது, இரு சர்வாதிகாரிகளுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, இருவரும் அவர்கள் சரித்திரத்தை இப்பொழுதே எழுதி வைக்க ஆரம்பித்து விட்டார்கள். ஹிட்லர் எழுதிய "மெய்ன் கெம்ப்" என்னும் புஸ்தகம் ஏராளமாக விலையாகி வருகிறது. அதில் அவருக்கு கொள்ளை லாபம். இப்பொழுது "மெய்ன் லெபன்" (எனது ஜீவியம்) என்னும் புஸ்தகம் எழுதி வருகிறார். அதிலும் பெரும் கொள்ளை கொள்ள நினைக்கிறார். அந்தக் கொள்ளை அவருக்குக் கிடைக்குமோ என்னமோ கடவுளுக்கே தெரியும்! அவருக்கு லாபம் கிடைக்கட்டும், அல்லது, கிடைக்காமல் போகட்டும்; அதைப் பற்றி யாருக்கும் கவலை வேண்டாம் ஹிட்லர் அவர் சரித்திரத்தை எழுதி வைத்தால், அதனால் உலகத்துக்குப் பயன் கிடைக்கலாம். அந்த ஒரு தர்ம காரியத்தையாவது ஹிட்லர் செய்துவிட்டுப் போனால், அவர் செய்த அதர்மங்களுக்கு அது ஒன்றுவது பிராயச் சித்தமாக இருக்கும். முஸோலினிக்கும் அப்படியே.

*   *   *

யுத்தத்துக்குப் பயந்து சர்வ தேசங்களும், தீவிரமான ஆராய்ச்சியில் இறங்கியிருக்கின்றன. புது மாதிரியான ஆயுதங்களையும், விஷப் புகை, வெடி குண்டுகளையும், கொல்லும் ஒளி, முதலிய நிஷ்டூரமான சாதனங்களையும் கண்டுபிடித்து வருகிறார்கள். ரஷியரும் சும்மா இருக்கவில்லை. ரஷிய விமானப் படையே உலகில் பேர் பெற்றது. அந்த விமானங்கள் பறந்து வந்தால் சப்தம் கேளாமலிருக்க ஒரு முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். சப்தம் கேட்காமலிருக்கப் பாதரசம் பெரிதும் உதவியாக இருக்கிறதாம்! ஆகவ, ரஷியாவில் பாதரசத்துக்கு அதிகக் கிராக்கி. மேலும், அந்தப் பாதரசத்தின் உதவியால் பிற விமானங்கள் பறந்து வரும் சப்தத்தைக் கிரகிக்கவும் ஒரு முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம்! பிறவிமானங்கள் சுமார் 10,000 அடி உயரத்தில் பறந்து சென்றாலும், அவை பறந்து வரும் சப்தத்தை ரஷிய ரசாயன நிபுணர்கள் நொடிப் பொழுதில் கண்டு பிடித்து விடுகிறார்கள். இது போன்று பல நவீன கருவிகளையும், யுத்த சாதனங்களையும் கண்டு பிடிப்பதில் ரஷியர் ரொம்பத் தீவிரமாக இருக்கிறார்கள். இது ஜப்பானை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது!

*   *   *

இந்த நிலைமையில் ஜப்பானியர் சும்மா இருப்பார்களா? யுத்த காலத்தில் ரகசியக் கடிதப் போக்குவரத்துக்கள்செய்ய பெரும்பாலும் புறாக்களையே உபயோகித்து வந்தார்கள். இப்பொழுது அந்த ரகசியங்களைக் கொண்டுபோக ஜப்பானிய நிபுணரொருவர் தேனீக்களைப் பழக்கி வருகிறாராம்! இதில் அவர் வெற்றி பெற்றிருப்பதாகவும் கேள்வி.

*   *   *

யுத்தம் வந்தால், யுத்தத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு கோடி கோடியாய் தங்கப் பவுன்களைக் கொட்டிக் குவிக்க யுத்தளவாடத் தொழிற்சாலை முதலாளிகள் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள். யுத்த தேவதைக்குத் தினசரி பூஜை செய்து வருகிறார்கள். அவர்கள் ஆவல் பூர்த்தியாக யுத்தப் பேயும் ஆசிர்வதித்து விட்டது இந்த முதலாளிகளில் தீவிரமாக இருப்பவர்கள் பிரிட்டிஷார்தான். வரப்போகும் யுத்தத்தை எதிர்பார்த்து, ஐரோப்பாவே கிடுகிடுத்துப் போயிருக்கிறது. என்றாலும், பிரிட்டிஷார் மீசையில் மண் ஒட்டவில்லையென்று ஜம்பம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஜம்பம் ஹிட்லர், முஸோலினியிடம் செல்லுமா? செல்லவே செல்லாது. பிரிட்டிஷ் கிழச் சிங்கத்தின் வாலை ஒட்ட அறுத்துப், பற்களையும் பிடுங்கிவிடுவார்களென்பது நிச்சயம். ஆகவே, பிரிட்டிஷ் சிங்கம் இந்தியரிடந்தான் வாலாட்டுகிறது! இந்தியர் அடிமைகள், ஆதரவற்றவர்களென்பது பிரிட்டிஷாருக்குத் தெரியும். ஆகவே, இந்தியரை மிரட்டி வருகிறார்கள். யுத்தம் வந்தால் இந்தியர் உதவிச் செய்யவேண்டுமென வற்புறுத்துகிறார்கள். இந்திய தேசியக் காங்கிரஸோ, பிரிட்டிஷாருக்கு யுத்தத்தில் உதவிச் செய்யக்கூடாதெனத் தீர்மானித்திருக்கிறது. அந்தத் தீர்மானத்தைப் பன்முறை வற்புறுத்தியும் இருக்கிறது. என்றாலும், பிரிட்டனில் என்ன பிரசாரம் நடக்கிறது தெரியுமா? இந்தியர் பிரிட்டிஷாருக்கு யுத்தத்தில் உதவிச் செய்யப்போவதாக வெள்ளைப் பத்திரிகைகள் மும்முரமாக எழுதி வருகின்றன. சென்ற மகா யுத்தத்தில் இந்தியர் உதவிச்செய்தார்களல்லவா? அதேபோல் அடுத்த யுத்தத்திலும் உதவிச் செய்வார்களென்று அப் பத்திரிகைகள் காரணம் காட்டுகின்றன. அத்துடன் நிற்கவில்லை; இந்தியர், பிரிட்டிஷாருக்கு யுத்தத்தில் உதவிச் செய்துதான் ஆகவேண்டுமெனச் சென்ற மகா யுத்தத்தின்போது சர். பெரோஷா மேத்தா பேசியும், எழுதியும் வந்தார். அவர் காலஞ்சென்று விட்டார். அவர் அக்காலத்தில் எழுதிய விஷயங்களை, அப்பத்திரிகைகள் இப்பொழுது பிரகாசமாகப் பிரசுரித்து வருகின்றன. பிரிட்டிஷாரின் பிரசாரத் தந்திரங்களில் இது ஒன்று. பிரிட்டிஷ் மக்களை மண்டுகளென அப் பத்திரிகைகள் நினைத்துக் கொண்டனபோலும்! தீக்கோழி, தன் தலையை மண்ணில்புதைத்துக்கொண்டால், உலகமே இருண்டு விட்டது; அதை யாரும் காண முடியாதென்று நினைத்துக் கொள்ளுமாம். அதேபோல் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் நினைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்தத் தீக்கோழியின் மூட தந்திரத்தால் பிரிட்டிஷ் மக்களை ஏமாற்றிவிட முடியுமா? ஒருபோதும் முடியாது. சிறிது காலத்துக்கு ஏமாற்றலாம்; எக்காலமும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. ஆனால், பிரிட்டிஷார் ஏமாந்தபோதிலும், இந்தியர் ஒருபோதும் ஏமாறப் போவதில்லை. வெள்ளையர் இதை நிச்சயமாக அறிந்து கொள்ளுவார்களாக.

டிரேட்மார்க்
லேபில் டிசைன்
முதலிய வைகளை
கல்கத்தா
ரிஜிஸ்டர்
செய்ய
ஜி. ஏ. ஓர்க்ஸ்,
6. பந்தர் தெரு, மதராஸ்.

தோழர் கூற்றுவர் யார்?

ஆஷாட பூதிகளிடம் எச்சரிக்கை!

- ஒற்றுமையே பலம் -

(தோழன்)

உலகத் தொழிலாளர் நிலைமையைக் கவனிக்கும்போது, இந்தியத் தொழிலாளர் நிலைமை மிக மிக மோசம். சென்னைத் தொழிலாளர், விசேஷமாகத் தமிழ் தோழர்களின் நிலைமையைக் காணும்போது எந்தத் தமிழனும் கண்ணீர் வடிக்காமலிருக்கமுடியாது. தொழிலாளர் தலைவரென்று சொல்லிக்கொண்டு முன்வந்தவர்கள் எல்லோரும் இன்று எங்கே இருக்கிறார்கள்? தோழர்களின் பணத்தைச் சுருட்டி மடக்கி வாயில் போட்டுக்கொண்டு, அந்தப் பணத்தை நம்பி இன்றளவும் ஜீவனஞ் செய்து வரும் சில தலைவர்கள், பேச்சோடு சரி; அவர்கள் தோழரின் நிலைமையைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்தப் பகிரங்கமாக வேலை செய்யக் காணோம். பெரிய கூட்டங்களில் உரக்கப் பேசுவதோடு அவர்கள் கடமை முடிந்து விட்டதென்று நினைக்கிறார்கள். பேச்சளவில் வீரம் பேசி என்ன பயன்? நிர்மாண வேலையல்லவோ முக்கியம். இதைத் தோழர் தலைவர்கள் கவனிக்கிறார்களா? இல்லை. தோழர்களுக்காக அந்தரங்க சுத்தியாய்ப் பாடு படக்கூடிய சரியான தலைவர்கள் இல்லாததால், தோழர்களின் நிலைமை இவ்வளவு மோசத்துக்கு வந்து விட்டது அவர்கள் நிலைமையை இனிமேல் சமாளிக்க முடியுமாவென்ற சந்தேகங்கூட ஏற்படுகிறது.

மனம் தளரவேண்டாம்

என்றாலும், தோழர்கள் மனப் தளரக்கூடாது. அவர்கள் ஒற்றுமையுடன், மென்மேலும் தீவிரமாக வேலை செய்து வந்தால், தோழர்கள் வெற்றியடைவது நிச்சயம். தோழர்கள் வெற்றிக்கு மூல காரணமாயிருக்க வேண்டியது ஒற்றுமை. இரண்டாவது கட்டுப்பாடு. இந்த இரண்டுமிருந்தால் தோழர்கள் யாரையும் எதிர்த்துப் போராடலாம். ஆனால், சர்க்காரும் தோழருக்கு ஆதரவளிக்க வேண்டும். தோழர்களின் எழுச்சியை நசுக்கக்கூடிய சர்க்காரை அவர்கள் நம்பவே கூடாது. மேலும், தோழர்களின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய எந்த அரசியல் கட்சியிலும் அவர்கள் சேரக்கூடாது. இன்று தோழர்களையோ, கிருஷிகத் தொழிலாளர்களையோ ஆதரித்து வரும் கட்சி எது? காங்கிரஸ் என்று நிச்சயமாகச் சொல்லலாம். வேறு எந்தக்கட்சியையும்விடக் காங்கிரசே தோழர்களின் நன்மையிலும், முன்னேற்றத்திலும் அதிகக் கவனஞ் செலுத்தி வருகிறது. தோழர்களுக்குப் பல வழிகளில் உதவியதும் காங்கிரசே. ஆகவே, தோழர்கள் கண்டிப்பாகக் காங்கிரசை ஆதரிக்கவேண்டும். காங்கிரசை ஆதரித்தால், காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் சர்க்காரும், தோழர்களுக்குப் பக்க பலமாக இருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

காங்கிரஸ் சர்க்கார்

காங்கிரஸ் சர்க்கார் தோழர்களிடம் அதிக அனுதாபம் கொண்டிருக்கிறது. தோழர்கள் அந்த அனுதாபத்தைச் சரியான வழிகளில் அனுகூலப்படுத்திக்கொள்ள வேண்டும். காங்கிரஸ் சர்க்காருக்கு முட்டுக்கட்டை போடுவதாலோ, அல்லது, எதிர்ப்பதாலோ அந்த அனுதாபத்தைப் பெறமுடியாது. காங்கிரஸ் சர்க்கார் தோழர்களுக்கு வஞ்சகம் நினைப்பதாக, அல்லது, தோழர்களின் இயக்கத்தையே ஒடுக்கச் சூழ்ச்சிசெய்வதாக எதிரிகள் கூறலாம். அந்த நயவஞ்சக வார்த்தைகளை நம்பி ஒருபோதும் மோசம் போகவேண்டாமென எச்சரிக்கை செய்கிறேன். இதற்கு முன்னிருந்த வேறு எந்த சர்க்காரையும்விடக் காங்கிரஸ் சர்க்கார், தோழர்களிடம் அனுதாபமும், அக்கரையும் காட்டுவதே நான் கூறுவதற்குப் போதிய சான்றாகும். இதற்குமுன்னிருந்த ஜஸ்டிஸ் கட்சியார், தோழர்களுக்காகவோ, விவசாயிகளுக்காகவோ என்ன சாதித்தார்கள்? ஒன்றுமில்லையென்றே சொல்லலாம் இன்று காங்கிரசைச் எதிர்த்து, தோழர்களிடம் அனுதாபம் கொண்டிருப்பது போல் பாசாங்கு காட்டும், காங்கிரஸ் எதிரிகளும், ஜஸ்டிஸ், சுயமரியாதைக் கட்சியினரும் தோழர்களுக்காக இதுவரையில் என்ன சாதித்திருக்கிறார்கள்; அல்லது, இனிமேல் என்ன சாதிக்கப் போகிறார்கள்? ஒன்றுமில்லை. அவர்களால் எதுவும் சாதிக்கமுடியாது, சாதிக்கவுமாட்டார்கள். காங்கிரசையும், காங்கிரஸ் சர்க்காரையும் எதிர்ப்பதற்காக அவர்கள் தோழர்களையும் அவர்களுடன் சேர்த்துக் கொள்ள சதி செய்கின்றனர். அதைத் தவிர வேறு நோக்கம் கிடையாது. அந்தக் கட்சியினருக்குத் தோழர்களிடம் உண்மையான அபிமானம் கிடையவே கிடையாது. ஆகவே, இந்த ஆஷாட பூதிகளை நம்பி மோசம் போக வேண்டாம். அவர்கள் மாயவலையில் சிக்கிச் சீரழிய வேண்டாமெனத் தோழர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நயவஞ்சகர்கள் நமது எதிரிகள்; நமது ஒற்றுமைக்கு உலை வைக்கும் கூற்றுவர்களென்பது எப்பொழுதும் ஞாபகமிருக்கட்டும். தோழர்களே மீண்டும் எச்சரிக்கை செய்கிறேன்; உஷார்!

யுனைட்டெட் புரடக்ஸன்ஸ் கம்பெனியார்

: மோக்ஷம் :

என்னும் புகழ் பெற்ற படத்தைத் தயாரித்து, மக்களைக் களிப்பூட்டத் தீர்மானித்திருக்கிறார்கள்.

அநேகமாக இப்படம் 1939-ம் வருடம் ஜூலை மாதம் வெளிவரலாம்

ஸ்டுடியோ:
மைசூர் சவுண்ட் ஸ்டுடியோ லிமிடெட்.,
பெங்களூர்.

டைரக்ஷன்:-
அக்தர் நவாஸ்,
உதவி டைரக்டர்:-
எல். பகவன்

ஸ்ரீ. கோவிந்தராம் அவர்களின் மேல்பார்வையில் இப்படம் தயாரிக்கப்படுகிறது

Particulars From:—

UNITED PRODUCTIONS,

13, B. Pycrofts Street,
Rayapettah, MADRAS.

or

1 D. South Parade Road,
(Aboue Empire Talkies)
BANGALORE CANTT.

சிறு கதை

ராஜம் பெற்ற ரமணி

(பூ. அ.)

"அக்கா எவ்வளவு நேரம் நின்றுகொண்டிருப்பது? இன்னமும் வண்டி வரவில்லையே......எப்போ வீட்டுக்குப் போவது?..."

"ரஞ்சி, பஸ் வந்துவிடும்...வருகிற சமயந்தான்; சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடலாம்..."

"நேரஞ் சென்றால்......அம்மா திட்டுவாங்கோ....உங்களுக்குத்தான் நல்ல பேச்சுக் கிடைக்கும்......எனக்கென்ன?..."

"ரஞ்சி, நான் பேச்சு கேட்கவே பிறந்திருக்கிறேன்...இதற்கு முன் கேளாத பேச்சா இனிமேல் கேட்கப் போகிறேன்....பாதகமில்லை....நான் வேணுமென்று இங்கு நிற்கிறேன்...பஸ் வரவில்லையே...என்ன செய்யலாம்?..."

"பஸ் வராவிட்டால் ஒரு குதிரை வண்டியை வைத்துக்கொண்டாவது போவோம்..."

"சரிதான்......அம்மா......என் தலையே போய்விடும்!......கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம்..." என்றாள் ரமணி.

இரு பெண்களும் மறையூர் போஸ்ட்மாஸ்டர் மக்கள். பொன்னூர், பெண்கள் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள். தினந்தோறும் காலையில் பள்ளிக் கூடத்துக்குப் போய்விட்டு, மாலையில் பஸ் ஏறி வீடு திரும்புவது வழக்கம். ஆனால், அன்று அவர்கள் காலதாமதமாக வந்ததால் பஸ் போய்விட்டது. வேறு பஸ் வருமென்று வழியோரத்தில் காத்திருந்தனர். நெடுநேரமாகியும் பஸ் வரவில்லை.

இரு பெண்களும் வீதியோரத்தில் தனிமையாக நின்று கொண்டிருந்தது, அந்த வழியாகச் சென்ற சில சோம்பேறி வாலிபர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. பெண்களிடம் தமாஷ் செய்ய நினைத்தார்கள். "அம்மா எங்கே போகிறீர்கள்? எதற்காக நின்று கொண்டிருக்கிறீர்கள்?...வண்டி கொண்டு வரட்டுமா?" என்று கிண்டலாகச் சில கேள்விகள் கேட்டனர்; தொந்திரவு செய்தனர். இரு பெண்களும், பதில்கூற முடியாமல், திகைத்து நின்றனர். அந்நேரத்தில் அவ் வழியாக ஒரு குதிரை வண்டி வந்தது. வண்டியிலிருந்த வாலிபன், வீதியோரத்தில் நின்று கொண்டிருந்த இரு பெண்களைக் கவனித்தான். அப்பெண்களை சில சோம்பேறிகள் கிண்டல் செய்வதையும் கண்டான்; உடனே வண்டியிலிருந்து இறங்கிப் பெண்களிடம் சென்றான்.

"அம்மா, என் இங்கு தனிமையாக நிற்கிறீர்கள்? உங்கள் அப்பா டவுனுக்கு வந்திருக்கிறாரா?..."

"இல்லை...பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறோம்..." என்றாள் ரமணி.

"இனிமேல் பஸ் கிடையாது... கடைசி பஸ் சுமார் அரைமணி நேரத்துக்கு முன் போய் விட்டது. நீங்கள் மறையூர் போஸ்ட் மாஸ்டர் பெண்கள்தானே?"

"ஆம்...நீங்கள் யார்?" என்றாள் ரஞ்சிதம்.

"எனக்கும் மறையூர்தான்; உங்கள் தெருவிலேயே இருக்கிறேன்... உங்கள் அப்பாவை எனக்குத் தெரியும்..."

"உங்கள் பெயர்?..."

"என் பெயர் ராஜம்..."

"நீங்கள் இங்கு எதற்காக வந்திருக்கிறீர்கள்?..."

"எனக்கு இங்கு வியாபாரம் உண்டு...வியாபாரத்தைப் பார்த்துவிட்டு...ஊருக்குத் திரும்பிப் போகிறேன்...இதோ என் வண்டி...அதில் நீங்கள் வருவதாயிருந்தால், உங்கள் வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுகிறேன்" என்றான் ராஜம்.

ரமணி சிறிது தயங்கினாள்; ரஞ்சிதம் அவசரப்பட்டாள். "அக்கா நமக்குத் துணை; போகலாம் வா" என்று கட்டாயப்படுத்தினாள். ரமணியும் ஒப்புக்கொண்டாள். இரு பெண்களுமாக வண்டியில் ஏறினர். வழி நெடுக ரஞ்சிதம் சும்மா இருக்கவில்லை அவள் வாயாடி; ரமணி படிப்பு முடிந்துவிட்டதாகவும், அவளும் இனிமேல் படிக்கவரப் போவதில்லையென்றும் ராஜனிடம் சொன்னாள். ராஜம் ஒன்றும் பேசவில்லை; ரஞ்சிதம் பேசியது அவனுக்குத் தமாஷாக இருந்தது. சிரித்துக்கொண்டேயிருந்தான். சுமார் ஒரு மணி நேரத்தில் வண்டி மறையூர் போய்ச் சேர்ந்தது; அந்த இரு பெண்களையும் வீட்டில் கொண்டுபோய் விடுவதாக ராஜம் எவ்வளவோ சொல்லியும், ரமணி கேட்கவில்லை. வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் வண்டியை நிறுத்தி, அவர்கள் இருவரையும் இறக்கிவிடும்படி ரமணி தயவாய்க் கேட்டுக்கொண்டாள். ரமணியின் விருப்பத்தை மறுக்க ராஜம் துணியவில்லை. ஆகவே, அவர்களை இறக்கி விட்டுவிட்டு, அவன் வீட்டிற்குச் சென்றான்.

ரமணியும், ரஞ்சிதமும் நேரஞ் சென்று வீட்டிற்குத் திரும்பியது அவர்கள் தாயாருக்குப் பிடிக்கவில்லை. ரஞ்சிதம் கூறியது போல், ரமணிக்கு நல்ல வசை புராணம் கிடைத்தது. ரமணிக்கு மட்டும் ஏன் வசை புராணம் கிடைத்தது, ரஞ்சிதத்துக்கு ஏன் கிடைக்கவில்லையென்று சந்தேகப்படவேண்டாம். ரமணி முதல் தாரத்தின் மகள். ரமணிக்குச் சுமார் 3 வயதிருக்கும்போதே அவள் தாயார் காலஞ் சென்றாள். போஸ்ட் மாஸ்டர் இரண்டாந் தாரம் கலியாணஞ் செய்துகொண்டார். இரண்டாவது தாரத்துக்குப் பிறந்தவள் ரஞ்சிதம்.

சுமார் ஆறு மாதங்கள் கடந்தன. ரமணிக்கும், ரஞ்சிதத்துக்கும் கலியாணஞ் செய்துவைக்கப் போஸ்ட் மாஸ்டர் நினைத்தார். அவர் மனைவிக்கு ரமணி கலியாணத்தைப் பற்றிச் சிரத்தை இல்லை; ரஞ்சிதத்துக்கு நல்ல வரனைத்தேடிச் சீக்கிரம் அவள் கண்ணுள்ளபோதே கலியாணஞ்செய்து வைத்துவிடவேண்டுமெனப் புருஷனை வற்புறுத்தினாள். அந்த ஊரில், அதே தெருவில் வசித்து வந்த ராஜத்தைக் கலியாணஞ் செய்துவைத்தால் நலமாயிருக்குமென்று யோசனை கூறினாள்.

ராஜம் மறையூரிலுள்ள தனவந்தர்களில் ஒருவன்; தாய்க்கு ஒரே புத்திரன்; அவன் தந்தை இளமையிலேயே காலஞ்சென்றார். பெரிய வர்த்தகர்; தந்தைக்குப்பின் ராஜமே அந்த வியாபாரத்தைப் பார்த்து வந்தான். சிறந்த குணங்கள் யாவும் ஒருங்கே நிறைந்தவன்.

இவன்மீது ரஞ்சிதத்தின் தாய்க்குக் குறி. அவள் அடிக்கடி போஸ்ட் மாஸ்டரை தூண்டிக் கொண்டேயிருந்ததால், அதை அவரால் சகிக்க முடியவில்லை. பொறுமைக்கும் ஒரு அளவு இல்லையா? போஸ்ட் மாஸ்டர் பொறுமை இழந்து விட்டார். "ரமணி மூத்தவள்... அவளுக்குக் கலியாணஞ்செய்தபின்னால்தான் ரஞ்சிதத்துக்கு கலியாணஞ்செய்வேன்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். பாவம்! போஸ்ட் மாஸ்டர் அவர் மனைவிமீது கோபப்பட்டதால், அது ரமணி தலைமீதுவந்து விடிந்தது அன்றிரவு ரமணிக்கு அவள் மாற்றாந் தாயிடமிருந்து நல்ல "டோஸ்" கிடைத்தது. தலையில் இரண்டு மூன்று குட்டு பலமாக விழுந்தன. ரமணி பட்டினி கிடந்தது தான் அவள் கண்ட பலன்! அன்றிரவு அவள் அழுத கண்ணீர் கடவுள் ஒருவரே அறிவார். "தெய்வமே! தாயற்ற இந்தப் பாவியை ஏன்படைத்தாய்? என்னையும் என் தாயுடன் அழைத்துக் கொள்ளலாகாதா? உன் கருணை என்றுதான் என்மீது இரங்குமோ தெரியவில்லை. எல்லாம் உன் கிருபை" என்று அவள் தலைவிதியை நொந்து அழுதாள்.

சில தினங்களுக்குப்பின் ரஞ்சிதத்தின் தாயே, அவள் மகள் ரஞ்சிதத்துக்கு வரன் தேடும் வேலையில் ஈடுபட்டாள். ராஜத்தின் தாயிடஞ் சென்று, பொழுது போக்காகப் பேசிக்கொண்டிருந்தபின், மெதுவாக ராஜத்தின் கலியாணப் பேச்சை ஆரம்பித்தாள். ரஞ்சிதத்தைக் கலியாணஞ் செய்வதாயிருந்தால், அவள் நகைகள் யாவையும், சுமார் 5000 ரூபாய் வரையில் வரதட்சணை கொடுப்பதாகக் கூறினாள்.

"சரிதான், உன் மகள் மூத்தவளுக்கு வரன் யார்?" என்றாள் ராஜம் தாய்.

"அதை அவள் அப்பாவே பார்த்து வைத்திருக்கிறார்"

"அப்படியா? சரி பார்க்கலாம்" என்று முடிவு கூறாமல் அனுப்பி வைத்து விட்டாள் ராஜம் தாய்.

அன்றிரவு ராஜம் பொன்னூரிலிருந்து திரும்பினான். தாய் மகனை அன்போடு உபசரித்தபின், சாவதானமாக அவன் கலியாணப் பேச்சை ஆரம்பித்தாள்.

"எனக்குக் கலியாணமா? பெண் யாரோ?..."

"அது உன் இஷ்டம்...உனக்கு எந்தப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொள்ள இஷ்டம்?"

"நான் இன்னமும் பெண் பார்க்கவில்லை......அந்த சிந்தனையுமில்லை......இப்போ வயதாகிவிட்டதா?...நான் என்ன கிழவனா?" என்று கூறிச் சிரித்தான் ராஜம்.

"அப்பா, ராஜம்...நீ இளைஞன் தான்...ஆனால்...என் வயதைக் கவனித்தாயா? இந்தக் கண்ணுள்ள போது..."

"அம்மா பயப்படாதே...நீங்கள் சாவதற்குள் கலியாணஞ் செய்துவிடுவேன்...நீங்கள் கவலைப்பட வேண்டாம்..."

"போஸ்ட் மாஸ்டர் மகள்..."

"யார்?......போஸ்ட் மாஸ்டர் மகளா? ஆமாம்...அதற்கென்ன?"

"அவர் மகள் இளையவள் ரஞ்சிதத்தைக் கலியாணம் பேசி முடிக்கலாமா?..."

"ரஞ்சிதமா?.......அவருக்கு இரண்டு பெண்களல்லவா?"

"ஆமாம், மூத்தவளுக்கு வேறு யாரைபோ அவள் அப்பா பேசி முடித்திருக்கிறாராம்..."

"யாருக்கு?...ரமணிக்கா?...வரன் யார்?...எப்போ?..."

"அது எனக்குத் தெரியாது... அவள் அம்மா இங்கு வந்திருந்தாள். அந்தக் கதையெல்லாம் சொன்னாள்..."

"ரமணி, போஸ்ட் மாஸ்டருக்கு மூத்த தாரத்தின் மகளல்லவா?"

"ஆமாம், அவள் தாய் ரொம்ப நல்லவள்..."

"பாவம்...! அந்தப் பெண் ரமணி ரொம்ப கஷ்டப்பட்ட பெண்... ஆனால், நல்லவள்..."

"ஆனால், பணம் கிடையாது, அவள் அப்பாவிடம் அவ்வளவு பணமில்லை; தாய் நகைகளும் கிடையாது. இளையவளுக்கு அவள் அம்மா நகைகள் ஏராளமாக உண்டு"

"அம்மா...நம்மிடம் இவ்வளவு பணமிருந்தும், உங்களுக்குப் பண ஆசை விடவில்லையே? பணத்துக்காகவா பெண் பார்க்கிறீர்கள்?... ரொம்ப சரி......அப்படியானால் ஏராளமாக 10,000, 20,000 ரூபாய் கொண்டு வரக் கூடிய பெண் பார்க்கிறது தானே? அவ்வளவு பணம் கொண்டு வரக் கூடிய பெண் கிடைக்கும் வரையில்...நான் கலியாணஞ் செய்து கொள்ள மாட்டேன்... ஏராளமாகப் பணம் கிடைத்தால் உங்களுக்கும் திருப்தியாக இருக்கும்..."

"இல்லையப்பா, பணத்துக்காக அல்ல...ரஞ்சிதம் நல்ல அழகுள்ளவள்..."

"ரமணியை விடவா?..."

"ஓகோ, நீ இரண்டு பெண்களையும் பார்த்திருக்கிறாயா?"

"அடிக்கடி பார்த்திருக்கிறேன்... பேசியுமிருக்கிறேன்..."

(அடுத்த பக்கம் பார்க்க)

ராஜம் பெற்ற ரமணி

(முன் பக்கத் தொடர்ச்சி)

"எங்கே?...எப்பொழுது?..."

"அந்தப் பெண்கள் படித்துக் கொண்டிருந்த காலத்தில்..."

"சரி போகட்டும்...உன் அபிப்பிராயம் என்ன?..."

"இப்போ கலியாணம் வேண்டாம்......பொறுத்துப் பார்த்துக் கொள்ளலாம்......" என்று கூறிவிட்டு ராஜம் எழுந்து படுக்கைக்குச் சென்றான். அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ரமணிக்கு அவள் தந்தை வேறொரு வரனைத் தேடியிருக்கிறார் என்று கேட்டது முதல், அவன் உயிரே பிரிந்தது போலிருந்தது. உலகம் அவனுக்குத் திடீரென வெறுத்துவிட்டது. இனிமேல் உயிர் வாழ்ந்த என்ன பயன் என்று நினைத்தான். அவன் ரமணியைப் பல முறை கண்டதுண்டு. ஆனால், பேசியது கிடையாது. ஒருநாள் அவன் வண்டியில் ரமணியையும, ரஞ்சிதத்தையும்ஏற்றிக்கொண்டுவந்தான். அன்றுதான் ரமணியுடன் சில வார்த்தைகள் பேசினான். ஆனால், அன்று முதல் ரமணி, ராஜத்தின் இருதயத்துக்குள் புகுந்து கொண்டாள். ராஜத்தின் இருதயத்தைக் கவர்ந்து, பூர்ண வளர்ச்சியடைந்தாள். அன்றிரவு அவள், ராஜத்தின் இருதயத்திலிருந்து வெடித்துக் காதல் ரூபமாக வெளிவந்தாள். ராஜத்துக்கு அவள் காதலை மறக்க முடியவில்லை; தூக்கமோ பிடிக்கவில்லை. படுக்கையிலிருந்து எழுந்தான்; வீட்டை விட்டுப் புறப்பட்டான். நிலவு பால் போல் காய்ந்து கொண்டிருந்தது. அவனையும் அறியாமலேயே அத்தெருக் கோடி மட்டும் நடந்தான். போஸ்ட் மாஸ்டர் வீட்டினருகில் வந்ததும், அவன் கால்கள் சட்டெனப் "பிரேக்" போட்டதுபோல் நின்றன. ஒரு அடிகூடப் பெயரவில்லை; அங்கு நின்றபடியே யோசித்தான். மெதுவாக போஸ்ட் மாஸ்டர் வீட்டுப் பக்கஞ் சென்றான்; ஒரு ஜன்னல் திறந்திருந்தது. அந்த ஜன்னலின் அருகில் நெருங்கி அறையைக் கூர்ந்து கவனித்தான். சந்திர வெளிச்சத்தில் அங்கு ஒரு பெண் உட்கார்ந்தபடியே, தலையில் கை வைத்துக்கொண்டு பெரு மூச்சு விடுவதைப் பார்த்தான்; அறையிலிருந்த பெண் தற்செயலாகத் தலையை நிமிர்த்தினாள். ஜன்னல் அருகில்நின்றவாலிபனை அவள் கவனிக்கவில்லை. ஆனால், ராஜம் அப்பெண் யாரென்பதை அறிந்து கொண்டான். மெதுவாக "ரமணி" என்றான். ரமணி திடுக்கிட்டாள். பயந்து ஓ வென்றலறியிருப்பாள்; ஆனால், நிலவு வெளிச்சத்தில் வெளியே நின்ற வாலிபன் யாரென்பதை அறிந்து கொண்டாள். எழுந்து ஜன்னலருகில் வந்தாள்.

"நீங்கள்...ஏன்?...இக்கோலத்தில் இங்கு வந்தீர்கள்?...என்ன அவசரம்?..."

"ரமணி......தூக்கம் பிடிக்கவில்லை...உன்னைக் கண்டு ஒரு வார்த்தை கேட்க, வந்தேன்..."

"என்னைக் கண்டு...ஒரு வார்த்தையா?...என்ன வார்த்தை?...என்னிடம்...என்னிடம் உங்களுக்கு... இந்த ஏழையிடம்..."

"ஆம், உன்னிடந்தான்...உனக்குக் கலியாணமாம்?..."

"எனக்குக் கலியாணமா?...யார் சொன்னது?.......சருமாந்திரந்தான்!..."

"இல்லை....உன்....அம்மா....எங்கம்மாவிடம் சொல்லி...உன் தங்கைக்கு என்னைக் கலியாணஞ் செய்ய யோசனை போட்டிருக்கிறார்கள்..."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்! ரஞ்சிதம்...நல்லவள்... அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளுங்கள்...சுகமே இருப்பீர்கள்... இங்கு நிற்கவேண்டாம்......போய் வாருங்கள்...யாரும் கண்டால்..."

"நான் போகவில்லை...உன்னிடம் ஒரு வார்த்தை...நான்...உன்னையே மணக்கத் தீர்மானித்துவிட்டேன்... உன் சம்மதம் வேண்டும்...ஒரு வார்த்தை கூறினால் போதும்... ரமணி...ரமணி" என்று ராஜம் கெஞ்சினான். அவன் அன்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஜன்னல் அருகே நின்ற ரமணியின் கரங்களை ஆவலுடன் பற்றினான் அவன் தொட்டதுதான் தாமதம், ரமணி உள்ளத்தில் ஆழ்ந்துகிடந்த அன்பு தீப்பற்றியதுபோல் அவள் தேகமெங்கும் பரவியது. அப்படியே சிலைபோல் நின்றாள். சுவரோடு சாய்ந்தாள். ஒரு நிமிஷம் ஒன்றுமே பேசவில்லை. அவள் அறிவு சிதறியது; சிதறிய அறிவை சீக்கிரத்தில் கட்டுப்படுத்தினாள். "நீங்கள் போய்விடுங்கள். உங்களைக் கும்பிட்டேன்...நான்...நான் ஏழை...உங்களை அடைய நான் கனவிலும் நினைக்க முடியாது... ஆனால்...ஆனால்...அடுத்த ஜென்மத்தில் உங்களை அடைய ஆண்டவன் அருள் செய்யட்டும்...போய்வாருங்கள்..." என்று கண்ணீர்வடியக் கூறினாள் ராஜன் கரங்களை அன்போடு பற்றி, அவள் கண்களில் ஒத்திக் கொண்டாள். வேண்டா விருப்பாக அவன் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு, அவள் படுக்கையில் போய்ச் சாய்ந்தாள்; மெய் மறந்தாள்

ராஜம் திடுக்கிட்டுப் போனான். இரண்டொரு முறை அவள் பெயர் சொல்லி அழைத்தான்; பதில் வரவில்லை. மனமுடைந்து வீடு திரும்பினான்.

சில மாதங்கள் கழிந்தன. ராஜம் தாய், ரஞ்சிதத்தையே அவனுக்குப் பேசித் தீர்மானித்தாள். ராஜம் எவ்வளவோ மறுத்தும் அவன் தாய் கேட்கவில்லை. ராஜம் ஜீவியத்தை வெறுத்தான்; என்றாலும், என்ன செய்வது? அவன் தாயின் வார்த்தையை மறுக்கத் தைரியமில்லை. கலியாண தினமும் நெருங்கியது அவன் மனதில் சந்தோஷமே இல்லை. ஒரு நாள் அவன் காரியாலயத்தில் ஆழ்ந்த சிந்தனையுடனிருந்தான். அந்நேரத்தில் அவனுடன் படித்த பழைய நண்பன் அரசு வந்தான். இரு நண்பரும் பழைய கதைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ராஜம் என்னதான் சந்தோஷமாகப் பேசினாலும், அவன் முகத்தில் சந்தோஷமில்லை. அதை அரசு கண்டான்.

"ராஜம் என்ன விசேஷம்? முகத்தில் செழிப்பில்லையே?"

"செழிப்பில்லாமலென்ன?....கலியாணக் கவலைதான்!..."

"கலியாணக் கவலையா?...களிப்பு அல்லவா இருக்கவேண்டும்?..."

"எனக்குக் கவலை!"

"அது ஏன்?..."

"என் விதிவசம்!..."

"ராஜம் உள்ளதைக் கூறு; நான் உன் பழைய நண்பனல்லவா?"

"மெய்தான்; எனக்குக் கலியாணம்"

"எப்பொழுது?"

"அடுத்த மாதம்..."

"பெண் யார்?..."

"எங்கள் ஊர் போஸ்ட் மாஸ்டர் மகள்...அவருக்கு மூத்த பெண் உண்டு..."

"போஸ்ட் மாஸ்டரா?...அவர் பெயர்"

"தனசாமி என்று சொல்லுவார்கள்?..."

"தனசாமியா?..."

"ஆம்; அவருக்கு இரு தாரங்கள்; மூத்த தாரத்தினிடமாக ஒரு மகள் உண்டு..."

"அவள் பெயர்?"

"ரமணி; அவளுக்குக் கலியாணமாகவில்லை. இரண்டாந்தாரப் பெண் ரஞ்சிதத்தையே கலியாணஞ் செய்யும்படி என் தாய் வற்புறுத்துகிறாள்..."

"உனக்கு ஏன் இஷ்டமில்லை?"

"மூத்த பெண் ரமணி...நல்லவள்...ஏழை...அவள் தாய் தகப்பன் அவளைக் கவனிப்பதில்லை..."

"உனக்கு அவளை மணக்க இஷ்டமோ?...உனக்குக் கலியாணம் எப்பொழுது?..."

"அடுத்த மாதம் 15ந் தேதி"

"இன்னம் 20 தினங்களிருக்கின்றனவா?...சரி; நான் உன் கலியாணத்துக்கு வரலாமா?..."

"அதற்கு என்ன ஆட்சேபனை? கட்டாயம் வரவேண்டும்..."

"நான் கட்டாயம் வருவேன்...கவலைப்படாதே!...சந்தோஷமாக இரு..." எல்லாம் விதிப்படி நடக்கும். நமது முயற்சியால் என்னதான் நடக்கிறது?...சரி, போய்வருகிறேன்..." என்று விடை பெற்றுக்கொண்டு அரசு போய்விட்டான். அரசுக்கு ஊர் குருபுரம். அவன் வர்த்தக சம்பந்தமாகவே பொன்னூருக்கு வந்தான். அவனுடைய பழைய நண்பனைச் சந்தித்தான். அரசு வியாபாரத்தில் தேர்ந்தவன். வியாபாரத்தில் ஏராளமாகச் சம்பாதித்தவன்.

ராஜத்தின் கலியாணம் நெருங்கிவிட்டது. பொழுது விடிய 4 மணிக்கு முகூர்த்தம். ரஞ்சிதம் மணக் கோலம் பூண்டு விட்டாள். மாப்பிள்ளை ராஜமும் தயார். இந்நேரத்தில் அரசு வந்தான். ராஜத்தை அவசரமாக வெளியில் அழைத்துச் சென்றான். இருவருமாக, நகரின் வடக்கேயுள்ள ஒரு தோட்டத்துக்கு வேகமாகச் சென்றனர். அங்குள்ள ஒரு கிணற்றின் ஓரத்தில் துயரமே உருவாக நின்றாள் ரமணி. ரமணியைக் கண்டதும், ராஜம் உடல் பதறியது. அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "ரமணி! ரமணி!! இதென்ன கோலம்?...நீ...இங்கு..." என்று குரல் நடுங்கக் கேட்டான். ரமணி பதில் பேசவில்லை. அரசு பேசினான்.

"ராஜம்...நான்...உன் பழைய நண்பன், ஆனால், இப்பொழுது யார் தெரியுமா? ரமணியின் தாய் மாமன்...நீ அன்று கூறிய பின்தான் ரமணி எங்கிருக்கிறாளென்பதை அறிந்தேன். ரமணியை உனக்கே விவாகஞ் செய்து வைக்கத் தீர்மானித்தேன். நேற்றிரவு சுமார் 12 மணிக்கு இங்கு வந்தேன். ரமணியைத் தேடினேன்...அவளை வீட்டில் காணவில்லை. உடனே அங்குமிங்கும் தேடி ஓடினேன்...இந்தக் கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ள ரமணி வந்ததைத் தெய்வாதீனமாகக் கண்டு பிடித்தேன். அவள் உயிரைப் பாதுகாத்தேன்..."

"ரமணி! ..இப்படியும் செய்யலாமா?...இது கடவுளுக்கு ஏற்குமா?..."

"உங்களைக் கடைசி முறையாகப் பார்க்க விரும்பினேன்.......பார்த்தேன்...என் மனம் சாந்தியடைந்தது...போய்வாருங்கள்...என் தங்கை ரஞ்சிதத்தின் மணத்தை நிறைவேற்றி வையுங்கள்...அவளுக்குத் துரோகஞ் செய்யாதீர்கள்...நான் வருகிறேன்"...

"எங்கே போகிறாய்?"

"என் மாமாவுடன்..."

"என்ன?...அரசு இதென்ன? இதற்காகத்தானா என்னை அழைத்து வந்தாய்?..."

"இல்லை....ரமணி....என்னுடன் அல்ல...உன் அன்பன் ராஜத்துடன் நீ போகவேண்டும்"

"எங்கே?..."

"ராஜத்தின் வீட்டுக்கு..."

"என் தங்கை ரஞ்சிதத்தின் கதி என்ன ஆவது?...அவளுக்குக் கேவலம் வர ஒருபோதும் சகிக்கமாட்டேன்"

"அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்."

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அப்புறம் பார்த்துக்கொள்" என்று கூறிவிட்டு, அரசு வேகமாக ஓடினான். அவன் அத்தான் போஸ்ட் மாஸ்டரைக் கண்டு பேசினான். அதே ஆடையுடன் மணப் பந்தலில் போய் உட்கார்ந்தான். இன்னம் சிறிது நேரத்தில் அதே மணப் பந்தலுக்கு ராஜம், ரமணியுடன் வந்து உட்கார்ந்தான். ரமணிக்கும், ராஜத்துக்கும், மணம் நிறைவேறியது. அடுத்தாற்போல் ரஞ்சிதத்தை அரசு மணந்துகொண்டான். ரமணியின் கவலை தீர்ந்தது. அவள் கண்ணீரைத் துடைத்து, அவள் கவலையைப் போக்க அவள் மாமன் வந்தான். ரமணியின் பொறுமையும், பிரார்த்தனையும், உண்மை அன்பும் வெற்றி பெற்றது.

MARK TRADE Registered

இழுப்பு இருமலுக்கு
ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஔஷதம்.
எங்கும் கிடைக்கும்.
ஜி. எஸ். ஸ்டியர்ஸ் கம்பெனி'
21, எர்ரபாலு செட்டி, வீதி, மதராஸ்

சொற்பப் பிரதிகளே இருக்கின்றன உடனே முந்துங்கள்

"தமிழ் மணி" ஆசிரியர் எழுதிய

சொக்கநாதன் அல்லது ரங்கன் திருவிளையாடல்

காதல், சோகம், ஹாஸ்யம், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த முதல்தரமான துப்பறியும் நாவல்

●

விலை 12 அணா.

முன் பணமாக அனுப்பவும். வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.
இந்தியாவுக்கு தபால் செலவு உள்பட ரூ. 1-0-0
பர்மா, மலாய் முதலிய அந்நிய நாடுகளுக்கு தபால் செலவு உள்பட ரூ. 1-2-0

எல்லா "தமிழ் மணி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மானேஜர்:- "தமிழ் மணி" ஜி. டி. மதராஸ்.

மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும்

மோட்டார்கார் ஓட்டவும், மோட்டார்கார் பாகங்களை கழற்றவும், பூட்டவும் ரிப்பேர் முதலான வேலைகள் தெரிந்துகொள்ளவும் விரும்புகிறவர்கள் எங்களிடமுள்ள "மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும்" என்ற நூலை வாங்கிப் படித்து பயன் பெறுவார்களாக. சித்திரங்களுடன் வெளிவந்திருக்கிறது. இப் புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் அதிக நன்மையடைவார்கள். சொற்ப அநுபோகமுள்ள மோட்டார்கார் டிரைவர்களும் இப் புத்தகத்தை படிப்பதினால் தங்களிடத்திலுள்ள குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளலாம். வெகு அழகாக தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது.

புத்தகம் 1-ச்கு விலை ரூ. 2. தபால் செலவு அ. 6. முன்பணமாக ரூ. 2-6-0 அனுப்பவும்.

மானேஜர், "தமிழ் மணி" சென்னை.

இந்தியா
தனிப்பிரதி
விலை ஒரு அணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 4-0-0.
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 7
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா,
தனிப்பிரதி 0-1-6.
வருட சந்தா ரூ. 5.
மலாய்
தனிப்பிரதி சதம் 10
வருட சந்தா ரூ. 7.
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

ஏழை என்றும் அடிமை யென்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

Edited, Printed and Published by, P. ALBIN at the "TAMIL MANI" Press. 21, Sembudoss St., G. T. Madras.